
# மேல் அறை

ஜுலை
ஓகஸ்ட்
2006

தினசரித் தியான வழிகாட்டி



*Building Communities of Peace for All* by
Hanna Varghese
(Malaysia, contemporary)
© Hanna Varghese.

மேலறை என்ற தலைப்பில் வெளியாகும் இத் தினசரி தியான வழிகாட்டி உலகில் 106 நாடுகளிலுள்ள 3 மில்லியன் மக்களால் வாசிக்கப்படுகிறது.

- இது ஓர் சிறந்த தினசரி தியான வழிகாட்டியாகும்
- கடவுளுடைய வார்த்தையைத் தினமும் தியானம் செய்து ஆன்மிக பெலனையடைய வழிகாட்டுகிறது
- உலகெங்குமுள்ள **மேலறை வீடு** வாசகர்களை தினமும் இவ்வாசிப்பின் மூலம் ஐக்கியத்துக்குள் ஒன்றிணைய சந்தர்ப்பமளிக்கிறது

மேலறை வீடு ஊழியத்தில் ஒரு பங்காளியாகச் சேருவதற்கு கீழே தரப்பட்டுள்ள தலைப்புக்கள் எவற்றேனும் ஒன்று அல்லது ஒன்றிற்கு மேல் பங்களிப்புச் செய்யலாம்.

- இப்புத்தகத்தில் இணைக்கப்பட்டுள்ள அங்கத்தவர் படிவத்தைப் பூர்த்தி செய்து, எமக்கு அனுப்பி வைப்பதன் மூலம் மேலறை வீடு குடும்ப ஐக்கியத்தில் ஒன்று சேர முடியும். (ஆயினும் இப்புத்தகம் இலவசமாக அனுப்பி வைக்கப்பட மாட்டாது)
- வருடாந்த சந்தாப் பணத்தைச் செலுத்தி பற்றுச்சீட்டைப் பெற்றுக் கொள்ளவும். சந்தாக்காரர், மற்றும் அனுசரணையாளர் படிவங்களைப் பூர்த்தி செய்து காசோலை / காசுக்கட்டளையை தபாலில் எமக்கு அனுப்பி வைக்கவும்.
- உங்கள் நண்பர்களையும் "மேலறை வீடு" பிரதியை வாங்கி வாசிக்க ஊக்கப்படுத்தி, அவர்களையும் சந்தா செலுத்துவதின் மூலம் அங்கத்தவர்களாகும் வாய்ப்பை ஏற்படுத்துங்கள்.
- சந்தாப் பணம் கட்ட முடியாதவர்களின் சார்பாக நீங்களே அதைச் செலுத்தி உங்கள் நண்பர்களையும் ஆண்டவரைக் குறித்து அறிந்து கொள்ளவும். அவரின் அன்பை அனுபவிக்கவும் உதவி செய்யுங்கள்.

மேல் அறை வீடு என்னும் இச் சிறிய தியான வழிகாட்டி, அமெரிக்க ஐக்கிய ராச்சியத்திலுள்ள, மேலறை வீடு ஊழியங்களின் அனுமதியுடன் இலங்கையில் வெளியிடப்பட்டு விநியோகம் செய்யப்படுகிறது.

**கிறிஸ்தவ இலக்கிய சங்கம் (சி.எல்.எஸ்)**
**இல. 60, காலி வீதி வெள்ளவத்தை, கொழும்பு -06.**
**தொலைபேசி : 2589801**

# மேல் அறை

## தினசரித் தியான வழிகாட்டி

ஸ்டீபன் டி. பிறையின்ற்
பதிப்பாசிரியரும் வெளியீட்டாளரும்

44 மொழிகளில் 72 வெளியீடுகளில்
106 நாடுகளைச் சேர்ந்த கிறிஸ்தவர்களால்
பாவிக்கப்படும் கைந்நூல்

அனைத்து மத நிறுவனங்களுக்கும்,
சர்வதேச நாடுகளுக்கும், சகல இனங்களுக்கும்
பொருத்தமான முறையில் தயாரிக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீ லங்கா வெளியீட்டாளர்
கிறிஸ்தவ இலக்கிய சங்கம்(CLS)
இல. 60, காலி வீதி, கொழும்பு 06.
தொலைபேசி இல. 011258901

*அட்டைப்பட விளக்கம்*

## சகலருக்குமான சமுதாய சமாதானத்தை உருவாக்குதல்

ஓவியா: ஹன்னா-செரியன் வர்கீஸ்
(மலேசியா, சமகாலத்தவர்)

விளக்கம்: மோனா பகாசாஒ - கேவ்

கைகளைப் பிடித்துக் கொள்ளல். வாழ்க்கையின் எல்லா நிலைகளிலும், இந்தச் சிறுகாரியத்தில் நாம் பல பாடங்களைக் கற்றுக் கொள்கிறோம். நாம் சிறு பராயத்தவர்களாயிருக்கும்போது, நம்மை ஆபத்துக்களிலிருந்து பாதுகாப்பதற்காக நமது பெற்றோர் நமது கைகளைப் பிடித்துக் கொள்வர். இங்கே பாதுகாப்பைப் பற்றிய முதற் பாடத்தை நாம் கற்றுக் கொள்கிறோம். வாலிபப் பராயத்தில், கையைப் பிடிப்பது மிக ஆறுதலாகவே நடைபெறுகிறது. வாழ்க்கையின் நீண்ட பயணத்திற்கு ஆயத்தமாக ஆணும் பெண்ணும் கைகளைப் பிடித்துக் கொள்வர். இங்கு அன்பின் பாடத்தைக் கற்றுக் கொள்கிறோம். வாழ்க்கையில் துன்பங்கள், தொல்லைகள் ஏற்படும் வேளைகளில் இனத்தவர்களோ, நண்பர்களோ, அயலவர்களோ நமது கைகளைப் பிடித்து, மௌனமாக ஆறுதல் கூறுவர். மற்றவர்களில் கரிசனை கொள்ள வேண்டும் என்ற பாடத்தைப் படிக்கிறோம். முதிர் வயதிலே எல்லாவற்றிற்கும் இன்னொருவருடைய உதவி தேவைப்படுகிறது. அங்கே நம்பிக்கை என்ற பாடத்தைப் படிக்கிறோம். கைகளைப் பிடிப்பது, ஆதரவு கொடுப்பது என்ற பாடத்தைத் திரும்பவும் திரும்பவும் எமக்குக் கற்பிக்கிறது. உலகெங்கும் சமாதான முயற்சிகளில் ஈடுபடுபவர்கள், கைகளைக் கோர்த்துப்பிடித்தலை, சமாதானத்தின் ஒரு முக்கிய அடையாளமாகக் கொள்கின்றனர். ஒருவர் மற்றவருடைய கைகளைப் பிடித்துக் கொண்டால் அங்கு சண்டைக்கு இடமில்லை என்ற வாக்கியத்தில் மிகவும் உண்மையுள்ளது.

இந்தப்படம் மனித சமுதாயத்தின் இளமைப்பருவத்தைக் குறிக்கிறது. சாதாரண கோடுகளைக் கொண்ட குகை ஓவியம் போலிருந்தாலும் சிறுவர்களும் வளர்ந்தோர்களும் ஆடும் நடனமாயிருக்கிறது. பாதுகாப்பு, அன்பு, ஆதரவு ஆகியவை வெளிப்படுத்தப்படுகிறது. வேதாகமத்தில், நாம் எல்லாரும் கடவுளுடைய கைகளில் வரையப்பட்டிருக்கிறோம் என்று கூறப்பட்டுள்ளது. (யோபு 12:10, சங் 31:15 ஏசா 49:16) நாங்கள் மற்றவர்களுடைய கைகளைப்பிடித்து சமுதாயத்தில் சமாதானத்தை ஏற்படுத்துவோம்.

# ஆசிரியர் உரை
# ''உமது இராஜ்யம் வருவதாக...''

சமீபத்தில், சில வாலிபர்களிடம், கடவுள் இவ்வவுகில் இருந்தால் எப்படி இருப்பார் என்பதைக் கற்பனை செய்து ஒரு படம் வரையும்படி கேட்டிருந்தேன். ஆச்சரியப்படத்தக்க பல படங்கள் வரையப்பட்டிருந்தன. கடவுள் உலகம் முழுவதையும் பார்ப்பவராக, கடவுளின் கைகள் உலகத்தை அணைத்துப்பிடித்திருப்பது போல, இப்படிப்பல. என்னை மிகவும் கவர்ந்த படம். பசுமையான ஒரு உலகத்தைச் சுற்றி மக்கள் கைகோர்த்துக் கொண்டு நிற்பது போல் வரையப்பட்டிருந்ததுவே. அதை வரைந்த பெண் அதற்கு அளித்த விளக்கமாவது, கடவுள் இவ்வுலகத்தில் இருந்தால் எல்லாரும் இப்படி மகிழ்ச்சியாயிருப்பார்கள் என்றாள். இயேசுவும் இப்படத்தை விரும்பியிருப்பார். என்று எனக்குள் நினைத்துக் கொண்டேன்.

இயேசுவும் தனது வாழ்வின் மூலமும் ஊழியத்தின் மூலமும் உலகில் ஒரு படம் வரைந்திருக்கிறார். அதுதான், ''கடவுளின் இராஜ்யம்'' கடவுளின் அன்பு நம்மத்தியில் வாசம் பண்ண வேண்டு மென்று இயேசு விரும்பினார். ''இவ்வுலகை ஆட்சி செய்பவர்களுக்குப் பதிலாகக் கடவுள் ஆட்சி செய்தால் எப்படி இருக்கும்? என்று மார்கள் போக் என்பவர் தனது நூலில் ஒரு கேள்வியைக் கேட்டிருக்கிறார்.

இயேசுவும் சீடர்களும் கடவுளுடைய இராஜ்யம் மிக அழகான ஒன்றாகக் காணப்பட்டது. நாமும் அது நடைபெறக் கூடியதென்று நிச்சயமாக நம்புகிறோம். அதற்காகக் கடவுள் நம்முடன் நாளாந்தம் ஏற்படுத்தும் தொடர்புகளின் மூலம் கிரியை செய்து கொண்டிருக்கிறார். பரிசுத்தாவியானவர் நம்மை ஒன்றிணைத்து, கிறிஸ்துவைப் போலாக்கி கடவுளின் அன்பில் நம்மை வாழ வைப்பதற்காக ஒவ்வொரு நிமிடமும் கிரியை செய்து கொண்டிருக்கிறார்.

நீங்கள் வாழும் உலகை கடவுள் அரசாட்சி செய்தால் எப்படி இருக்கும்? கிறிஸ்து கற்பித்த ஜெபத்தில் கூறப்பட்டுள்ளபடி, என் மூலம் கடவுளுடைய இராஜ்யத்தை எப்படி இவ்வுலகில் கொண்டுவரலாம்?

ஸ்டீபன் டீ. பிறையன்ற்
பதிப்பாசிரியரும் வெளியீடுபவரும்

## ஜெபம் - பயிற்சிப்பட்டறை
## சமுதாய சமாதானத்தை உருவாக்குதல்

கடவுளின் சித்தம் என்ன? இந்த உலகிற்கு, தனிப்பட்ட முறையில் நமக்கும் கடவுளின் சித்தம் என்ன? கடவுளின் சித்தம் மறைவானது, அறியமுடியாத இரகசியம். நன்றாக ஒளித்து வைக்கப்பட்ட புதையல் போன்றது என்று பலர் நினைக்கின்றனர். கடவுளின் சித்தத்தை அறிவது, ஜெலட்டீன் போன்ற வழுக்கும் பொருளைச் சுவரில் வைத்து ஆணியடிக்க முயற்சிக்கும், முடியாத காரியம் என்று சிலர் நினைக்கின்றனர். ஆனால் எமது தினசரித் தெரிவுகள், பிரச்சனைகள் ஆகியவற்றில் வேதாகமம் நமக்கு உதவி செய்து கடவுளுடைய வழியில் நம்மை வழிநடத்துகிறது.

வேதாகமம் தெளிவாகவும், பல தடவைகளிலும் கூறும் ஒரு காரியம், தனிப்பட்டோருக்கும், சமுதாயத்திற்கும் தான் படைத்து நேசிக்கும் இந்த உலகத்திற்கும் பூரண வாழ்வு, அடிமைத்தனத்திருந்து விடுதலை, நிறைவு, குணப்படுத்தல் ஆகியவற்றைக் கடவுள் விரும்புகிறார் என்பதே. இந்த அற்புதமான உலகை நமக்குத் தந்து, மோசே மூலம் பத்துக் கற்பனைகளைத் தந்து அதன் மூலம் கடவுளுடனும் மனிதர்களுடனும் சரியான உறவுகளை ஏற்படுத்த நம்மை வழி நடத்துகிறார். ஆனால், காலங்காலமாக நாம் கடவுளுக்கும் அவருடைய விருப்பத்துக்கும் எதிராகவே செயற்பட்டிருக்கிறோம். நம்மையும், மற்றவர்களையும் உலகத்தையும் துன்பப்படுத்தியிருக்கிறோம். கடவுளும் காலங்காலமாக மனிதனைத்தேடி, மேன்மையானதைப் பெறும்படி தன்னிடம் வரும்படி அழைக்கிறார்.

இதை நாம் பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசிகளின் வாயிலாக அறிகிறோம். இவர்கள், மனிதர்களுடைய பாவத்தினால் ஏற்படக்கூடிய கஷ்டங்களையும் கடவுளோடும், மற்ற மனிதர்களோடும் சரியான உறவுகளை வைத்திருந்தால் உலகில் ஏற்படக்கூடிய மாற்றங்களையும் தெளிவாக எடுத்துக்கூறியுள்ளனர். கடவுளை எதிர்க்கும் போதும், உடன்படிக்கையை மீறும்போதும், நாடு முழுவதும் துக்கப்படுவதோடு மிருகங்களும் இறக்கும் என்று ஓசியா தீர்க்கன் எச்சரிக்கிறார். நாம் கடவுளண்டைதிரும்பினால் அவர் நம்மைக் குணமாக்குவார் என்று கூறுகிறார். (ஓசியா 4:1- 3, 6: 1-3, 11) ''பெரிய சேனையாகிய வெட்டுக்கிளி தின்றதைத்'' திரும்பவும் கடவுள் தருவார் என்று யோவேல் தீர்க்கன் கூறுகிறார். (யோவேல் 2:21 - 25)

கடவுளுக்காக ஜீவிக்கும்படி ஆமோஸ் நமமை அழைக்கிறார். அப்போ- ''நியாயம் தண்ணீரைப்போலவும் நீதி வற்றாத நதியைப் போலவும் புரண்டுவரும்'' என்று கூறுகிறார். (ஆமோஸ் 5:24) ஏசாயா சமாதானமான ஒரு இராஜ்யத்தைப் பற்றிக் குறிப்பிடுகிறார். அங்கே சிங்கம் கன்றுக்குட்டியுடன் படுத்திருக்கும். அங்கு தீங்கு செய்வாருமில்லை. கேடு செய்வாருமில்லை என்று கூறுகிறார்.

(ஏசாயா 11: 6-9) அங்கு நீதி சூரியன் போற் பிரகாசிக்கும். கடவுளின் மக்கள் பிளவுண்ட அரணை அடைக்கிறவர்கள் என்று பெயர் பெறுவார்கள். (ஏசாயா 58: 8-12) வன்முறை, பலாத்காரம், யுத்தம் ஆகியவற்றைக் கைவிடும்படி மீகா தீர்க்கதரிசி நம்மை அழைக்கிறார். "பட்டயங்களை மண்வெட்டிகளாகவும், ஈட்டிகளை அரிவாள்களாகவும் அடிக்கும்படி கூறுகிறார். (மீகா 4:3) இவையாவும், சமாதானத்தைக் குறிக்கும் எபிரேய மொழிச் சொல்லான "ஷாலோம்" என்ற ஒரு சொல்லில் அடங்கியுள்ளது. இந்தத் தீர்க்கதரிசிகள் குறிப்பிடும் சமாதான இராஜ்யம் வெறுமனே யுத்தம் மட்டும் இல்லாத இடமல்ல. அதற்கும் மேலான ஒரு அர்த்தமுள்ள இடத்தைக் குறிக்கிறது. சமாதானமானது கடவுளுடன் ஒப்புரவாகி, அந்த ஒப்புரவாகுதல், ஒவ்வொருவருடைய இருதயத்திலுமிருந்து புறப்பட்டு உலகம் முழுவதையும் நிரப்ப வேண்டும்.

இதை நிறைவேற்றுமுகமாகத்தான் கடவுள் மனிதனாக இவ்வுலகிற்கு வந்தார். இயேசு தமது ஊழியத்தை ஆரம்பித்தபோது, ஏசாயா தம்மைப் பற்றிக் கூறியதை நினைவூட்டுகிறார். (ஏசாயா 61:1-4)கர்த்தருடைய ஆவி யானவர் என்மேலிருக்கிறார். எளியோருக்கு நற்செய்தியைப் பிரசங்கிக்கும்படி என்னை அபிஷேகம் பண்ணினார்; கைதிகளுக்கு விடுதலையையும் பார்வை யற்றோருக்குப் பார்வையையும் பிரகடனம் செய்யவும், நொறுங்குண்டவர்க ளை விடுதலையாக்கவும் என்னை அனுப்பினார்."(லூக்கா 4:18)கடவுள் எப்படி இருப்பார் என்று சீடர்கள் இயேசுவிடம் கேட்டபோது அவர், "என்னைக் கண்டவன் பிதாவைக் கண்டிருக்கிறான்." என்றார். (யோவான் 14:8-9) இன்னொரு விதமாகக் கூறினால், கடவுள் எப்படிப்பட்டவர் என்பதை அறிய விரும்பினால் நாம் இயேசுவைப் பார்த்து அறியலாம். அவர் மக்களைக் குணமாக்கினார். மரணம் இருந்த இடத்தில் வாழ்வைக் கொண்டு வந்தார். அவர் செய்யக் கூடியதைச் சொல்பவர். கைவிடுதல், ஏமாற்றுதல் ஆகியவற்றை எதிர் கொண்டு அதிலே நடப்பதற்கு நமக்கு வல்லமையைத் தருகிறார். (எரேமியா 6:16)

இந்த உலகம் எப்படி இருக்க வேண்டுமென்று கடவுள் விரும்புகிறார். நாம் அன்பிலே வாழ்ந்து, கடவுளோடும், மற்ற மனிதர்களோடும் நல்ல ஆரோக்கியமான உறவுகளை ஏற்படுத்தி உலகம் முழுவதும் ஆரோக்கியமடையவேண்டுமென்று விரும்புகிறார். புதிய ஏற்பாட்டின் கடைசிப் புத்தகத்தில் இந்தக் கருத்துக்கூறப்படுகிறது. கடவுளின் நகரமாகிய புதிய எருசலேமில், வாழ்வளிக்கும் தண்ணீருள்ள தூய நதி பாயும். மரத்தின் இலைகள் மக்கள் குணமடைகிறதற்கு ஏதுவானவைகள். (வெளி22:1-2) நாம் தீர்க்கதிரிசிகளின் அழைப்புக்குச் செவிகொடுக்கும்போது, இந்த உலகத்தின் இராய்ச்சியங்கள் கடவுளின் இராய்ச்சியங்களாக மாறலாம். தினமும் எமது அன்பின் கிரியைகள் மூலம் கடவுளின் நீதியை இவ்வுலகில் விளங்கப் பண்ணலாம். அப்போது நாம் சமாதானமான சமுதாயத்தை உருவாக்கலாம்.

பின்வரும் வினாக்களைப் பற்றிச் சிந்திக்க முன்னர் ஜுலை 2, 7, 12, 18, 27, 31 ஒகஸ்ட் 7, 13. 18, 23 ஆகிய தினங்களுக்குரிய தியானங்களைத் திரும்பவும் வாசித்து, கடவுளுடைய இராய்ச்சியம் இவ்வுலகில் ஏற்படுவதற்கு ஒவ்வொருவரும் எப்படிச் செயற்படுகிறார்கள் என்பதை அவதானியுங்கள்.

## சிந்திப்பதற்குச் சில வினாக்கள்

1. உமது சமுதாயத்தில் குணமாக்குதலும், ஒப்புரவாகுதலும் எங்கே தேவைப்படுகிறது? உமது அயலையும் உலகத்தையும் அன்பு மயமாக்க உமது சபை என்ன நடவடிக்கை எடுக்கின்றது?

2. உமது வாழ்வில் கடவுளின் குணமாக்குதலை எவ்வாறு அனுபவித்துள்ளீர்? உடைந்த உமது உள்ளத்தைக் கடவுள் எப்படி முழுமையாக்கினார்?

3. கடவுள் உம்மை நேசிக்கிறார் என்பதற்கு எந்தவேத வாக்கியங்கள் உமக்கு விசேடமான கருத்தைத் தருகின்றன? உலகிற்கு? ஏன் அவை அர்த்தமுள்ளதாயிருக்கின்றன?

4. உமது அயலை, கடவுள் விரும்பும் இராஜ்யமாக மாற்றுவதற்கு இன்று நீர் செய்யக்கூடிய காரியம் என்ன?

5. மேலே தரப்பட்ட தினசரித் தியானங்களில் எது உமக்குச் சவாலாக அமைகின்றது? உம்மை உற்சாகப்படுத்துவது எது?

மேரி லூ றெட்டிங்

## புதன் கிழமை கலந்துரையாடலை வழிப்படுத்தக் கூடிய வினாக்கள் ஜுலை – ஓகஸ்ட், 2006

### ஜுலை 5, 2006

1. வேண்டுமென்றே, யாராவது, உம்மைத் துன்பப்படுத்திய அனுபவம் உண்டா? அந்த நேரத்தில் உமது உணர்ச்சி எப்படிப்பட்டதாயிருந்தது? ஏன் இப்படிச் செய்கிறார்கள் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்?

2. வேண்டுமென்று துன்பப்படுத்துகிறவரை மன்னிப்பதற்கும், தற்செயலாகத் துன்பப்படுத்துகிறவரை மன்னிப்பதற்கும் என்ன வேறுபாடுகளைக் காண்கிறீர்? இரு சந்தர்ப்பங்களிலும் உமது உணர்ச்சிகளில் வேறுபாடு உண்டா?

3. இன்றைய வேதப்பகுதியில் நம்மைத் துன்புறுத்துகிறவர்களுக்காக ஜெபிக்கும்படி இயேசு கூறுகிறார். நீங்கள் எப்போதாவது அதைச் செய்திருக்கிறீர்களா? அப்படியானால் என்ன பலன் கிடைத்தது? இல்லாவிட்டால் ஜெபிப்பதற்குத் தடையாக இருப்பது என்ன?

4. கிறிஸ்தவர்கள் ஒருபோதும் கோபிக்கக் கூடாது என்று பலர் நினைக்கிறார்கள். நாம் கோபங்கொள்வதை நிறுத்த முடியுமா? ஆமென்றால் எப்படி? இல்லையென்றால் ஏன் இல்லை? நீர் கோபித்து, கோபித்தீர் என்பதை ஏற்றுக்கொள்ளும்போது உமது மனத்தில் சமாதானம் ஏற்படுகிறதா? ஏன் அல்லது ஏன் இல்லை?

5. பழிவாங்கும் எண்ணம் ஏற்படுமளவிற்கு உமக்கு எப்போதாவது கோபம் ஏற்பட்டதுண்டா? இறுதியில் சமாதானமடைந்தீரா? அப்படியானால் எப்படி? இல்லாவிட்டால் ஏன் இல்லை?

### ஜுலை 12, 2006

1. இன்றைய வேத வாசிப்பில் இயேசு இரண்டு பிரதான கற்பனைகளைத் தருகிறார். ஆத்துமாவோடும் முழு மனதோடும் கடவுளை நேசிப்பது. உன்னைப்போல் உன் அயலானையும் நேசிப்பது. இதில் இலகுவானது எது? ஏன்?

2. ஒருவருக்குக் கருணை காட்டப்பட்ட போது அவரில் மாற்றம் ஏற்பட்டதை நீர் அறிந்திருந்தால் அதை விளக்குக.

3. உமது செல்லப் பிராணியின் மூலம் ஏதாவது ஆவிக்குரிய பாடத்தைக் கற்றிருக்கிறீரா? ஒழுங்கு, அன்ப, கீழ்ப்படிவு, நம்பிக்கை ஆகிய நற்காரியங்கள் பற்றி மிருகங்களிடம் எதை அறியலாம்?

4. மிகுந்த துன்பத்தை எதிர்கொண்டு அதை மேற்கொண்ட யாரையாவது நீர் அறிவீரா? அவர்கள் நமக்குக் கற்பிக்கும் பாடம் என்ன?

5. துஷ்பிரயோகஞ் செய்யப்பட்ட பிள்ளைகளுக்கு உதவுவதற்கு உங்கள் சபை என்ன செய்கிறது? உங்கள் சமூகம் என்ன செய்கிறது? அவர்களுக்கு உதவ நீங்கள் என்ன செய்வீர்கள்?

6. உம்முடைய யோசனைகளை ஏற்காதவர் அல்லது எதிர்பார்த்திலும் பார்க்க அதிகம் பயன்படுத்தியவர் யாராவது உண்டா? அதை என்ன மாதிரி நீர் சமாளித்தீர்? அதன் முடிவு என்ன?

## ஜுலை 19, 2006

1. அநேகம் பேர் தம்மிடமுள்ள சிறப்பான தன்மையை உணர்ந்திருப்பார். உங்களுக்கு இருப்பது என்ன? அதை நீர் அறிந்ததன் ஆரம்பத்தைப் பற்றிச் சொல்ல முடியுமா? இதைப் பற்றி இயேசு என்ன சொல்லுவார் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்?

2. "மாம்சமும் இரத்தமும் தேவனுடைய அரசைச் சுதந்தரிக்க மாட்டாது." என்று 1 கொரி 15:50 ல் கூறப்பட்டுள்ளது. அப்படியானால் எமது உடலைப் பற்றி ஏன் நாம் அதிகம் அக்கறையுள்ளவர்களாயிருக்கிறோம்? அவிசுவாசிகளிலும் பார்க்க கிறிஸ்தவர்கள் தமது உடலைப் பற்றி வித்தியாசமான சிந்தனை உடையவர்களாயிருக்க வேண்டுமா?

3. உடலழகைப் பற்றிய நமது கருத்தைத் தவிர, வேறு என்ன கலாச்சார பெறுமதிகள் நமது விசுவாசத்திற்கு எதிராக இருக்கின்றது?

4. இத்தியானத்தை எழுதுதியவர். குஷ்டரோகிகளின் மனோ நிலை எப்படி இருந்திருக்கும் என்கிறார். அவர்கள் மனோநிலை எப்படி இருந்திருக்கும் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்? எமது சமுதாயத்தில் இருக்கும் குஷ்டரோகிகள் யார்?

5. காவலிலிருப்போர், பசியோடிருப்போர், கவலையோடிருப்போர், வியாதியோடிருப்போர், சமுதாயத்தில் ஒதுக்கப்படுவோர் ஆகியோருக்கு உதவுவது பற்றி இயேசு கூறுகிறார். இவர்களில் யாருக்கு நீங்கள் உதவி செய்திருக்கிறீர்கள்? எவ்வாறு? யாருக்கு உதவி செய்வது கடினமாயிருக்கும்? ஏன்?

## ஜுலை 26, 2006

1. ஏறக்குறையக் குற்றமற்ற வாழ்வு வாழும் யாரையாவது உமக்குத் தெரியுமா? அப்படி ஒரு முடிவிற்கு நீர் வருவதற்கு அவரிடம் உள்ள விசேட தன்மை என்ன?

2. அவர் ஒரு பரிசுத்தவான் என்று யாராவது சொல்லக் கேட்டிருக்கிறீர் களா? அவர்கள் அப்படிச் சொல்லும் போது என்ன கருதுகிறார்கள் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்?

3. கத்தோலிக்க கிறிஸ்தவர்களைப் போன்று மற்றக் கிறிஸ்தவர்கள், பரிசுத்தவான்களுக்கு மதிப்பளிப்பதில்லை. மக்களைப் பரிசுத்தவான் களாக்குவதில் என்ன நல்லதை நீர் காண்கிறீர்? இது வழிதவறச் செய்யும் ஒரு காரியமா?

4. கிறிஸ்துவைப் போலாவதற்கு நீர் இன்னும் வெகுதூரம் செல்ல வேண்டும் என்று உம்மை உணரவைத்த அனுபவம் எது? அதை அறிந்தவுடன் உமக்கு என்ன உணர்ச்சி ஏற்பட்டது? அது உம்மையோ அல்லது உமது பழக்கவழக்கத்தையோ மாற்றியதா?

5. கர்வத்தையும் பெருமையையும் மேற்கொள்ளக் கஷ்டப்பட்டிருக்கி றீரா? அப்படியானால் கடவுள் எப்படி உமக்கு உதவினார்? இல்லா விட்டால், இவற்றை மேற்கொண்டவர்களுடன் இது பற்றி என்ன பேச விரும்புகிறீர்?

## ஓகஸ்ட் 2, 2006

1. முடிவு சரியாகத் தெரியவராத ஒரு சந்தர்ப்பத்தை நீர் அறிந்திருந்தால் அதை விபரிக்குக. அந்தச் சூழ்நிலையில் கடவுளின் பிரசன்னத்தை உணர்ந்தீரா? என்ன மாதிரி?

2. நீர் கடவுளைத் தரிசிப்பதைத் தடுக்கும், துன்பகரமான காரியங்கள் எவை? கடவுள் நமக்குக் காட்டும் வழிகளை நாம் தெளிவாக அறிந்து கொள்வதற்கு உதவியாக நாம் கையாளக் கூடிய வழிகள் எவை?

3. நீர் கடவுளை மகிமைப்படுத்த விரும்பி முயற்சி செய்த ஒரு சந்தர்ப்பத்தை நினைவு கூருக. யார், அல்லது வார்த்தைகள், அல்லது பயிற்சி, சரியான வழியைக் காண உதவியது?

4. கடவுளுடன் நமது நித்திய வாழ்வு எப்படி இருக்கும் என்று நினைக்கிறீர்கள்? அந்த வீடு எப்படி இருக்கவேண்டுமென்று நீங்கள் விரும்புகிறீர்கள்?

5. கிறிஸ்துவை நீர் முகமுகமாகச் சந்தித்தால் என்ன கேள்விகள் கேட்க விரும்புவீர்?

## ஓகஸ்ட் 9, 2006

1. நீர் முதன் முதலாக வேதத்தை வாசித்தது அல்லது யாராவது வாசித்து விளங்கியது ஞாபகத்தில் இருக்கிறதா? அந்த நேரத்து ஞாபகம் என்ன உணர்ச்சியுடன் தொடர்புடையதாயிருக்கிறது?

2. உமது ஆசிரியர் அல்லது ஞாயிறு பாடசாலை ஆசிரியர் உமது வாழ்வில் ஏற்பட்ட மாற்றத்திற்குக் காரணமாயிருந்திருக்கிறார்களா? உம்மிடம் மாற்றத்தைக் கொண்டுவர அவர் செய்த காரியம் என்ன? அவர் கடவுளால் உம்மிடம் அனுப்பப்பட்டவர் என்று நினைக்கிறீரா? அந்த நேரத்தில் அப்படி நினைத்தீரா?

3. உமது சபைக்கு ஞாயிறு பாடசாலை ஆசிரியர்களைச் சேர்த்துக் கொள்வதிற் சிரமப்படுகிறீர்களா? ஒரு பிள்ளையின் வாழ்வில் முக்கிய பங்கு வகிக்க முடியுமென்பதை உணர்த்துவதற்கு இன்றைய தியானத்தை எவ்வாறு உபயோகிப்பீர்?

4. எந்தப் பிள்ளையில் நீர் அதிக அக்கறை கொண்டுள்ளீர்? கடவுள் பார்வையில் அந்தப் பிள்ளை பெறுமதியானது கடவுள் அந்தப் பிள்ளையை நேசிக்கிறார் என்பதை அதற்கு எப்படி உணர்த்துவீர்?

5. கைவிடப்பட்ட பிள்ளைகளுக்கு உங்கள் சபை என்ன சேவை செய்கிறது? உங்கள் சமூகத்தில் அதற்கேற்ற திட்டங்கள் ஏதாவது உண்டா? நீங்கள் என்ன வகையில் அதிற்பங்கேற்கிறீர்கள்?

## ஓகஸ்ட் 16, 2006

1. நீர் உமது வேதாகமத்தை முதன் முதலில் எப்போ பெற்றீர்? என்ன சூழ்நிலையில் யாரால் கொடுக்கப்பட்டது? இன்னமும் அதை வைத்திருக்கிறீரா? இல்லாவிட்டால் அதற்கு என்ன நடைபெற்றது?

2. அநேகம் விசுவாசிகள் வேதத்தை வாசிப்பது அவசியமானது என்பார்கள். ஆனால் அவர்கள் ஒழுங்காகவே வாசிக்கமாட்டார்கள். மக்களை, வேதத்தை வாசிக்கவும் அதன் உண்மைகளைத் தமது வாழ்விற் பிரயோகிக்கவும், தடை செய்யவது எது?

3. வேதவாசிப்பு முக்கியம் என்பதை மக்கள் அறிந்துகொள்ளச் சபை எவ்வாறு உதவ முடியும்? வேதத்தை, நீர் விசுவாசத்துடன் வாசிக்க உதவியது எது?

4. வேதத்தில் நீர் வாசிக்க விரும்பாத பகுதி எது? ஏன்? வேதத்தில் எந்தப் பகுதி உம்மைக் குழப்பவோ அல்லது வெறுக்கவோ செய்கிறது?

5. முன்னொரு போதும் இல்லாதவாறு, ஒரு புதிய கண்ணோட்டத்தில் உம்மை நீர் பார்க்கத் தூண்டிய அனுபவம் ஏற்பட்டதுண்டா? அது என்ன அனுபவம்? இப்போதும் அப்புதிய கண்ணோட்டத்தில் தான் உம்மைப் பார்க்கிறீரா? ஏன் அல்லது ஏன் இல்லை?

6. உமது வாழ்வின் மையத்தில் கடவுள் இருப்பதை எது தடை செய்கிறது? அத்தடைகளை நீக்குவதற்கு நீர் தயாராக இருக்கிறீரா? ஏன் அல்லது ஏன் இல்லை?

## ஓகஸ்ட் 23, 2006

1. வேதாகமத்தில் உமக்கு மிகவும் பிடித்த குடும்பத்தைப் பற்றிய கதை எது? ஏன் அது மிகவும் பிடித்தது? இந்தக் கதையிலிருந்து உமது வாழ்க்கைக்கு என்ன பாடங்களைக் கற்றீர்?

2. நீர் கற்கவிரும்பாததைக் கற்பதற்கு, உமது குடும்பத்திலிருந்து யாரையாவது கடவுள் உபயோகித்திருக்கிறாரா?

3. உமது குடும்பத்திலுள்ளவரையா அல்லது வெளியாரையா மன்னிப்பது கடினம்? குடும்ப அங்கத்தவரினால் ஏற்படுத்தப்பட்ட வேதனை, வெளியாரினால் ஏற்படுத்தப்பட்டதிலும் பார்க்க அதிகம் வேதனை தருவதும் அதிக நாட்களுக்கு இருப்பதும் ஏன்?

4. கடந்த பத்து வருடங்களில் உங்கள் குடும்பத்தினரில் மாற்றம் ஏற்பட்டதுண்டா? இந்த மாற்றங்களில் கடவுளின் கை எங்கே செயற்பட்டது?

5. உமது ஆவிக்குரிய கண்களைத் திறப்பதற்கு, நீர் எதிர்பாராத ஒருவரைக் கடவுள் எப்போது உபயோகித்தார்?

6. உமது குடும்பம், சபை, சமுதாயம் ஆகியவற்றுடன் கொண்டுள்ள உறவில் என்ன விசேஷித்த தன்மை உள்ளது? இக்குடும்பத்தின் பெலம், பெலவீனம் ஆகியவற்றை விளக்குக.

7. உமது குடும்பத்தில் சமாதானம் செய்பவராக நீர் எப்போது செயற்பட்டீர்? உம்மைச் சமாதானம்ப்படுத்துவதற்கு யாராவது எப்போதாவது செயற்பட்டதுண்டா?

## ஓகஸ்ட் 30, 2006

1. நீர் கல்வியைப் பெறுவதற்கு உதவியது யார்? நீர் கல்வியைப் பெறுதில் கடவுள் என்ன பங்கைச் செலுத்தியுள்ளார்? நீர் கற்ற கல்வி உமது வாழ்வில் என்ன மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது?

2. இந்தத் தியானத்தை எழுதியவருக்கும் உமக்கும் என்ன கலாசார வேறுபாடு உண்டு? ஆவிக்குரிய வாழ்வில் இந்த வேறுபாடுகள் எவற்றை வெளிப்படுத்துகின்றது?

3. சில வேளைகளிற் பொது நன்மைக்காகச் சிலவற்றை விட்டுக் கொடுக்க வேண்டிவரும். சில வேளைகளில், மற்றவர்களுடைய நோக்கம் எப்படி இருந்தாலும், நமது கொள்கைக்காக உறுதியாக நிற்க வேண்டிவரும். இவற்றிற்கு ஆதாரமாக எந்தவேத வாக்கியங்களை உபயோகிப்பீர்?

4. உமது வாழ்க்கையைத் திரும்பிப்பார்க்கும் போது, உமது ஆவிக்குரிய ஜீவியத்தில் மாற்றத்தை ஏன்படுத்திய சிறிய தீர்மானம் அல்லது செயல் என்ன?

5. நீர் உதவி செய்ய எடுத்த முயற்சி, அல்லது தாராளமானது, ஏற்றுக் கொள்ளப்படாதது, பற்றி விபரிக்குக. அதற்குப்பதிலாக நீர் எப்படிச் செயற்பட்டீர்? அதன் முடிவு என்ன?

## எங்கள் ஆதாரம்

வாசிக்கவும். மத்தேயு 6:25-34

என் தேவன் தம்முடைய வளத்தின் படி உங்கள் தேவைகளையெல்லாம் கிறிஸ்து இயேசுவுக்குள் மகிமையிலே சந்திப்பார்.

பிலிப்பியர் 4:19

சென்றவாரம் எனது கணவர் வேலைசெய்யும் தொழிற்சாலை மூடப்படும் என்று அறிவித்தார்கள். நிச்சயமாக இது எமக்குக் குழப்பத்தைத் தரும் செய்திதான். இது முக்கியமானது ஏனெனில், இது மாதிரியான விடயம் மூன்றாவது தடவையாக நடைபெறுகிறது. முதலில் 22 வருடங்கள் செய்த வேலை, தொழிற்சாலையில் ஆட்குறைப்பினால் வேலைபோனது பின்னர் தொழிற்சாலையின் இட மாற்றத்தினால் வேலை போனது.

அந்த நேரத்தில் நாம் கேள்வி கேட்டோமா? ஆம் ஏன் கடவுளே? என்று கேட்டோம். நான் உண்மையைச் சொல்ல வேண்டும் கடவுள் மறுமொழிதரவே இல்லை. ஆனால் யார் எங்களுக்கு ஆதாரம் என்ற கேள்விக்கு அவர் விடை தந்தார். அவர்தாமே எங்களுக்கு ஆதாரம். இது வரைக்கும் அவர் எங்கள் தேவைகளெல்லாவற்றையும் சந்தித்திருக்கிறார். இனிமேலும் எங்கள் தேவைகளை அவர் சந்திப்பார் என்ற நம்பிக்கை எங்களுக்குண்டு.

மாறிக்கொண்டிருக்கும் நிலையற்ற இவ்வுலகிலே எங்கள் பாதுகாப்பிற்கு ஆதாரமாயிருப்பவர் கடவுளே தவிர எங்கள் தொழில்களல்ல என்ற நிச்சயத்தை நாம் பெறும்போது மனதிற் சமாதானம் உண்டாகிறது. நாம் கடவுளில் மட்டும் தங்கியிருப்போமாக.

ஜெபம்: அன்பான கடவுளே, இந்த வாழ்வில் எங்கள் எல்லாத் தேவைகளுக்கும் ஆதாரமாக இருப்பவர் நீரே என்பதை நாம் விசுவாசிக்க எங்களுக்கு உதவி செய்யும். ஆமென்.

நாளுக்குரிய சிந்தனை: இறுதிவரை எமக்கு ஆதாரமாயிருப்பது கடவுளின் மாறாத தன்மையே.

ஜெபத் தேவை: வேலையற்றிருப்போருக்காக.

ஞாயிறு, ஜுலை 02, 2006

## சமாதானப் பாலங்கள்

வாசிக்கவும். சங்கீதம் 85:8-13

கர்த்தராகிய தேவன் கூறுவதைக் கேட்பேன்; அவர் தம்முடைய மக்களுக்கும் தம்முடைய பரிசுத்தவான்களுக்கும் சமாதானம் சொல்வார்;
சங் 85:8

ஜுலை மாத முற்பகுதியில் அமெரிக்கர்கள் சுதந்திர தினத்தைக் கொண்டாடுவதற்கு ஆயத்தங்கள் செய்வார்கள். இந்தச் சமயத்தில் ஜுலை 1 ல் கனடாவின் சுதந்திர தினத்தையும் நினைவு கூருவோம்.

வட அமெரிக்காவின் கிழக்குப் பகுதியில், அமெரிக்காவையும் கனடாவையும் பல பாலங்கள் இணைக்கின்றன. இவற்றிற் சில மரத்தாலான சிறிய பாலங்களா. சில, டெட்றோயிற், மிச்சிகன், வின்ட்சர், ஒன்ராறியோ ஆகிய நகரங்களைத் தொடுக்கும் மிகப்பெரிய பாலங்கள். பாலங்கள் நாடுகளை இணைப்பது மட்டுமல்ல நாட்டு மக்களை ஒன்ற கூடியவரச் செய்கிறது. வர்த்தகத்தை விருத்தியாக்குவதுடன் இனத்தவர்களையும் நண்பர்களையும் நேரிற் சென்று சந்திக்க முடிகிறது. சுற்றுலாப் பயணிகள் பாலங்களினூடாக இரு நாடுகளுக்கும் சென்று அங்குள்ள புதுமைகளைப் பார்ப்பார்கள்.

''எதிரிடையான இரு நிலைகளில் வெளியரங்கமாகக் காணப்படும் வேறுபாடுகளை ஒன்றாக இணைப்பதே பாலம்'' என்றும் ஒரு வரைவிலக்கணம் கூறலாம். நாம் கடவுளின் உடன் வேலையாட்களாயிருந்தால் நமது கிறிஸ்தவ விசுவாசம், நமக்கும் மற்றவர்களுக்குமிடையில் ஒரு சமாதானப் பாலமாக அமையலாம். ஆகவே நாம், சமாதான காரணராகிய நமது கடவுளுக்கு விசுவாசமாக, தனிப்பட்டவர்கள் மத்தியில், சமுதாயங்கள் மத்தியில், நாடுகள் மத்தியில் சமாதானப் பாலங்கள் கட்டுபவர்களாக மாறுவோமாக.

ஜெபம்: பரலோக தந்தையே, நம்மைச் சுற்றியிருக்கும் மக்களுடன் சமாதானம், நட்பு ஆகிய பாலங்களைக் கட்டுகிறவர்களாக நாம் மாற எங்களுக்கு உதவி செய்யும். இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறோம். ஆமென்

நாளுக்குரிய சிந்தனை: எனக்கும் என்னிலிருந்து வேறுபட்டவர் களுக்குமிடையில் நான் எப்படிப் பாலம் அமைப்பேன்?

ஜெபத் தேவை: சமாதானத்திற்காக வேலை செய்பவர்களுக்காக.

# தவற விடாதீர்கள்

வாசிக்கவும். எபேசியர் 5:8-20

முன்பு நீங்கள் இருளாயிருந்தீர்கள். இப்பொழுதோ கர்த்தருக்குள் வெளிச்சமாயிருக்கிறீர்கள்; வெளிச்சத்தின் பிள்ளைகளாய் நடந்து கொள்ளுங்கள். வெளிச்சத்தின் கனி. சகல நற்குணத்திலும் நீதியிலும் உண்மையிலும் விளங்கும்.

எபே. 5:8-9

முற்றிப் பழுத்திருந்த அந்தப் பழங்களைப் பிடுங்க வேண்டும். ஆனால் நான் களைத்துப் போயிருந்தேன். அவற்றைப் பிடுங்காவிட்டால் அணில்களும் பறவைகளும் பழுதாக்கிவிடும். பழங்கள் அதிகமாயிருக்கிறதே. நேரம் அதிகஞ் செல்லுமே என்றெல்லாம் யோசித்தேன். ஆனால் பழ மரங்கள் நடவேண்டும் என்று நான் தான் விரும்பினேன். பழங்கள் உண்பதில் எனக்கு விருப்பம் அதிகம். கூடையை எடுத்துக்கொண்டு வரிசையாக நடப்பட்டிருந்த செடிகளினூடே சென்று பழங்களைப் பிடுங்க ஆரம்பித்தேன். என்னை அறியாமலே வேமாகச் செயற்பட்டேன். முடிந்தது. என்று நினைத்தபோது, தவறவிட்ட பழங்கள் தென்பட்டன.

எமது கிறிஸ்தவ வாழ்வு இதே மாதிரியானது தான். கடவுளுக்குப் பிரியமான காரியங்கள் பலவற்றைச் செய்துவிட்டோம் என்று நாங்கள் பெருமைப்படும் வேளையில் கடவுள் நம்மைப் பார்த்து "இதைச் செய்யத் தவறிவிட்டீரே" என்று சொல்வார்.

தினமும் நாம் கடவுளுக்குப் பிரியமான காரியங்களைச் செய்வதன் மூலம் அவருடன் நமது உறவைப் பலப்படுத்த முடியும். தினமும் நமது வேத வாசிப்பு, தியானம், நற்காரியங்கள் ஆகியவற்றின் மூலம், நாம் சேவிக்கும் கிறிஸ்துவைப்போல், படிப்படியாக மாறுவோம். கடவுள் நம்முடன் கூட இருந்து நம்மை வழி நடத்துவார்.

ஜெபம: அன்பான கடவுளே, நம்மைச் சூழ இருப்பவர்களுக்கு உதவி தேவைப்படும்போது எமது உதவிக் கரங்களை நீட்ட எங்களை வழிநடத்தும். ஆமென்.

நாளுக்குரிய சிந்தனை: எமது அன்பான செயல்கள் மூலம் கடவுளை மகிமைப்படுத்துவோம்.

ஜெபத் தேவை: தோட்ட வேலையாட்களுக்காக.

# ஒரு தாயாரின் ஜெபம்

வாசிக்கவும். 2 தீமோத்தேயு 1:3-5

நீதிமான் செய்யும் ஊக்கமான ஜெபம் வல்லமையும் பயனுள்ளதாயுமிருக்கிறது.

யாக்கோபு 5:16

எனது கணவரின் வேலை காரணமாக நாங்கள் அடிக்கடி எங்கள் இருப்பிடத்தை மாற்றிக் கொள்வோம். ஆகையால் எனது வயதான தாயாருடன் நேரத்தைச் செலவிடுவதற்குச் சந்தர்ப்பம் கிடைப்பது மிக அரிதாகிவிட்டது.

பல மாதங்களின் பின் ஒரு நாள் இரவு எனது தாயாருடன் தங்கக்கூடிய ஒரு சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்தது. இரவு அவவுடைய படுக்கையை ஒழுங்கு செய்து அவவைப் படுக்கச் செய்தேன். அந்த நேரத்தில் அவ ஏதோ சொல்வது போல் கேட்டது. குனிந்து கவனித்துக் கேட்டேன். அவ ஜெபித்துக் கொண்டிருந்தா. நன்றாகக் கவனித்தேன். நாங்கள் ஆறு பிள்ளைகள். எங்கள் ஒவ்வொருவருடைய பெயரையும் வரிசைக்கிரமமாகச் சொல்லி ஒவ்வொரு குடும்பத்துக்காகவும் ஜெபித்தா. ஒவ்வொருவரும் இயேசுவை அறிந்து கொள்ளவேண்டும் என்று கடவுளிடம் விண்ணப்பஞ் செய்தா.

இருபது வருடங்களின் முன் நான் மனமாற்றமடைந்தேன். எனது இரட்சிப்பும், கர்த்தருடைய வார்த்தையில் நான் கொண்டிருந்த ஆவலுக்கும் காரணம் எனது தாயாரின் இடைவிடாத ஜெபமே என்றுணர்ந்தேன். ஜெபமானது நீளமானதும் அலங்கார வார்த்தைகளைக் கொண்டதுமாயிருக்கத் தேவையில்லை என்பதையும் உணர்ந்தேன்.

விசுவாசத்துடன் செய்யப்படும் சுருக்கமான ஜெபமும் வல்லமையுள்ளதாயிருக்கும். அது கடவுளால் கேட்கப்படும். கடவுள் கிரியை செய்வார்.

ஜெபம்: ஆண்டவரே, எங்களுடைய ஜெபம் உமக்குப் பிரியமானதாயிருக்கும் என்பதை நாம் அறிவோம். ஆகையால் எமது ஜெபம் எப்படி இருக்குமோ என்று நாம் கவலைப்படாமல் இருக்க உதவி செய்தருளும். ஆமென்

நாளுக்குரிய சிந்தனை: இன்றைக்கு நான் யாருடைய பெயரைக் கடவுளுடைய சமுகத்தில் வைப்பேன்?

ஜெபத் தேவை: ஜெபிக்கும் தாய்மாருக்காக.

## ஏழெழுபது முறை மட்டுமா?

வாசிக்கவும். மத்தேயு 5:43-48

அப்பொழுது, பேதுரு அவரிடத்தில் வந்து ''ஆண்டவரே, என் சகோதரன் எனக்கு எதிராகக் குற்றஞ் செய்து வந்தால், நான் எத்தனை முறை அவனை மன்னிக்க வேண்டும்? ஏழு மறை மட்டுமா?'' என்று கேட்டான். அதற்கு இயேசு, ''ஏழு முறை மட்டுமல்ல, ஏழெழுபது முறை மட்டும் என்று உனக்குச் சொல்லுகிறேன்.'' என்றார்.

மத். 18: 21-22

அவன் என்னை வேதனைப்படுத்த விரும்பினான். அவனது பேச்சும் செயலும் அப்படித்தானிருந்தன. அதன் காரணமாக என்னுள் கோபமும் வெறுப்பும் ஏற்பட்டன. எதிரிகளைப் பழிவாங்க வேண்டும் என்று கூறும் எத்தனையோ சங்கீதப் பகுதிகளை என்னாற் கூறமுடியும். (சங். 10:15, 55: 12-15, 63:8;109, 137:9 ஆகியவற்றைப் பார்க்க.)

நான் கோபமாயிருந்தேன். பழிவாங்க வேண்டும் என்ற உணர்ச்சி மேலெழுந்தது. பின்னர் பேதுருவுக்கு இயேசு கூறிய பதிலை நினைத்துப் பார்த்தேன். ஏழுதரம் அல்ல ஒருமுறை தானும் என்னால் மன்னிக்க முடியுமா என்ற சந்தேகம் என்னுள் எழுந்தது. எனது கோபம் குறைவதற்குச் சற்று நேரம் பிடித்தது. நான் என்ன செய்ய வேண்டும்மென்று சிந்தித்தேன். முதலாவதாக என்னைக் கோபப் படுத்தியவர், கோபிக்கும்படி என்னைப் பலாத்காரப்படுத்தவில்லை என்பதை நான் ஏற்றுக்கொள்ள வேண்டும். நான்தான் கோபத்தைத் தெரிந்து கொண்டேன். அடுத்து கோபத்தினால் வெளிவரும் செயலும் வார்த்தைகளும் எனக்கு எந்த விதத்திலும் உதவாது என்பதை நான் நம்பவேண்டும். மன்னிப்பதே உதவும் என்பதை ஏற்க வேண்டும். கடவுளின் உதவியோடுதான் நான் இதைச் செய்ய முடியும்.

மன்னிக்கும் ஆவிதான் நமது உடலுக்கும் உள்ளத்திற்கும் ஆறுதலைத் தரும். இயேசு, பேதுருவை நல்லவனாக மட்டும் இருக்கச் சொல்ல வில்லை. உடலுக்கும் உள்ளத்திற்கும் ஆறுதலையும் சமாதானத்தையும் தரக் கூடிய காரியத்தைத்தான் செய்யும்படி கூறினார். நமது ஆண்டவர், எந்நிலையிலும் மன்னிப்பும் அன்பும் உள்ளவர்களாக இருக்க வேண்டுமென்று விரும்புகிறார்.

ஜெபம்; ஆண்டவரே, நீர் எம்மில் அன்பு கூருவதுபோல் நாங்களும் மற்றவர்களில் அன்பு கூர்ந்து மன்னிக்கும் ஆவியை நாம் பெற உதவி செய்யும். ஆமென்

நாளுக்குரிய சிந்தனை: மன்னிப்பு நம்மையும் எதிரிகளையும் குணப்படுத்தும்.

ஜெபத் தேவை: எமது எதிரிகளுக்காக.

## பரிசுத்த பூமி

வாசிக்கவும்: சங்கீதம் 95:1-7

அப்பொழுது அவர் (கடவுள்) "உன்பாதங்களில் இருக்கிற காலணிகளைக் கழற்றிப்போடு, நீ நிற்கிற இடம் பரிசுத்த பூமி" என்றார்.

யாத்திராகமம் 3:5

இந்தியாவிலிருந்த அந்தக் கிராமத்திற்கு நாங்கள் அண்மையிற்தான் குடிவந்தோம். எங்கள் வீட்டிலிருந்து பார்த்தால் அங்கிருந்த தேவாலயத்தின் முன்பகுதி நன்றாய்த் தெரியும். ஒரு நாள் மாலையில் நான் எங்கள் வீட்டு வாசற்படியில் நின்றபோது, அந்த வழியாக வந்த தொழிலாளர்கள், ஆலயத்தின் வாசலருகே தங்கள் பாதணிகளைக் கழற்றிவிட்டு அவ்விடத்தில் நின்று வணங்கிப்போவதைக் கண்டேன். பெண்களும் தமது சேலைத் தலைப்பினால் தலைகளை மூடி நின்று ஜெபித்துப் போனார்கள். இது அவர்களுடைய தினசரி வேலை என்பதைப் பின்னர் அவதானித்தேன்.

இது எனக்கு ஆச்சரியமாயிருந்தது. என்னைப் பற்றிச் சிந்தித்தேன். நான் ஒரு கிறிஸ்தவக் குடும்பத்தில் பிறந்து வளர்ந்தவளாயிருந்தாலும் ஞாயிற்றுக் கிழமைகளில் வணங்கும் ஒரு இடமாக மட்டும் ஆலயத்தை மதித்தேன். மற்ற நாட்களில் அந்த இடத்தைத் தாண்டிச் செல்லும்போது வணங்க வேண்டுமென்ற எண்ணமே எனக்கு வரவில்லை. வணக்கம் என்பது ஞாயிற்றுக் கிழமையோடு மட்டும் நின்று விடுவதில்லை. ஆலயம் மற்றவை போன்ற ஒரு கட்டம் இல்லை என்ற ஒரு நல்ல பாடத்தை அந்தத் தொழிலாளர்கள் எனக்குக் கற்றுத்தந்தார்கள். ஜீவனுள்ள தேவன் வாழும் ஒரு பரிசுத்தமான இடம். அவர் தினமும் வணங்கப்பட வேண்டியவர்.

ஜெபம்: சர்வத்திற்கும் பிதாவாகிய தேவனே, உம்மை வணங்க எமக்கு ஓர் இடத்தைத் தந்ததற்காக நன்றி. தினமும் உம்மை வணங்க எமக்கு உதவி செய்யும். ஆமென்.

நாளுக்குரிய சிந்தனை: கடவுளுக்குரிய மதிப்பை நாம் எப்படி வெளிக்காட்டுவோம்.

ஜெபத் தேவை: தொழிலாளர்கள்.

## இயேசு கிறிஸ்துவும் புள்ளி விபரங்களும்

வாசிக்கவும். ஏசாயா 58: 1-12

உன்னிடத்தில் கேட்கிற எவனுக்கும் கொடு.
லூக்கா 6:30

புள்ளி விபரங்களைப் பார்த்தால் சில சமயங்களில் கேலியாகவும், பொழுதுபோக்காகவும், விபரங்களைத் திரித்துக் கூறுவதாகவும் இருக்கும். உதாரணமாக, ''எத்தனை வீதம் பிரித்தானியர்கள் நிர்வாணமாகத் தூங்குவார்கள்?''(கணக்கெடுப்பின்படி ஐம்பத்தொரு வீதம்) ''ஒரு சாதாரண மனிதன் தனது வாழ்நாளில் தான் தொலைத்து விட்ட பொருட்களைத் தேடுவதில் எவ்வளவு நேரத்தைச் செலவிடுகிறான்.'' (ஒரு வருடம் என்று ஒரு நூலிற் கூறப்பட்டுள்ளது.)

இயேசு இன்று நம்மத்தியில் இருந்தால் புள்ளி விபரங்களைக் கூறிக் கொண்டிருப்பாரா? ''சமாதானம் பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள்'' என்று கூறிய இயேசு, தொடர்ந்து, இத்தனை பேர் குண்டு தயாரிக்கிறார்கள். இத்தனை பேர் கொலை செய்யப்படுகிறார்கள் என்றெல்லாம் கூறுவாரா? கேலிக்காகவோ, பொழுதுபோக்கிற்காகவோ இயேசு இப்படிப் பட்ட காரியங்களைக் கூறமாட்டார். அவற்றைத் தியானத்திற்காக உபயோகிக்கக்கூடுமென்று நான் நினைக்கின்றேன்.

இந்தப் புள்ளி விபரத்தைப் பாருங்கள். உலக மக்களில் மூவாயிரம் கோடி மக்கள், ஒரு நாளைக்கு இரண்டு டொலருக்கும் குறைவான பணத்தில் வாழ்கிறார்கள். வசதியாக வாழும் நாம், இதைப் பிழை என்கிறோம். அல்லது கவனியாமல் விட்டுவிடுகிறோம். ஆனால் இயேசு நம்மத்தியில் இருந்தால் அதைக் கவனிக்காமல் ஒதுங்கிப்போய் விடமாட்டார். நாம் இரண்டு டொலரை அனாவசியமாகச் செலவு செய்வதைப் பார்த்துக் கோபப்படுவார்.

புள்ளி விபரங்களைப் பார்த்து இயேசு என்ன பதில் கொடுப்பாரென்று நமக்குத் தெரியாது. ஆனால் ஏழைகள் என்று கூறப்பட்டால் அவர் அங்கே இருப்பார் என்பது மட்டும் நிச்சயம்.

ஜெபம்: ஆண்டவரே, இயேசு இவ்வுலகில் இன்று இருந்தால் என்ன செய்வாரோ, அதையே நாம் ஏழை மக்கள் மத்தியிற் செய்ய எம்மை வழிநடத்தும். ஆமென்.

நாளுக்குரிய சிந்தனை: ஏழைகளுக்கு உதவும் காரியங்களில் நாம் ஈடுபடும்போது நாம் இயேசுவைப் போலாகின்றோம்.

ஜெபத் தேவை: மிகக்குறைந்த வருமானத்தில் வாழ்பவர்களுக்காக.-

# ஏற்றுக்கொள்ளப்பட்டோர்கள்

வாசிக்கவும். ரோமர் 15:5-7

தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் அழிந்து போகாமல் நித்திய வாழ்வை அடையும் படிக்கு அவரைத்தந்தருளி இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார்.

யோவான் 3:16

நான் வளர்ந்து வருகிற பருவத்திலே எனது குடும்பம் அடிக்கடி இருப்பிடத்தை மாற்றிக்கொண்டிருந்தது. நான் எனது முதலாவது வகுப்புத் தொடக்கம் உயர் கல்வியை முடிக்கும் வரை பத்துப் பாடசாலைகளில் கல்வி கற்றேன். எல்லாப் பாடசாலைகளிலும் நான் புதிய மாணவியாகக் கணிக்கப்பட்டேன். எனது சக மாணவர்கள் என்னை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று விரும்பி அதற்காக ஜெபித்தேன். நான் அதிகம் வெட்கமுடையவளான படியால் அது கஷ்டமானது என்று நினைத்தேன்.

இப்போ நான் கடந்த காலத்தை நினைத்துப் பார்க்கும்போது அப்போ எனக்கிருந்தது வெட்கமல்ல, என்னை ஏற்றுக்கொள்ளமாட்டார்கள் என்ற எண்ணந்தான். எனது சக மாணவர்களின் சிநேக மனப்பான்மையான செயல்களை நான் ஏற்றுக் கொண்டிருந்தால், அவர்களைப் பற்றி அறிந்திருப்பேன். அவர்கள் என்னை ஏற்றுக் கொள்கிறார்கள் என்று நான் உணரும்போது நாம் இடத்தை மாற்றி விடுவோம். அவர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டு நல்ல நண்பர்களானவுடன் விட்டுப்போக மனம் வராது.

அதைப்போலவே கடவுள் நம்மை ஏற்றுக் கொள்ளும்போது நாமும் அவரை ஏற்றுக்கொள்ள வேண்டும். அவர், ''உலகத்தில் அன்பு கூர்ந்தார்,'' என்று கூறும்போது எல்லா மக்களையும் தான். அவர் ஒவ்வொருவரையும் பார்த்து, ''நீங்கள் பெறுமதியானவர்கள், நீங்கள் நேசிக்கப்படுகிறீர்கள். நீங்கள் எனக்கு அருமையானவர்கள் என்று கூறுகிறார். கடவுள் எம்மைச் சேர்த்துக் கொள்ள ஆயத்தமாயிருக்கிறார். நாம் அதற்கு இடங்கொடுப்போமாக.

ஜெபம்: ஆண்டவரே, எங்கள் குறைகளுடன் எங்களை ஏற்றுக்கொள் வதற்காக நன்றி. உமது குமாரன் கிறிஸ்துவுக்காக நன்றி. உமமுடைய கொடைகளைத் திறந்த மனதுடன் ஏற்று அதை மற்றவர்களுக்குக் கொடுக்க உதவி செய்தருளும். ஆமென்

நாளுக்குரிய சிந்தனை: கடவுள் உங்களுக்கு நண்பனாக இருக்க விரும்புகிறார்.

ஜெபத் தேவை: தாம் ஏற்றுக் கொள்ளப்படவில்லை என்று நினைப்பவர் களுக்காக.

# ஒரு புதிய ஆரம்பம்

வாசிக்கவும். 2 கொரிந்தியர் 5:12-21

இப்படியிருக்க, ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால், புதுப் படைப்பாயிருக்கிறான். பழையவைகள் ஒழிந்து போயின. அனைத்தும் புதிதாயின.

2 கொரி 5:17

எனது வாழ்வில் ஒரு பெரிய மாற்றம் ஏற்பட்டு இன்று ஐந்து வருடமாகின்றது. அந்த நாளுக்கு முன்னர் எனக்கு நாயென்றால் மிகுந்த பயம். எனக்குக் கண்பார்வை இல்லாதபடியால், ஒரு வழிகாட்டப் பழக்கப்பட்ட நாய் ஒன்று தரப்பட்டது. அந்த மகிழ்ச்சிகரமான நாளிலிருந்து எனது வாழ்க்கை முன்போல் இல்லை. பழையவைகள் எல்லாம் மறக்கப்பட்டு விட்டன. அந்த அனுபவத்தின் பின் எனது வாழ்வில் ஒரு நல்ல திருப்பம் ஏற்பட்டது. நான் இன்னமும் பார்வையற்றவனாகத்தான் இருக்கிறேன். ஆனாலும் எனது வழிகாட்டி நாய் எனது வாழ்க்கையை முற்றாக மாற்றி விட்டது.

இந்த வருட நிறைவு நாளை நான் நினைக்கும்போது, எமது ஆத்மீக வாழ்வில் கிறிஸ்துவில் நமது விசுவாசத்தை வைப்பது, இதற்குச் சமமானதாக இருக்கின்றது. பாவம் நிறைந்த எமது வாழ்வில் மாற்றம் தேவை. பரிசுத்தாவியானவர் நம்மை விசுவாசத்திற்குள் இழுத்துக் கொள்ளும் போது, கிறிஸ்து நம்மை மாற்றி விடுவார். அப்போது பவுல் கொரிந்தியருக்குச் சொன்னது போல, ''பழையவைகள் எல்லாம் ஒழிந்து போயின'' என்று தைரியமாகச் சொல்ல முடியும்.

கிறிஸ்துவில் நாம் நமது விசுவாசத்தை வைக்கும்போது, ஆவியானவர் நம்முள்ளிருந்து நம்மை மாற்றுகிறார். நமது வாழ்க்கை பழைய மாதிரி இருக்காது. அந்த நாள் நமக்கு ஒரு புதிய ஆரம்பமாக இருக்கும்.

**ஜெபம்:** பரலோகத் தந்தையே, உமது பரிசுத்தாவியானவர் எமது வாழ்வை எப்படி மாற்றுகிறார் என்பதை நாம் அறிய உதவி செய்யும். இரட்சிப்பின் நற்செய்தியை நாங்கள் மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளவும், அவர்களது வாழ்க்கையும் மாற்றப்படவும் உதவி செய்தருளும். ஆமென்

நாளுக்குரிய சிந்தனை: கிறிஸ்துவை நீர் விசுவாசிக்கத் தொடங்கிய பின் உமது வாழ்க்கையில் என்ன மாற்றம் ஏற்பட்டது?

ஜெபத் தேவை: கண்பார்வைக்குறைவுள்ளவர்களுக்காக.

திங்கள், ஜுலை 10, 2006

## கடவுளில் நம்பிக்கை வைத்தல்

வாசிக்கவும். சங்கீதம் 84

சேனைகளின் கர்த்தாவே, உம்மை நம்பியிருக்கிற மனிதன் பாக்கியுள்ளவன்.

சங் 84:12

நான் ஆலயத்திற்குச் செல்வதற்கு எனது வாகனத்தில் ஒரு மணித்தியாலம் பிரயாணஞ் செய்யவேண்டும். ஞாயிற்றுக் கிழமை காலையானபடியால் வீதியில் மிகக்குறைவான வாகனங்களே காணப்படும். அமைதியாகவும் பாதுகாப்பாகவும் இருக்கும். நான் போகும் பாதையில் ஒரு நீண்ட பாலம் இருந்தது. அதன் வழியாகப்போகும்போது இரண்டு பக்கங்களிலும் அற்புதமான காட்சி தென்படும். இந்தப் பிரயாணம் நான் கடவுளோடு சிறிது நேரத்தை அமைதியாகக் கழிப்பதற்கும் உதவும்.

ஒரு நாள் நான் பாலத்தின் மேல் போய் கொண்டிருந்தபோது, எனக்கு முன்னாக ஒரு பெரிய வாகனம் போய்க் கொண்டிருந்தது. எனக்கு முன் பாதை தெரியவில்லை. முன்னாற் சென்ற வாகனத்தின் சாரதியை நம்பி, எனது வாகனத்தைச் செலுத்த வேண்டியிருந்தது.

இந்தச் சம்பவம் கடவுளுடனான எனது உறவை ஞாபகப்படுத்தியது. எமது எதிர்கால வாழ்வு எப்படி இருக்கம் என்று எமக்குத் தெரியாது. எப்போ என்ன பிரச்சனை வருமென்று தெரியாது. ஆனால் ஒன்று செய்யலாம். கடவுள் மேல் நமது முழு நம்பிக்கையையும் வைக்கலாம். கடவுள் நம்மைப் பாதுகாத்து வழிநடத்துகிறவராயிருக்கிறார்.

ஜெபம: பரலோகத் தந்தையே, வாழ்க்கையின் பெரும் பாதையால் நாம் பிரயாணஞ் செய்யும்போது எம்மை வழிநடத்தும். எப்போதும் உம்மை நம்பி ஜீவிக்க உதவியருளும். இயேசுவின் நாமத்தினால் எமது ஜெபத்தை ஏறெடுக்கிறோம். ஆமென்

நாளுக்குரிய சிந்தனை: கடவுளை நாம் பின்பற்றும்போது, நமக்கு முன்னே என்ன இருக்கும் என்பது பற்றிக் கவலைப்படத் தேவையில்லை.

ஜெபத் தேவை: வழிநடத்தல் தேவைப்படுவோருக்காக.

# கனி கொடுப்பதற்காக

வாசிக்கவும். யோவான் 15:1-5

நானே மெய்யான திராட்சைச்செடி. என் பிதா திராட்சைத் தோட்டக்காரர். என்னிற் கனி கொடாதிருக்கிற கொடி எதுவோ அதை அவர் அறுத்துப் போடுகிறார்; கனி கொடுக்கிற கொடி எதுவோ, அது அதிக கனிகளைக் கொடுக்கும்படி அதைச் சுத்தம் பண்ணுகிறார்.

யோவான் 15:1-2

நான் விவசாயக் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தபோது, திராட்சைச் செடி வளர்ப்பவர்கள், நல்ல கனிகளைப் பெறுவதற்காகக் கையாளும் மூன்று முறைகளைப் பற்றிக் கற்றேன். முதலாவது முறை செடிகளின் ஒரே சீரான தன்மை. செடியின் மேற்பகுதி ஒரே மட்டமாக இருக்கும். தேவையான வெளிச்சம் செடிக்குக் கிடைக்கும். சரியான அளவு உயரமும் வரும் வரைக்கும் கிளைகள் வெட்டப்படும். இரண்டாவதாகச் சுத்தப்படுத்தல். இங்கே, காய்ந்து போய் கனி கொடுக்க முடியாத நிலையிலிருக்கும் கிளைகள் வெட்டப்படும் மூன்றாவதாகக் கனிகொடுத்தல்,. ஒரு கிளையில் அதிகம் பழங்கள் இருந்தால், பழங்கள் சிறியதாக இருக்கும். அல்லது பாரந்தாங்காமற் கிளை முறிந்து விடவும் கூடும். அதனால் அவற்றில் சில காய்களை அகற்றிவிடுவர். எஞ்சியிருப்பவை பெரிதாகவும் இனிமையாகவும் இருக்கும்.

அதே மாதிரியாகத்தான் நமது வாழ்க்கையையும் கடவுள் ஒழுங்கு படுத்துகிறார். பெரிய தோட்டக்காரரான அவர், நமது கிறிஸ்தவ வளர்ச்சிக்குத் தடையாக உள்ள எல்லாவற்றையும் அகற்றி, நாம் அவரை மகிமைப்படுத்தும்படி செய்கிறார். வெட்டப்படும்போது வேதனைகள் ஏற்படத்தான் செய்யும். ஆனால் கடவுளின் நொக்கத்தை நிறைவேற்ற நாம் நல்ல கனிகளைக் கொடுக்கவேண்டும். அதற்கு நாம் இடங்கொடுப்போமாக.

ஜெபம்: ஆண்டவரே, உம்மை நாம் போற்றித்துதிக்கத் தடையாயி ருக்கும் எல்லாவற்றையும் தயவாய் அகற்றிப்போடும். ஆமென்

நாளுக்குரிய சிந்தனை: கடவுள் அன்புள்ள தோட்டக்காரர்.

ஜெபத் தேவை: சவால்களை எதிர்கொள்வதற்காக.

# நாய்க்குட்டி

வாசிக்கவும். மத்தேயு 22:34-40

கர்த்தருடைய ஆவியானவர் என்மேலிருக்கிறார். இருதயம் நருங்குண்டவர்களைக் குணமாக்கவும் கைதிகளுக்கு விடுதலையையும் பார்வையற்றோருக்குப் பார்வையையும் கொடுக்கும்படி என்னை அனுப்பினார்.

லூக்கா 4:18

அந்தச் சிறுவன் பதினெட்டு மாதக் குழந்தையாகயிருந்த போது எனக்கு அறிமுகமானான். அன்றிலிருந்து நான் அவனை மிகவும் நேசித்தேன். அவனது பாட்டனார் அவனைக் கொடுமைப்படுத்தி, அவனது உடலில் காயங்களை ஏற்படுத்தியதனால், அவனை வளர்ப்பதற்காக ஒரு குடும்பத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தான். அங்குதான் நான் அவனைச் சந்தித்தேன்.

அவனுக்கு ஐந்து வயதானபோது அவனது வள்ர்ப்புப் பெற்றார் அவனுக்கு ஒரு நாய்க்குட்டியைப் பரிசாகக் கொடுத்தனர், அவனும் அதை மிக அன்பாக வளர்த்தான். ஒரு நாள் அந்த நாய்க்குட்டியை மிருக வைத்தியரிடம் கொண்டு செல்லும்படி கேட்டார்கள். நானும் அந்தப் பையனும் அதனைக் கொண்டு சென்றோம். மிருக வைத்தியரின் அறையில் அதைவிட்டு விட்டு நாங்கள் போகத்திரும்பியபோது, அந்த நாய்க்குட்டி பயத்தினால் அலறத் தொடங்கியது. அந்தச் சிறுவன் ஓடிச்சென்று அதன் முன் இருந்து, ''பயப்படாதே, நான் உன்னுடன் இருக்கிறேன். நான் உன்னை நேசிக்கிறேன்.'' என்று கூறி அதனை ஆறுதற்படுத்தினான்.

பின்னர் நான் இந்தச் சம்பவத்தைப் பற்றிப் பலமுறை சிந்தித்துப் பார்த்தேன். துன்பப்படுவோர் போதை வஸ்துக்களுக்கு அடிமையானோர், அங்கவீனர் ஆகியோரைச் சேர்த்துக் கொண்டு ஆறுதற்படுத்தி அவர்களை நல்வழிப்படுத்தினால் அதுவே கிறிஸ்துவுக்காக நாம் செய்யும் ஊழியமாகும்.

ஜெபம: அன்பான இயேசுவே, எமது கைகள் மூலமாக நீர் மற்றவர்களைத் தொடுவதை நாங்கள் அவர்களுக்கு அறிவிக்க எங்களை வழிநடத்தும். ஆமென்

நாளுக்குரிய சிந்தனை: ''நான் உன்னுடனே இருக்கிறேன்.'' என்று யாருக்குக் கூற வேண்டும்.

ஜெபத் தேவை: வளர்ப்புப் பெற்றாருக்கும் வளர்ப்புப் பிள்ளைகட்கும்.

## நான் எப்படி மரணமடைவேன்?

வாசிக்கவும். ரோமர் 14:7-9

கர்த்தருக்குள் மரிக்கிறவர்கள் இது முதல் பாக்கியவான்கள். அவர்கள் தங்கள் பிரயாசங்களை விட்டொழிந்து இளைப்பாறுவார்கள். அவர்களுடைய கிரியைகள் அவர்களோடே கூடப்போம்.

வெளி 14:13

நான் ஒரு ஊழியக்காரன் என்ற வகையிலே, நூற்றுக்கணக்கான மரண ஆராதனைகளிற் பிரசங்கம் செய்திருக்கிறேன். மேலும் பல ஆறுதற் கூட்டங்களும் நடத்தியிருக்கிறேன். என்னுடைய மரண நாளும் சீக்கிரம் வரலாம் என்று அடிக்கடி ஞாபகப்படுத்தப்படுகிறேன். எனது எண்ணமெல்லாம் நான் எப்படி மரிப்பேன். மரித்தபின் எனக்கிருக்கும் வாழ்வு எப்படி இருக்கும் என்பதே. எனது மரணத்தின் பின், கடவுள் மேல் நான் வைத்திருக்கும் விசுவாசத்திற்குச் சாட்சியாயிருப்பேன் என்று நம்புகிறேன்.

எனது கிறிஸ்தவ நண்பரொருவர் ஆபத்தான சத்திரசிகிச்சைகரு உட்படுவதற்கு ஆயத்தம் செய்து கொண்டிருந்தார். அதில் அவர் உயிர் பிழைப்பதற்குரிய சந்தர்ப்பம் குறைவாகவே இருந்தது. அவர் என்னைப் பார்த்து, "இந்தச் சிகிச்சையில் நான் மரித்தால் எனது ஆண்டவருடன் சென்று வாழ்வேன். குணமடைந்தால் எனது மகளுடன் சென்று வாழ்வேன். எப்படி இருந்தாலும் எனக்குச் சந்தோஷம்." என்று மிக அமைதியாகக் கூறினார்.

எமது வாழ்வின் இறுதி நாள் வரை கடவுள் நம்மோடிருப்பார் என்பதை நாம் உறுதியாக நம்பலாம். "இதோ, உலகத்தின் முடிவுரையிலும் சமல நாட்களிலும் நான் உங்களுடனே கூட இருக்கிறேன். என்று நமது ஆண்டவர் வாக்களித்திருக்கிறார். (மத் 28:20) தினமும் இந்த வாக்குத்தத்தத்தை நினைவு கூர்ந்து அதை இறுதிவரை நமக்கென்று பிடித்துக் கொள்வோமாக.

ஜெபம்: சகலத்திற்கும் காரணராகிய கடவுளே, நாங்கள் விசுவாசத்துடன் ஞானமாக வாழ்ந்து, இறுதி நாளுக்காக எம்மை ஆயத்தப்படுத்த எங்களை வழிநடத்தும். ஆமென்.

நாளுக்குரிய சிந்தனை: கடவுளின் வாக்குத்தத்தம் நமது வாழ்வின் ஒவ்வொரு வினாடிக்கும் ஏற்புடையதே.

ஜெபத் தேவை: மரணத்தை நெருங்கியிருப்போருக்காக.

## *முதற் பலன்*

வாசிக்கவும். 2 கொரிந்தியர் 9: 6-15

உன் பொருளாலும், உன் அனைத்து விளைச்சலின் முதற் பலனாலும் கர்த்தரைக் கனம் பண்ணு. அப்பொழுது, உன் களஞ்சியங்கள் முழுமையாய் நிரம்பும். உன் ஆலைகளில் திராட்சை ரசம் வழிந்தோடும்.
நீதி மொழிகள் 3:9-10

கடவுளுக்குக் கொடுப்பது பற்றி கொரிந்தியருக்கு எழுதப்பட்ட இந்தப் பகுதியுடன் நான் பல வருடங்கள் போராட்டம் நடத்தியுள்ளேன். எனது தேவைகள் யாவற்றையும் கடவுள் தருவார் என்பதில் எனக்குச் சந்தேகம் இருந்தது. ஆதலால் எனது வருமானத்தின் முதற் பலனை நான் கடவுளுக்குக் கடவுளுக்குக் கொடுக்காமலிருந்தேன். இன்றைக்குக் கடவுள் தந்தது போதும். நாளைக்குத் தேவையானதை நாளைக்குக் கடவுள் தருவார் என்று நம்பாத இஸ்ரவேலரைப்போன்று தான் நானும் இருந்தேன்.

எங்கள் சபையின் நிதிக்குழுவில் நான் அங்கத்தவராயிருந்த போதுதான், முதற் பலன், பத்திலொன்று கொடுப்பது, ஆகியவை பற்றி நான் கொண்டிருந்த தவறான எண்ணத்தில் மாற்றம் ஏற்பட்டது. கடவுளை மகிமைப்படுத்தினால் அவர் வாக்குத்தத்தை நிறைவேற்றுவார் என்பதை உணர்ந்தேன். நமது சபை வருமானத்தில் பத்திலொன்றை நாம் ஏழைகளுக்காகச் செலவிடவேண்டும் என்று ஒருவர் சொன்னார். எல்லாச் செலவையும் செய்தபின் மிகுதி இருந்தால் தருமம் செய்யலாமென்று நான் கூறினேன். நல்ல காலமாக தசம பாகத்தை எடுத்து வேறாக வைப்பதற்குத் தீர்மானித்தார்கள்.

வருட முடிவில் எனக்கு ஆச்சரியமாயிருந்தது. எங்கள் சபை தேவையான எல்லாச் செலவுகளையும் சந்திக்கக் கூடியதாயிருந்தது. நாம் கடவுளை நேசித்து அன்பான சேவையைச் செய்தோம். அவர் எங்கள் தேவைகளைச் சந்தித்தார். இந்த அனுபவம், தசம பாகத்தின் உண்மையை எனக்கு விளக்கியது. நம்முடைய பங்கை நாம் செய்தால் கடவுள் தமது வாக்குறுதியை நிறைவேற்றுவார்.

ஜெபம்: அன்பான கடவுளே, நீர் எங்களுக்கு விசுவாசமாயிருப்பது போல் நாங்களும் உங்களுக்கு விசுவாசமாயிருக்க எமக்கு உதவி செய்யும். நீர் எங்களுக்குத் தந்த எல்லாவற்றிற்காகவும் நன்றியோடு உம்மை மகிமைப்படுத்த எம்மை வழிநடத்தும். ஆமென்
நாளுக்குரிய சிந்தனை: கடவுள் தந்த பணத்தில் எனக்கென்று நான் எவ்வளவை வைத்திருக்கிறேன்?
ஜெபத் தேவை: நிதிப் பிரச்சினையில் இருப்போருக்காக.

# எப்போதும் எங்களுடன்

வாசிக்கவும். சங்கீதம் 139: 1-16

உங்கள் தலையிலுள்ள மயிரெல்லாம் எண்ணப்பட்டிருக்கிறது.

லூக்கா 12:7

எனது மகள் மூன்று வயதாயிருந்த போது ஒருநாள் என்னைப்பார்த்து, ''அம்மா எனது பிறந்த நாள் எப்போது'' என்று கேட்டாள். ஏப்றில் 14 என்று சொன்னால் அவளுக்கு விளங்காது என்று நினைத்து, அவளுக்குத் தெரிந்த ஒன்றுடன் தொடர்புபடுத்திக் கூறினால் ஞாபகத்தில் வைத்திருப்பாள் என்றெண்ணி, ஈஸ்டருக்கு முதல் அல்லது அடுத்து வரும் என்று கூறினேன். ''ஓ. நல்லது. உங்களுக்கும் எனது பிறந்த நாள் எப்போ என்று தெரியாது.'' என்று கூறினாள்.

நான், சில சமயங்களிற் கடவுளைப் பற்றி இப்படியான தவறான எண்ணங்களை வைத்திருப்பது உண்டு. எனது ஜெபத்திற்கு விடை கிடைக்காத போதும், கஷ்டங்கள் வரும்போதும், எனக்கு என்ன நடை பெறுகின்றது என்பது கடவுளுக்குத் தெரியாது என்று நினைப்பேன்.

ஆனால் உண்மை அதுவல்ல என்பதை நான் உணர்ந்து கொண்டேன். எங்கள்மனதின் எண்ணங்களைக் கூட கடவுள் அறிவார் என்று வேதம் கூறுகிறது. எங்களை நாங்கள் அறிந்திருப்பதிலும் பார்க்க, கடவுள் எங்களை நன்றாக அறிந்திருக்கிறார்.

தாய்க்குத் தன் குழந்தையின் பிறந்த தினம் தெரியாமலிருக்காது. இவ்வுலகையும் நம்மையும் படைத்த கடவுளுக்கு நம்மைப் பற்றிய எல்லா விபரங்களும் தெரிந்திருக்கும். (சங்கீதம் 139: 13 பார்க்க.)

ஜெபம்: ஆண்டவரே,உமது பிரசன்னத்தை நாங்கள் உணராதிருக்கும் வேளைகளில், நீர் எப்போதும் எங்களுடன் இருக்கிறீர் என்பதை நாங்கள் மறவாதிருக்கச் செய்யும். ஆமென்

நாளுக்குரிய சிந்தனை: எங்களுடைய எந்தக் காரியமும் கடவுளை ஆச்சரியப்படுத்தாது.

ஜெபத் தேவை: கடவுள தூரமாயிருக்கிறார் என்று நினைப்பவர் களுக்காக.

# அழகு

வாசிக்கவும். 1 சாமுவேல் 16:1-13

கர்த்தர் சாமுவேலை நோக்கி, "நீ இவனுடைய முகத்தையும் இவனுடைய சரீர வளர்ச்சியையும் பார்க்க வேண்டாம். நான் இவனைப் புறக்கணித்தேன். மனிதன் பார்க்கிறபடி நான் பாரேன். மனிதன் முகத்தைப் பார்ப்பான்; கர்த்தரோ இருதயத்தைப் பார்க்கிறார்" என்றார்.

1 சாமு 16:7

நான் எனது தோட்டத்தில் அமர்ந்திருந்து இயற்கையழகை இரசித்துக் கொண்டிருந்தேன். அந்த மாரிகாலத்து வெய்யில் உடலுக்கு இதமாக இருந்தது. பல நிறப்பூக்களிலே பல நிறப் பூச்சிகள் இருந்தன. அவற்றின் நடுவே ஒரு விட்டில் பூச்சியையும் கண்டேன். அது சாதாரணமாக இரவிலே தான் வெளிவரும்.

கடவுள் ஏன் இந்தப் பூச்சியை அழகின்றிப் படைத்தார், என்று சிந்தித்தேன். இதைப் போன்றது தான் வண்ணத்துப்பூச்சியும். அது எவ்வளவு அழகாக இருக்கிறது. அந்த விட்டில் பூச்சி எழுந்து பறந்தது. அப்போது அதன் மேல் சூரிய ஒளிபட்டது. என்ன ஆச்சரியம்; விரிந்த அதன் இறகுகளின் கீழே பொன் நிறம் பளிச்சிட்டது. மிக அழகாக இருந்தது. வழக்கம்போல், மேலோட்டமாக அதைப் பார்த்து அதற்கு அழகு இல்லை என்று தீர்மானித்து விட்டேன். அதனுடைய அழகை வெளிக்காட்டு முன் நான் அது அழகற்றது என்று தீர்மானித்து விட்டேன்.

விட்டில் பூச்சிகள் வெளியே பார்ப்பதற்கு அழகற்றவை போறத் தோன்றினாலும் அவையும் கடவுளின் படைப்புத்தான். வெளியே தெரியாவிட்டாலும் அவற்றிற்கும் கடவுள் அழகைக் கொடுத்திருக்கிறார். இவற்றைப் போலவே சில மனிதர்களையும் கடவுள் படைத்திருக்கிறார். விட்டிலின் அழகு மறைந்திருப்பதைப் போன்று அவர்களுடைய நல்ல தன்மையும் மறைந்திருக்கும். கடவுளின் சிருஷ்டிப்பு ஒவ்வொன்றும் ஒவ்வொரு வித அழகோடு இருக்கிறது.

ஜெபம்: ஆண்டவரே, மற்றவர்களை உற்சாகப்படுத்தி அவர்களிலிருக்கும் அழகானவற்றை வெளிக்கொணர உதவி செய்யும். ஆமென்

நாளுக்குரிய சிந்தனை: கடவுளால் ஒவ்வொருவருக்கும் கொடுக்கப்பட்டிருக்கும் அழகைத்தேடுவோம்.

ஜெபத் தேவை: என்னால் அன்பு செலுத்த முடியாதவர்களுக்காக.

# கவனம் செலுத்துதல்

வாசிக்கவும். மத்தேயு 16:13-23

விசுவாசிகளெல்லோரும் ஒன்றாக இருந்து, அனைத்தையும் பொதுவாக வைத்து அனுபவித்தார்கள்.

அப்போஸ்தவர் 2:44

நான் ஒரு பாஸ்டரான படியால் எனது சபை மக்கள் தங்கள் அனுபவங்கள் பிரச்சனைகள் ஆகியவற்றை என்னிடம் கூறுவார்கள். நானும் எனது அனுபவங்களை அவர்களிடம் கூறுவேன். இது கிறிஸ்துவுக்குள் நாங்கள் ஒரே சரீரமாயிருக்க உதவுகிறது.

மற்றவர்களுடைய அனுபவங்களை நாம் கவனித்துக் கேட்கும்போது, நமக்குத்தரப்பட்டிருக்கம் நேரமென்னும் கொடையை மற்றவர்களுடன் பகிர்ந்துகொள்கிறோம். நமது நேரத்திற்குப் பதிலாக நாம் பெறுவது மற்றவர்களுடைய அனுபவமே. ஒவ்வொருவருடைய அனுபவமும் அவரவர்க்குத் தனிப்பட்ட விசேஷ தன்மையுடையதாயிருந்தாலும், அதில் ஏதோ ஒன்று நமது அனுபவத்திற்கு ஒத்ததாக இருக்கும். சில மகிழ்ச்சிக்குரிய சம்பவங்கள், துக்கமான சம்பவங்கள் ஆகியவற்றைக் கேட்கும்போது, நமக்கும் அப்படியான அனுபவங்கள் ஏற்பட்டிருந்தால் நமக்கிடையில் ஒரு நெருங்கிய தொடர்பு ஏற்படுகிறது. அனுபவங்களைப் பகிர்ந்து கொள்பவர்கள் விசேஷித்த தன்மையுள்ள நண்பர்களாக மாறிவிடுகின்றனர்.

நான் மற்றவர்களுடைய அனுபவங்களைக் கேட்கும் போது, பல நிற நூல்களைக் கொண்டு ஒரு புதிய வடிவத்தை அமைக்கும் ஒரு நெசவாளியின் ஞாபகம் எனக்கு வருகிறது. அனுபவங்கள் பல ஒன்றிணைகின்றன. நமது சபையிலும் அப்படியான ஒரு நிகழ்வு நடைபெறுகிறது. பலருடைய அனுபவங்களும் ஒன்று சேர்ந்து அங்கு ஒரு ஐக்கியம் ஏற்பட்டு, கடவுளின் நாமம் மகிமைப்படுத்தப்படுகிறது. இதற்கெல்லாம் அடிப்படையாக அமைவது, ஒருவர் சொல்வதை மற்றவர் அனுதாபத்துடன் கவனமாகக் கேட்பதும் தனது அனுபவத்தைப் பகிர்ந்து கொள்வதுமேயாகும்.

ஜெபம்: அன்பான ஆண்டவரே, மற்றறவர் சொல்வதைக் கவனித்துக் கேட்கவும் ஞானமுள்ள நண்பர்களாக இருக்கவும் எம்மை வழிநடத்தும். ஆமென்

நாளுக்குரிய சிந்தனை: கடவுளின் சித்திரத்தையல் ஆடையில், நாங்கள் ஒவ்வொருவரும் அங்கத்தவர்களே

ஜெபத் தேவை: நன்கு கவனித்துக் கேட்பவர்களுக்காக.

# கிறிஸ்துவின் குடும்பம்

வாசிக்கவும். மத்தேயு 25: 31-46

உன்னைப்போல் உன் அயலானையும் நேசி

மத் 22:39

எங்கள் மாவட்டத்தில் வீடில்லாதவர்கள் கூடாரங்களில் வசிப்பார்கள். அவற்றை நாம், ''கூடார நகரம்'' என்றழைப்போம். ஆனால் உள்ளுர் சட்டப்படி அவர்கள் 90 நாட்களுக்குமேல் ஓரிடத்தில் இருக்க முடியாது. பல தர்மஸ்தாபனங்களும் சபைகளும் அவர்களுக்குத் தற்காலிக இடங்களை ஏற்படுத்திக் கொடுப்பார்கள். இப்படியான ஒரு கூடார நகரத்தை எங்கள் சபை வரவேற்று இடங்கொடுப்பதற்கு விரும்பியது. ஆனால் அதற்கு எதிர்ப்பும் இருந்தது. அவர்கள் ஒதுக்கப்பட்டவர்கள். நமது எல்லைக்குள் வரக்கூடாது என்று பலர் ஆவேசமாகக் கூறினார்கள். இறுதியில் எல்லா எதிர்ப்புக்களையும் மேற்கொண்டு, அவர்களை வரவேற்கச் சபையினர் ஆயத்தமாயினர். சபையினர் ஒன்றிணைந்து உற்சாகமாக அவர்களுக்குத் தேவையானவற்றைச் சேர்த்தெடுப்பதில் ஆர்வமுடன் செயற்பட்டனர். உடைகள், போர்வைகள், சவர்க்காரம் போன்றவை சேகரிக்கப்பட்டன. அவர்கள் வந்து சேரும் முதல் நாள் அவர்களுக்கு உணவு கொடுப்பது என்று தீர்மானிக்கப்பட்டது. வருபவர்கள் 75 பேர், சபையின் அங்கத்தவர்கள் மிகமிகக் குறைவு. எப்படி அவ்வளவு பேருக்கும் உணவு கொடுக்க முடியும்? ஆனால் இயேசு நினைத்தவுடன் ஆயிரக்கணக்கான மக்களுக்கு உணவளித்தார். அவருடைய உதவியுடன் உணவளிக்கத் தீர்மானித்தோம்.

அந்த நாள் வந்தது. வீடுகளில் தயாரிக்கப்பட்ட பலவகைப்பட்ட உணவு வகைகள் கொண்டுவரப்பட்டன. உணவு பரிமாறுவதற்கான பொருட்களும் வந்திறங்கின. உண்வு பரிமாறுவதில் சகல அங்கத்தவர்களும் பங்கு கொண்டனர். அது மட்டுமல்லாமல் சபை அங்கத்தவர்கள் யாவரும், வந்தவர்களோடு அமர்ந்திருந்தது, ஒரு குடும்பத்தினர்போல் உணவருந்தினர். அந்தளவுக்கு அங்கு போதிய உணவு இருந்தது. கிறிஸ்துவின் குடும்பமாக அவர்களை நாம் வரவேற்றோம்.

ஜெபம: பரிசுத்தரான கடவுளே, நீர் தருகின்ற உணவு, உடை, வீடு, நண்பர்கள், உறவுகள் ஆகியவற்றிற்காக நன்றி கூறுகிறோம். எமது அயல், சமுதாயம் ஆகியவற்றில் தேவைகளுடன் இருப்போர்கள்ள ஆதரிக்க எம்மை வழிநடத்தும். ஆமென்

நாளுக்குரிய சிந்தனை: மற்றவர்களுக்கு உதவக் கடவுள் என்னை எப்படி உபயோகிக்கிறார்.

ஜெபத் தேவை: வீடற்றோருக்காக.

# கிறிஸ்துவின் தொடுகை

வாசிக்கவும். மாற்கு 1: 40 - 45

இயேசு மனதுருகி கையை நீட்டி அவனைத் தொட்டு...

மாற்கு 1: 41

இயேசு அந்தக் குஷ்டரோகியைக் குணப்படுத்துவதற்காக அவனைத் தொட்டபோது, அவன் என்ன உணர்வை அடைந்திருப்பான்? பல வருடங்கள் நோய்வாய்ப்பட்டிருந்து, எல்லாராலும் வெறுத்து ஒதுக்கப்பட்ட நிலையிலிருந்த ஒருவனை, அன்புடன் அவனைக் குணப்படுத்துவதற்காக அவன் மேல் ஒரு கை வைக்கப்படும் போது அவனது மனநிலை எப்படி இருந்திருக்கும்.

அந்தக் குஷ்டரோகிகளின் மனநிலை எப்படி இருந்திருக்கும் என்பதை நான் நன்கு அறிவேன். பல வருடங்களாக எனக்குச் சருமவியாதி இருந்தது. என்னைப் பார்த்தவர்கள் முகஞ்சுளிப்பதையும், என்னைப் பற்றி வெறுப்பாகப் பேசுவதையும், நான் அறிவேன். வெளித் தோற்றத்தைப் பார்த்து என்னை வெறுக்காமல், உண்மையான என்னைப் பார்த்து, என்னை நேசிக்க மாட்டார்களா என்று நான் ஏங்கியதுண்டு.

மற்றவர்கள் வெளித்தோற்றத்தைப் பார்க்கும்போது, கிறஸ்து மற்றவர்கள் காணாத இருதயத்தைப் பார்க்கிறார். நாம் நேசிக்கப்படத்தக்கவர்களல்ல. என்று யார் நினைத்தாலும், கிறிஸ்துவின் மூலம் நாம் நேசிக்கப்படத் தக்கவர்கள் என்பதை அறிவோம்.

இயேசு இவ்வுலகில் வாழ்ந்தபோது ஒவ்வொருவரிலும் கரிசனை யுள்ளவராக இருந்தார். நோயுற்றோர், சமுதாயத்தில் ஒதுக்கப்பட்ட வர்கள், குற்றவாளிகள் இப்படிப்பட்ட எல்லாரையும் நேசித்தார். நம்மையும் அவர் நேசிக்கிறார். வாழ்க்கையில் நம்முடன் கூட வருகிறார். நம்மிற் கரிசனையுள்ளவராயிருக்கிறார். நாம் அழைக்கும்போது அவர் நம்மைத் தொடுகிறார். அவர் நம்மைத் தொடுவதன் மூலம் தம்முடைய பிரசன்னத்தை நமக்குத் தெரியப்படுத்துகிறார்.

ஜெபம்: ஆண்டவரே, நீர் எங்களை என்ன நிலையிலும் நேசிப்பதற்காக நன்றி. நாங்களும் மற்றவர்களை நேசிக்க எங்களுக்கு உதவும். ஆமென்
**நாளுக்குரிய சிந்தனை:** நாங்கள் இருக்கும் நிலையிலேயே கிறிஸ்து நம்மை நேசிக்கிறார்.
ஜெபத் தேவை: தீராத வியாதி உள்ளவர்களுக்காக.

## பரிசுத்த ஆவி

வாசிக்கவும். யோவான் 14:15-27

என் நாமத்தினாலே பிதா அனுப்பப்போகிற பரிசுத்த ஆவியாகிய தேற்றர வாளனே எல்லாவற்றையும் உங்களுக்குப் போதித்து, நான் உங்களுக்குச் சொன்ன எல்லாவற்றையும் உங்களுக்கு நினைப்பூட்டுவார்.

யோவா 14:26

கடந்த சில நாட்களுக்கு முன்னர் எனது தாயார் புற்று நோயின் காரணமாகக் காலமாகிவிட்டார். இது எதிர்பார்க்காத ஒரு காரியமாகும். எனது மகள் தனது உயர் கல்வியை முடித்து வெளியேறும்போது பாடசாலையில் நடைபெறும் விழாவிற்குப் பாட்டி வரவேண்டும் என்று வெகுவாக எதிர்பார்த்திருந்தாள். எனது மகன்,தான் பங்கு பற்றும் விளையாட்டைப் பாட்டி வந்து பார்க்கவேண்டும் ஏ்னறு விரும்பியிருந்தான். நானும் எனது சகோதரியும் எமது தாயாருடன் அதிக நேரத்தைச் செலவிட்டு நமது குடும்பப்பாரம்பரியங்கள், குடும்பத்தைப் பற்றிய பழைய சம்பவங்கள் ஆகியவற்றைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டும் என்று எண்ணியிருந்தோம்.

பல நாட்களுக்கு முன்னர் நான் வாசித்த யோவான் எழுதிய சுவிசேஷப் பகுதியில்ஆவியானவரைப் பற்றிக் கூறப்பட்டிருப்பது எனது ஞாபகத்திற்கு வந்தது. எனக்கு ஏற்பட்டிருந்த ஆழ்ந்த துக்கத்தில் எனக்கு ஆறுதலைத்தருபவர் அந்த ஆவியானவரே.

பெந்தெக்கொஸ்தே நாள் சம்பவத்திற்கு முன்னால் கடவுள் தமது தீர்க்க தரிசிகள் மூலம் மனித சமுதாயத்துடன் பேசினார். தமது மக்களுடன் அருகிலேயே இருந்தார். பெந்தெக்கொஸ்தே தினத்தன்று, கற்பனை பண்ணமுடியாத அவரது கிருமையினாலே பரிசுத்தாவியான வரை கிறிஸ்துவின் சீடர்கள் எல்லார்மேலும் இறங்கப் பண்ணினார். இப்பிரதேசத்தின் தேவன் நம்மோடு அல்ல நமக்குள் வாசம் பண்ணுவதற்கு வந்திறங்கினார். நாம் அவருடன் ஒன்றாக இணைந் துள்ளோம். அன்புடன் அவர் நம்மை இடைவிடாமல் ஆறுதற்படுத்து கிறவராயிருக்கிறார்.

ஜெபம்: ஆண்டவரே, பரிசுத்தாவியினால் எம்மை நிரப்பி, அன்பினால் எம்மை ஆறுதற்படுத்தும். ஆமென்

நாளுக்குரிய சிந்தனை: கடவுள் நம்மோடு மட்டுமல்ல, நம்முள்ளும் இருக்கிறார்.

ஜெபத் தேவை: துயரப்படுவோருக்காக.

## கிறிஸ்துவின் முகம்

வாசிக்கவும். சங்கீதம் 27: 7-10

இருளிலிருந்து வெளிச்சத்தை ஒளிவீசச் சொன்ன தேவன், இயேசு கிறிஸ்துவின் முகத்திலுள்ள தமது மகிமையின் அறிவாகிய ஒளியைத் தோன்றப் பண்ணும் படியாக எங்கள் இருதயங்களிலே ஒளிவீசச் செய்தார்.

2 கொரி 4:6

என்னைச் சுற்றிலும் எனக்குள்ளும் இருந்த வேதனைகளின் காரணமாக எனது வாழ்க்கை இருளாகியிருந்தது. பலகாலமாக நான் காலையில் தேகப்பயிற்சியை முடித்துக் கொண்டு வேதவாசிப்பு, தியானம் ஆகிய வற்றில் ஈடுபடுவேன். ஆனால் இப்போ அதற்கு நேரம் ஒதுக்குவதில்லை. அதைக் கைவிட்டுவிட்டேன். இப்போதும் தேகப்பயிற்சி செய்கிறேன். ஆனால் ஜெபிப்பதில்லை.

ஒரு நாள் மாலையில் நான் எனது அறைக்குட்சென்று நாற்காலியில் அமர்ந்திருந்து அறையைச் சுற்றிப்பார்த்தேன். யன்னலினூடாக, சூரிய ஒளிக்கீறு ஒன்று எனது புத்தக அலுமாரியில் படிந்திருந்தது. அதை நான் உற்றுக்கவனித்தபோது, நான் அங்கு வைத்திருந்த கிறிஸ்துவின் சிலையின் மேல் அந்த ஒளிபடுவதைக் கண்டேன். குறிப்பாக ஒளி முகத்திலே பட்டதனால், அந்த முகம் பிரகாசமாக இருந்தது. அது தற்செயலான நிகழ்வாக எனக்குத் தோன்றவில்லை. சிறிது நேரம் அதைப்பார்த்துக் கொண்டிருந்தபோது, எனக்கு ஒரு செய்தி தரப்படுவதை உணர்ந்தேன். ''கிறிஸ்துவைப் பார். உன்னுடைய வேதனைகள் எவ்வளவு பெரிதாக இருந்தாலும் கிறிஸ்துவை நோக்கிப்பார். ஏனெனில், அவர் அறிந்திராத வேதனைகள் இல்லை. அவரிடத்தில் உன் வேதனைகளுக்கு ஆறுதல் கிடைக்கும்.''

கிறிஸ்துவின் முகத்திற்பட்ட அந்த ஒளி என்னைச் சுற்றியிருந்த இருளிலும் பட்டு, எனது ஆவிக்குரிய குழப்பத்தை நீக்கியது. இயேசு கிறிஸ்துவின் முகப் பிரகாசம் எந்த இருளையும் உடுருவிச் செல்லக் கூடியது என்பதை நான் அன்று தெரிந்து கொண்டேன்.

ஜெபம்: கிருபையுள்ள கடவுளே, வேதனைகள் சந்தேகங்கள் எங்களை மேற்கொள்ளும்போது, கிறிஸ்துவை நோக்கிப் பார்க்க, எங்களுக்குக் கற்பித்தருளும். அப்போ அவருடைய முகப்பிரகாசம் எமது இருளை நீக்கிவிடும்.. ஆமென்

நாளுக்குரிய சிந்தனை: கடவுளுடைய ஒளி ஊடறுக்க முடியாத எந்த இருளும் இல்லை.

ஜெபத் தேவை: ஆவிக்குரிய பிரச்சனையில் சிக்கியுள்ளவர்களுக்காக.

# ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள்

வாசிக்கவும். 1 யோவான் 4:7-16

அன்பானவர்களே, ஒருவரிலொருவர் அன்பாயிருக்கக் கடவோம்; ஏனெனில், அன்பு தேவனால் உண்டாயிருக்கிறது.

1 யோவான் 4:7

எமது எண்ணங்கள், நோக்கங்கள் யாவற்றிற்கும் அடிப்படையாகவும் ஆதரவாகவும் அமைந்திருப்பது அன்பேயாகும். 20 வருடங்களின் முன், எனது ஊழியத்தை ஆரம்பித்தபோது, இந்தக் கடினமான ஆனால் முக்கியமான பாடத்தை நான் கற்றுக் கொண்டேன்.

எனது சபையிலே ஒரு மனிதர் இருந்தார், அவரில் அன்பு செலுத்துவதல்ல அவரை விரும்புவதே எனக்கு மிகவும் கஷ்டமான காரியமாக இருந்தது. அவர் சபை நிகழ்ச்சிகளில் பங்கு பற்றுவதை நான் வெறுத்தேன். அந்த மனிதருடைய எண்ணங்கள் சிந்தனைகள் ஆகியவற்றை என்னால் ஏற்றுக்கொள்ள முடியாதபடியால், அந்த மனிதனை மாற்றும்படி தினமும் ஜெபித்தேன். ஆனால் ஒருநாள், இந்த வேதப்பகுதியினூடாகக் கடவுள் என்னுடன் பேசி என்னுடைய எண்ணங்களையும் நோக்கங்களையும் மாற்றினார்.

அந்த மனிதரைப் பற்றிய எனது எண்ணங்கள் பிழையானவை என்று உணர்த்தப்பட்டேன். பிழையான எண்ணம், பிழையான முறையில் ஜெபிக்க என்னை வழிநடத்திவிட்டது. மற்றவர்களை மாற்றவேண்டும் என்பதற்குப் பதிலாக கடவுளுடைய கிருபை என்னை மாற்ற வேண்டும் என்று ஜெபிக்க ஆரம்பித்தேன். நான் மற்றவர்களை விரும்புவதால் அவர்களில் அன்பு கூருவதல்ல. நமக்கு அருளப்பட்ட பரிசுத்த ஆவியினாலே தேவ அன்பு நம்முடைய இருதயங்களில் ஊற்றப்பட்டிருக்கிறபடியால், நான் அன்பு கூருகிறேன். (ரோமர் 5:5)

எனது பங்கு ஒவ்வொருவரையம் ஏற்றுக் கொள்வதேயாகும். நான் எப்படி இருக்கிறேனோ அப்படியே கடவுள் என்னை ஏற்றுக்கொள்கிறார். ஆகவே நானும் மற்றவர்களை ஏற்றுக் கொள்ள முடிகிறது. இந்த உண்மையை நான் அறிந்தவுடன், எனது உள்ளத்திலிருந்த பாரம் நீங்கி யோவான் கூறியபடி மற்றவர்களில் அன்பாயிருக்கிறேன்.

ஜெபம்: அன்பான கடவுளே, நாங்கள் விரும்பாதவர்களைப் பற்றிக் கொண்டிருக்கும் அபிப்பிராயத்தை மாற்றிக் கொள்ள உதவி செய்யும். நீர் எங்களை நேசிப்பது போல் மற்றவர்களை நாங்கள் நேசிக்க எம்மை வழிநடத்தும். ஆமென்

நாளுக்குரிய சிந்தனை: கிறிஸ்துவின் நாமத்தினால் இன்று நான் யாரை நேசிக்க வேண்டும்?

ஜெபத் தேவை: நான் விரும்பாதவர்களுக்காக.

## ஆதாமின் மேல் முறுமுறுத்தல்

வாசிக்கவும். ஆதியாகமம் 2:15, 3:17-19

நீங்கள் கர்த்தராகிய கிறிஸ்துவைச் சேவிக்கிறதினாலே, எதைச் செய்தாலும் அதை மனிதர்களுக்கென்று செய்யாமல், கர்த்தருக்கென்றே முழு மனதோடே செய்யுங்கள்.

கொலோசெயர் 3:23-24

பல வருடங்களுக்கு முன் நாங்கள் எங்கள் சொந்த வீட்டிற்குக் குடிவந்தவுடன், அங்கு ஒரு மரக்கறித் தோட்டத்தை உருவாக்க விரும்பினோம். நிலத்தைப் பண்படுத்துவதற்கு எங்களிடம் இயந்திர சாதனங்கள் ஒன்றும் இருக்கவில்லை. நிலத்தைக் கொத்துவது, கற்கள், களைகளை அகற்றுவது போன்ற நிலத்தைப் பண்படுத்தும் வேலைகள் யாவும் கைகளினாலேயே செய்தோம். மிகக் கடினமானவேலை. வேலை செய்யும்போது, ஆதாமையும் ஏவாளையும் நினைத்து முறுமுறுத்தேன். அவர்கள் கீழ்ப்படியாமற்போன போதுதானே, கடவுள் மண்ணைப் பண்படுத்தும்படி அனுப்பினார்.

எமது கடினமான உழைப்பின்பயனாக, சத்துள்ள மரக்கறிகளையும் இனிமையான பழக்களையும் உண்ணும் பாக்கியம் எமக்குக் கிடைத்தது. ஆனால் ஆதாமின் விழுதலுக்கு முன்பாகவே கடவுள் ஏதேன் தோட்டத்தில் அவனைவிட்டு தோட்டத்தைப் பண்படுத்தவும் காக்கவும் கட்டளை யிட்டிருந்தார். மனிதன் வேலை செய்யவேண்டுமென்பது கடவுளின் திட்டம். படைக்கும் வேலையைக் கடவுள் செய்தார். ஓய்வும் எடுத்தார். இன்று நாம் அவர் படைத்தவற்றைக் காக்கும் பணியில் அவருடைய பங்காளிகளாக இருக்கிறோம். அதன் பயனாக, நோயாளிகள். குழந்தைகள். வயோதிபர் ஆகியோரைப் பராமரிக்கக் கூடியதாக இருக்கிறது.

**ஜெபம்:** ஆண்டவரே, நீர் எங்களுக்குத்தந்திருக்கிற திறமைகளுக்கும் சந்தர்ப்பங்களுக்கும் நன்றி. நீர் தந்திருக்கும் கொடைகளை மற்றவர்களுடன் பங்கு கொள்ளவும். உமக்கு நாங்கள் சேவை செய்யவும் எம்மை வழிநடத்தும். ஆமென்

**நாளுக்குரிய சிந்தனை:** நல்ல வேலை கடவுளாற் தரப்படும் கொடையாகும்.

**ஜெபத் தேவை:** தோட்டக்காரர்களுக்காக.

## பாதைக்கு வெளிச்சம்

வாசிக்கவும். சங்கீதம் 119:105-111

கர்த்தராகிய தேவரீர் என் விளக்காயிருக்கிறீர். கர்த்தர் என் இருளை வெளிச்சமாக்குகிறவர். உம்மாலே நான் ஒரு சேனைக்குள், பாய்ந்து போவேன், என் தேவனாலே ஒரு மதிலைத் தாண்டுவேன்.
2 சாமுவேல் 22:29-30

எனது வழக்கு விசாரணை ஒன்றைப் பற்றி எனது நண்பர் ஒருவருடன் பேசிக் கொண்டிருந்தேன். இந்த வழக்கின்முடிவு எப்படி இருக்கும் என்று ஆரம்பத்திலேயே தெரிந்தால் நலமாயிருக்கும் என்று எண்ணினேன். ''கடவுள் எமது கால்களுக்கு மட்டும் வெளிச்சத்தைத் தராமல், போகும் பாதை முழுவதும் தெரியம்படி வெளிச்சத்தை வைத்தால் நலமாயிருக்கும்.'' என்று என் நண்பனிடம் கூறினேன். பின்னர் அதைப் பற்றிச் சிந்தித்தபோது, பாதை முழுவதும் வெளிச்சமாயிருந்தால் நாங்கள் முன்னே செல்லமாட்டோம். ஏனெனில் வழியில் வரக்கூடிய ஆபத்துக்களையும் கண்டுகொள்வோம். முடிவு நல்லதாக இருக்குமென்று தெரிந்தாலும், பயத்தினால் முன்செல்ல மாட்டோம்.

இயேசுவும் சிலுவை மரணத்தின் நன்மையை அறிந்திருந்தாலுங் கூட உடனே முன்செல்லவில்லை. ''பிதாவே இந்தப் பாத்திரம் என்னைவிட்டு நீங்கக் கூடுமானால் என்னைவிட்டு நீங்கும்படி செய்யும். என்றாலும் என்னுடைய சித்தப்படியல்ல. உமது சித்தப்படியே ஆகக்கடவது,'' என்று ஜெபித்தார். நாம் இரட்சிக்கப்படவேண்டும் என்பதற்காக அவர் முன் சென்றார். நாங்கள் ஒவ்வொரு அடியாக எடுத்துவைக்கத்தக்க தாகத்தான் எங்களுக்கு வழிகாட்டப்படுகிறது. தேவையானபோது, கூடுதலாகவும், காட்டப்படும். கடவுள் நமக்கு முன்னே வைத்திருக்கும் பாதையில் சிறிது சிறிதாக முன்னேறுவோம். தினமும் அவருடைய வெளிச்சம் நம்மை வழிநடத்த, அவரை முற்றுமாக நம்பி விசுவாசித்து முன்னோக்கி நடந்து செல்வோமாக.

ஜெபம்: ஆண்டவரே, உம்முடைய வழியிலெ எம்மை நடத்தும். யேசுவின் மூலம் வேண்டி நிற்கிறோம். ஆமென்

நாளுக்குரிய சிந்தனை: நாம் எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடிக்கும் கடவுள் வெளிச்சம் தருகிறார்.

ஜெபத் தேவை: சட்டத் தரணிகளுக்காக.

## விசுவாசத்தைப் பகிர்ந்துகொள்ளல்

வாசிக்கவும். ரோமர் 10:8-14

அவரை விசுவாசியாதவர்கள் எப்படி அவரை வழிப்படுவார்கள்? அவரைக் குறித்துக் கேள்விப்படாதவர்கள் எப்படி விசுவாசிப்பார்கள்? அவரைக் குறித்துப் பிரசங்கிக்கிறவன் இல்லாவிட்டால் எப்படிக் கேள்விப்படுவார்கள்?

ரோமர் 10:14

உதை பந்தாட்டக் காலம் ஆரம்பமாகிவிட்டது. வெற்றிக்கோப்பைக்காகப் பல குழுக்கள் பேட்டியிடும். ஒரு குறிப்பிட்ட பாடசாலைக் குழுவை அநேகர் ஆதரித்தனர். நானும் அதனை ஆதரித்தேன். அந்தக் குழு விளையாடும் போட்டிகளைப் பார்ப்பதற்கு நுழைவுச் சீட்டு பல நாட்களுக்கு முன்னதாகவே விலைப்பட்டுவிடும். எனது நண்பனொருவன் தனக்கும் சில நுழைவுச் சீட்டுக்கள் பெற்றுத்தரும்படி என்னைக் கேட்டான். நான் அந்தக் குழுவைப்பற்றி எல்லாருடனும் புகழ்ந்து பேசிக்கொண்டிருப்பது அவனுக்குத் தெரியம். நான் விரும்பும் குழுவுக்க ஆதரவு கொடுப்பதற்கு ஆட்களைச் சேர்ப்பதில் எனக்கு ஆர்வம் அதிகம்.

இதைப்பற்றி நான் பின்னர் யோசித்தபோது, கடவுளும் தனது விசுவாசக் கூட்டத்தில் ஆடுகளைச் சேர்ப்பவர்களைத் தேடுவார் என்ற எண்ணம் எனக்கு ஏற்பட்டது. இந்தக் குழுவைப் பற்றி மற்றவர்களிடம் பேசியதுபோல் இயேசு கிறிஸ்துவைப் பற்றி உற்சாகமாகவும் ஆர்வத்து டனும் நான் பேசியிருப்பேனா? எனக்கும் அவருக்குமுள்ள தொடர்பை எடுத்துக் கூறியிருப்பேனா?

எனக்கு முக்கியமான காரியங்களை எவ்வளவு உற்சாகத்துடனும் ஆர்வத்துடனும் பேசுகின்றேனோ அதே உற்சாகம், ஆர்வம் ஆகியவற்று டன் சந்தர்ப்பங்கிடைக்கும் போதெல்லம் எனது விசுவாசத்தை மற்றவர் களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டுமென்று கடவுள் விரும்புகிறார். கிறிஸ்தவர்களாகிய எமது விசுவாசத்தை அறிக்கையிடுவது இலகுவான காரியமாகும்.

ஜெபம்: ஆண்டவரே, எமக்கு மகிழ்ச்சியைத் தரும் நல்ல காரியங்களுக்காக உமக்கு நன்றி செலுத்துகிறோம். ஆனால் கிறிஸ்துவுடனான எமது உறவுதான் முக்கியமானது என்பதை நாங்கள் மறவாதிருக்க உதவி செய்யும். சந்தர்ப்பம் கிடைக்கும்பேது உற்சாகமாக மற்றவர்களுக்கு உம்மை அறிவிக்கக் கிருபை தாரும். ஆமென்

நாளுக்குரிய சிந்தனை: எனது பொழுதுபோக்குகளிலும் பார்க்கக் கடவுளுடைய காரியங்களில் உற்சாகமாக இருக்கின்றேனா?

ஜெபத் தேவை: சாட்சி பகரத் துணிவிற்காக.

# நெருங்கிய உறவு

வாசிக்கவும். 1 யோவான் 1:5-2:2

ஒருவன் பாவஞ் செய்வானானால் நீதிபரராயிருக்கிற இயேசு கிறிஸ்து நமக்காகப் பிதாவினிடத்தில் பரிந்து பேசுகிறவராயிருக்கிறார்

1 யோ 2:1

ஒரு திறமையான பியானோ இசைக் கலைஞர் ஒரு கடினமான பகுதியைக் கெட்டித்தனமாக பியானோவில் வாசிக்கக் கூடும். கேட்டுக் கொண்டிருப்பவர்கள் நன்றாக வாசித்தார் என்று கைதட்டி ஆரவாரஞ் செய்து உற்சாகப்படுத்துவார்கள். ஆனால் வாசித்தவருக்குத்தான் தெரியும் தான் வாசித்ததிலுள்ள குறை. அல்லது தான் இன்னமும் நன்றாக வாசித்திருக்கலாம். அல்லது தனக்கு இன்னமும் பயிற்சி போதாது என்பது.

கிறிஸ்தவத்தின் சரித்திரத்தை நாம் பார்த்தால் அநேகம் பரிசுத்தவான்கள் வாழ்ந்தார்கள் என்பதை நாம் காணலாம். அவர்களெல்லாரும் கடவுளுக்காகத் தூய்மையான வாழ்வு வாழ்ந்தார்களென்று நாம் வாசிக்கின்றோம். அவர்கள் கடவுளுடன் நெருங்கிய உறவை ஏற்படுத்தும்போது தான் மற்றவர்கள் அறியாத அல்லது அதை அறிய முடியாத பாவங்கள் தம்மிடம் இருப்பதை உணர்ந்து கொண்டனர். தேவையற்ற சிந்தனை, கடவுள் சொன்ன ஒரு காரியத்தைச் செய்யாமல் விடுதல், யாரையாவது வேதனைப்படுத்தக்கூடிய ஒரு வார்த்தை, இப்படிப்பல குறைகள் தம்மிடம் இருப்பதை உணர்ந்தனர்.

எல்லாப் பாவங்களையும் களைந்து விட்டதான ஒரு பூரண நிலைக்கு தாம் வந்து விட்டதாக அவர்கள் எண்ணவில்லை. அதைப் போலவே நாமும் கடவுளோடு நெருங்கிய உறவு கொள்ளும் போது தான் நமது குறைவுகள் நமக்குத் தெரியும். அதே நேரத்தில் அந்த உறவுதான் நாம் எமது குறைவுகளை நிறைவாக்கவும் கடவுளோடு ஐக்கியப் பட்டிருக்கவும் நம்மை வழிநடத்தும்.

ஜெபம்: அன்பின் ஆண்டவரே, நாங்கள் இன்னும் உம்மை நெருங்கி ஜீவிக்க எங்களுக்கு உதவியருளும். குறைவுகளை மன்னித்து எங்களை வழிநடத்தும். ஆமென்

நாளுக்குரிய சிந்தனை: நாம் கடவுளை அண்டிச் சேரும் போதுதான் எங்களை நாங்கள் நன்றாக அறிந்து கொள்ள முடியும்.

ஜெபத்தேவை: பூரணமாயிருக்க விரும்புவோருக்காக.

## கடவுளுடைய சமாதானம்

வாசிக்கவும். எபேசியர் 2:14-18

அவரே (கிறிஸ்து) நம்முடைய சமாதானமாயிருக்கிறார்.
எபேசியர் 2:14

அந்தத் தொலைபேசி அழைப்பு மிகவும் முக்கியமானதாக இருந்தது. எனது அயல்வீட்டுக்காரரின் சகோதரி கடுமையான வியாதியினால் அவசர சிகிச்சைப்பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார். வைத்தியர்கள் நம்பிக்கையில்லையென்று சொல்லிவிட்டார்கள் என்பது தான் அந்தச் செய்தி. நான் வைத்தியசாலைக்கு ஓடினேன். ஓடும்போது, ''ஆண்டவரே, எப்படி ஜெபிக்க வேண்டும் என்ற ஞானத்தைத் தாரும்'' என்று கேட்டுக் கொண்டே சென்றேன்.

அந்தச் சகோதரி நீண்ட நாட்கள் சுகவீனமுற்றிருந்தார் என்பதை நானறிவேன். அவ குணப்படவேண்டுமானால் ஒரு அற்புதம் நடைபெற வேண்டும். அவ மரணத்திற்குத் தன்னை ஆயத்தப்படுத்தியிருந்த ஒரு கிறிஸ்தவப் பெண். எதற்காக ஜெபிப்பது என்று தெரியாமல் கடவுளுடைய சமாதானத்தைக் கொடுக்கும்படி ஒரு சிறு ஜெபத்தைச் செய்தேன்.

வேதாகமத்தில் உள்ள வல்லமையுள்ள சொற்களில் ''சமாதானம்'' என்பதும் ஒன்று. ''சமாதானமும் அமைதியும்'',''உள்ளத்தில் சமாதானம்'' ஆகிய சொற் தொடர்களை நாம் அடிக்கடி கேட்டிருக்கிறோம். இது குறுகிய அர்த்தமுள்ளது. கிரேக்க மொழியிலுள்ள ''ஷாலோம்'' என்ற சொல்தான் சமாதானம் என்று மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. ஆனால் அதிலே வேறு சொற்களும் அடக்கப்பட்டுள்ளன. அவையாவன பூரணமானது, உறுதியானது, பாதுகாப்பு, ஆரோக்கியம், அமைதி, திருப்தி, நட்பு ஆகியவையாகும். எம்மிடத்தில் ஷாலோம் இருந்தால் எல்லாம் இருக்கும்.

சமாதானத்திற்கான எனது ஜெபம் கேட்கப்பட்டது. அந்தச் சகோதரி கடவுளண்டை சேர்ந்து விட்டாள். அங்கு கடவுளின் அளப்பரிய சமாதானத்தை அனுபவித்துக் கொண்டிருப்பாள்.

ஜெபம்: ஆண்டவரே, உமது சமாதானத்தினால் எங்களை நிரப்பும். நாங்கள் அதை அயலவர்களுடனும் நண்பர்களுடனும் பகிர்ந்து கொள்ளக் கிருபை தாரும். இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறோம். ஆமென்

நாளுக்குரிய சிந்தனை: கடவுளின் சமாதானம் எங்கள் தேவைகள் எல்லாவற்றையும் உள்ளடக்கியுள்ளது.

ஜெபத்தேவை: நோயுற்றிருப்போருக்காக.

## தன்னம்பிக்கையோடு ஜெபித்தல்

வாசிக்கவும். மத்தேயு 6:5-15

நாம் எதற்காக ஜெபிக்க வேண்டு மென்று அறியாமலிருக்கிறபடியால், ஆவியானவர் தாமே வார்த்தைகளால் வெளிப்படுத்த முடியாத பெருமூச்சுகளோடு நமக்காக மன்றாடுகிறார்.

ரோமர் 8:26

நான் ஒரு கிறிஸ்தவ வெளியீட்டு ஸ்தாபனத்தில் வேலை செய்கிறேன். அங்கு, ஒவ்வொரு திங்கள் காலையிலும் ஜெபக் கூட்டம் நடைபெறும். அங்கு வேலை செய்பவர்கள் முறைவைத்துக் கூட்டம் நடத்துவர். என்னுடைய முறைவந்தபோது, பகிரங்கமாக ஜெபிக்கப் பயத்தினால், குறிப்புகள் எடுத்து ஒரு ஜெபத்தை ஒழுங்காக எழுதினேன். ஜெப நேரத்தில் பாட்டுப் பாடியதும் வேதம் வாசித்ததும் எனது கவனத்திற் செல்லவில்லை. நான், ஆண்டவரே எனக்கு உதவி செய்யும் என்று மனதுக்குள் ஜெபித்துக் கொண்டிருந்தேன். இறுதியில் எல்லாம் நல்ல படியாக நடைபெற்றது.

சில காலத்திற்குப் பின்னர் சர்வதேச மாநாடு ஒன்றில் ஆங்கிலத்தில் ஜெபிக்கும்படி அழைக்கப்பட்டேன். முன்னறிவித்தல் இல்லாதபடியால் ஒரு ஆயத்தமும் செய்ய முடியவில்லை. கடவுளுக்கு நன்றி செலுத்தி ஒரு சிறிய ஜெபம் செய்யலாமென்று ஆரம்பித்தேன். ஆனால் ஒரு நீண்ட முழுமையான ஜெபத்தில் முடிந்தது. எனக்கே ஆச்சரியமாக இருந்தது. பகிரங்கமாக ஜெபம் அதுவும் பிறமொழியில். பின்னர் அதைப் பற்றி யோசித்தபோது, ஜெபிக்கும்போது நமது சொற்களைப் பற்றி நாம் கவலைப்படவேண்டியதில்லை. பரிசுத்தாவியானவர் நமக்காகப் பேசிக்கொண்டிருக்கிறார் என்பதை உணர்ந்தேன். எம்மைப் பொறுத்தவரையில் நமது வார்த்தைகளிற் பிழைகள் இருக்கலாம். ஆனால் கடவுள் எதிர்பார்ப்பதெல்லாம் எமது உள்ளத்தின் ஆழத்திலிருந்து நம்பிக்கையோடும் நன்றியோடும் வெளிவரும் சொற்களேயாகும்.

ஜெபம்: ஆண்டவரே, நாங்கள் பயத்தோடு ஏறெடுக்கும் ஜெபங்களை நீர் ஏற்றுக் கொள்வதற்காக நன்றி. ஆமென்

நாளுக்குரிய சிந்தனை: உண்மையான எந்தச் ஜெபத்தையும் கடவுள் அங்கீகரிப்பார்.

ஜெபத்தேவை: பகிரங்கமாக ஜெபிக்கப் பயப்படுபவர்களுக்காக.

# மெழுகும் நூலும்

வாசிக்கவும். சங்கீதம் 18

என்னைப் பலத்தால் உறுதிப்படுத்தி என் வழியைச் சரிசெய்பவர் தேவனே.
சங் 18:32

நான் அமெரிக்காவின் பழங்குடி மக்களின் வழி வந்தவன். எனது மூதாதையர் பல நூறு வருடங்களாகச் செய்து வந்த கைவினைப் பொருட்களில், மணிகளைக் கொண்டு செய்யும் அலங்காரப் பொருட்கள் செய்வதில் எனக்கு அதிகம் விருப்பம். ஒரு நாள் ஊசியில் நூலைக் கோர்த்து அந்த நூலில் மெழுகைப் பூசிக் கொண்டிருந்தேன். அப்போ அங்கு வந்திருந்த விருந்தினர்களில் ஒருவர் நான் செய்து கொண்டிருந்த வேலையைக் கவனித்து விட்டு, நூலுக்கு மெழுகு போடுவதன் அவசியம் என்ன என்று கேட்டார்.

நூலை மெழுகினால் மூடுவதனால் நூல் பெலனடைகிறது. ஒரு வகையில் மேலதிகமாகப் பலப்படுத்தப்படுகிறது என்று கூறலாம். நூல் பலமடைந்தால் அதிக நாட்கள் உபயோகிக்கலாம் என்பதை அவருக்கு விளக்கினேன்.

பின்னர் நான் இதைப்பற்றிச் சிந்தித்துப் பார்த்தேன். மெழுகு எப்படி அந்த நூலைப் பெலப்படுத்திப் பாதுகாக்கிறதோ, அதே போன்று தான் கடவுளில் இருக்கும் நமது நம்பிக்கையானது, நமது தினசரி வாழ்வில் நம்மைப் பாதுகாத்து வழிநடத்துகிறது. தினசரி வேதவாசிப்பு, ஜெபம், தியானம் ஆகியவற்றால் நமது விசுவாசத்திற்கு மேலதிக உறுதியைக் கொடுக்க முடியும். கடவுளே நமது பெலனின் ஆதாரம், அவரில் நமது இரட்சிப்பை உறுதிசெய்து கொள்ளமுடியும்.

ஜெபம்: சிருஷ்டிகரான கடவுளே, எங்கள் விசுவாசத்தைப் பெருக்கக் கூடிய உபகரணங்களைத் தருவதற்காக நன்றி. அவற்றை நாம் உபயோகிக்க எமக்கு உதவி செய்யும். ஆமென்

நாளுக்குரிய சிந்தனை: எமது விசுவாசத்தைப் பெலப்படுத்த வேண்டியவற்றைக் கடவுள் தருகிறார்.

ஜெபத்தேவை: அலங்காரப்பொருட்கள் செய்வோருக்காக.

# குறைவும் கீழ்ப்படிதலும்

வாசிக்கவும். யாத்திராகமம் 4:10-14

அதற்கு அவர் ''என் கிருபை உக்குப் போதும் பலவீனத்திலே என் வலலமை நிறைவாய் விளங்கும். என்றார். எனவே, கிறிஸ்துவின் வல்லமை என்மேல் தங்கும்படி என் பலவீனங்களைக் குறித்து நான் இன்னுமதிகமாகக் களிப்புடனே மேஃமை பாராட்டுவேன்.

2 கொரிந்தியர் 12:9

மோசேயின் கதையை வாசித்தபோது, நான் என்னைப் பற்றிச் சிந்தித்தேன். எத்தனை முறை கடவுளோடு வாதம் செய்திருப்பேன். ஒரு காரியத்தைச் செய்யும்படி கடவுள் என்னை ஏவுகிறார் என்று என் உள்ளத்தில் தெரிந்திருந்தும், பல சாக்குப் போக்குகள் சொல்லி, கீழ்ப்படியாமலிருந்திருக்கிறேன்.

ஆலய நிர்வாகத்தில் ஒரு பொறுப்புள்ள பதவியை வகிக்கும்படி கேட்கப்பட்டேன். ஓய்வு நாட்பாடசாலையைப் பொறுப்பேற்கும் படி கேட்கப்பட்டேன். பெண்கள் சங்கத்திற் பேசும்படி கூறினார்கள். எல்லாவற்றிற்கும் எனக்குப் பேச்சு வன்மை கிடையாது என்ற ஒரு காரணத்தைச் சொல்லித் தட்டிக் கழித்து விட்டேன். எனக்குப் பயம் ஏற்படும். நான் பேசுவதை யார் கேட்பார்கள். இப்படிப்பல சாட்டுக்கள். முயற்சி செய்ய விரும்பவில்லை. எனது பெலவீனத்தை ஈடுசெய்வதற்குக் கடவுள் தமது வல்லமையைத் தருவார் என்பதை நான் மறந்து விட்டேன். ஆரம்பித்திருக்க வேண்டியது எனது கடமை.

குறைவற்ற ஊழியனாக அல்ல. மனப்பூர்வமான கீழ்ப்படிவுள்ள ஊழியனாக வரும்படிதான் அவர் என்னை அழைத்தார். நான் கீழ்ப்படிந்தபோது அவர் வார்த்தைகளைத் தந்தார். வல்லமையைத் தந்தார். தரப்பட்ட வேலையை முடிக்குமளவும் அவர் கிருபை என்னோடிருந்தது. நான் சிறிது பெலவீனப்பட்டாலும் கடவுள் அங்கே இருந்தார்.

ஜெபம்: அன்பான கடவுளே, நாம் சவால்களை எதிர்கொள்ளும் போது. உமது பெலனை நோக்கிப் பாராமல், எமது பெலவீனங்களைப் பார்ப்பதற்காக எங்களை மன்னியும். எங்களுக்கு உதவி செய்ய நீர் அங்கே இருக்கிறீர் என்பதை நாங்கள் மறவாதிருக்க உதவி செய்தருளும். ஆமென்

நாளுக்குரிய சிந்தனை: குறைவற்றவர்களையல்ல கீழ்ப்படிபவர் களையே கடவுள் தேடுகிறார்.

ஜெபத்தேவை: கீழ்ப்படியாதவர்களுக்காக.

## நன்மை, தீமையை மேற்கொள்ளும்

வாசிக்கவும். லூக்கா 6:27-36

உங்களைத் துன்பப்படுத்துகிறவர்களுக்காக ஜெபம் பண்ணுங்கள்.
மத்தேயு 5: 44

எனது தாயார் தினமும் வேலை முடிந்து வந்தவுடன், தனது சக ஊழியர் தன்னை வார்த்தைகளாற் துன்புறுத்துவதாகக் கூறுவார். சில சமயங்களிற் சகிக்க முடியாத, தரக்குறைவான வார்த்தைகளை உபயோகிப்பதாகவும் கூறுவார். எனது தாயார் மற்றவர்கள் மேற் குற்றம் சொல்லவிரும்பாதவராகையால் எல்லாவற்றையும் பொறுமையோடு சகித்துக் கொள்வார். ஆனால் அவ எவ்வளவு வேதனைப் படுகின்றா என்பதை நானறிவேன்.

பல மாதங்கள் சென்றபின், எனது தாயாரிடம் நிலைமை எப்படி இருக்கிறது என்று கேட்டேன். நிலைமை சீரடைந்து விட்டதாகவும், தன்னை மிகவும் அன்பாகவம், மரியாதையுடனும் நடத்துவதாகவும் குறிப்பிட்டார். அந்தச் சக ஊழியர் மனம் மாறிவிட்டதை உணர்ந்தேன்.

அந்த மாற்றத்தின் காரணத்தை என் தாயாரிடம் கேட்டேன். தான் அந்தப் பெண்ணுக்காக ஜெபித்ததாகக் கூறினார். அதற்காக தான் அந்தப் பெண்ணை மன்னித்து, அந்தப் பெண்ணிடம் அன்பு காட்டி அதன் பின் அந்தப் பெண்ணிற்காக ஜெபித்ததாகக் கூறினா. அந்தப் பெண்ணைக் கோபித்து வெறுத்திருந்தால் நிலைமை மோசமாக ஆகியிருக்கும்.

மன்னிப்பும் ஜெபமும் அவர்களுடைய உறவில் மாற்றத்தைக் கொண்டுவந்து கடவுள் எங்களை மன்னிப்பது போல் நாங்களும் மற்றவர்களை மன்னிக்க வேண்டுமென்று கடவுள் எதிர்பார்க்கிறார். ஒத்துவராத உறவுகளை அன்பும் மன்னிப்பும் ஒத்துவரச் செய்யும்.

ஜெபம்: அன்பும் இரக்கமும் உள்ள கடவுளே, உமது அன்பினால் நாம் ஒருவரை ஒருவர் மன்னிக்கவும், உறவுகளில் சமாதானத்தை ஏற்படுத்தவும் கிருபை அளித்தருளும். இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறோம். ஆமென்

நாளுக்குரிய சிந்தனை: நல்ல உறவுகளுக்கு மன்னிப்பு அவசிய மானது.

ஜெபத்தேவை: கோபங்கொள்ளும் சக ஊழியர்களுக்காக.

# ஒரு புதிய பாடல்

வாசிக்கவும். பிலிப்பியர் 3:4-10

நமது தேவனைத் துதிக்கும் புதுப்பாட்டை அவர் என் வாயிலே கொடுத்தார். அநேகர் அதைக்கண்டு அஞ்சி, கர்த்தரை நம்புவார்கள்.
சங்கீதம் 40:3

எனது ஐம்பதாவது வயதில் என் குரல் வளத்தை விருத்தி செய்வதற்காக பல வருடங்கள் கற்பித்த அனுபவமுள்ள ஆசிரியர் ஒருவரிடம் சென்றேன். பாடவேண்டிய முறைகள், நுணுக்கங்கள் ஆகியவற்றை ஒரு பக்கத்தில் வைத்து விட்டு இயற்கையான முறையில் வாயை அசைத்துப்பாடடும்படி கூறினார். நாவை எப்படி வைக்கவேண்டும் என்பதை நினைக்க வேண்டாம் என்றார். நெஞ்சறையிலிருந்து காற்றை மேலெடுத்து வாய்வழியாக வெளியே விடும்படி கூறினார். பாடுவதிலுள்ள நுட்பங்களைப் பற்றிக் கேள்விகள் கேட்க ஆரம்பித்தேன். ''வாயை நன்றாகத் திறந்து பாடு'' என்று ஒரே வாக்கியத்தில் என்னை அடக்கிவிட்டார்.

பாடுவது அவ்வளவு இலகுவாக இல்லை. தினமும் பல தடவைகள் ஒழுங்காகப் பயிற்சி செய்தேன். பல நாட்களின் பின் ஒரு நாள் சரியான சுத்தமான ஓசையை என்னால் வெளிக்கொணர முடிந்தது.

குரல் பயிற்சியின்போது பல கேள்விகளையும் கேட்டு அவதிப்பட்டது போல் கடவுளைத் தேடும்போதும் பல கேள்விகளைக் கேட்டு அவதிப்பட்டு கடவுளைத் தவற விட்டுவிடுகிறோம். பிழையற்ற ஜெபம், ஒழுங்கு முறையான வேதப்படிப்பு இவற்றில் மட்டும் அதிக நேரம் செலவிடுவதை விட்டு, கடவுளுடைய வார்த்தையை வாசித்து, தியானித்து, அவர் பேசுவதைக் கேட்பதற்கு அமைதியாகக் காத்திருப்பது மேலானது. இப்போது எல்லாவற்றையும் கடவுளிடத்தில் ஒப்புக் கொடுத்துவிட்டு, அவருடைய பாடல்களைப் பாடிக் கொண்டிருக்கிறேன்.

ஜெபம்: அன்பான ஆண்டவரே, உமது சமுகத்தில் நாங்கள் அமர்ந்திருந்து, உமது அன்பை நாங்கள் அனுபவிப்பதை நீர் விரும்புவீர் என்பதை நாங்கள் அறிந்துகொள்ள எமது இருதயத்தைத் திறந்தருளும். ஆமென்

நாளுக்குரிய சிந்தனை: கடவுளைத் தேடுவதற்குச் சரியான வழியைத் தேடியலைவதை விட்டு கிறிஸ்துவைப்பின்பற்றவும்.

ஜெபத்தேவை: பாடகர்களுக்காக.

## பாதுகாப்பாக வீட்டிற்குத் திரும்புதல்

வாசிக்கவும். யோவான் 14:1-7

இயேசு தோமாவை நோக்கி, "நானே வழியும் சத்தியமும் வாழ்வுமாயிருக்கிறேன்" என்றார்.

யோவான் 14:6

நான் தினமும் காலையில் அந்தக் குளத்தைச் சுற்றி நடந்து வருவேன். இன்று மூடுபனி அதிகமாக இருந்தது. முன்னால் பத்தடி தூரத்தைப் பார்ப்பதே கஷ்டமாக இருந்தது. வானம் வெளிப்பாக இருக்கும் நாட்களில் வீடுகள் கட்டடங்கள், சூரிய ஒளியில் தண்ணீர் மினுங்குவது, யாவும் தெரியும். ஆனால் இன்று காலையில் ஒன்றுமே தெரியவில்லை.

அந்தக் குளத்திற்கு எதிர்ப்பக்கம் வந்தபோது எனது வீடு இருக்கம் பக்கம் திரும்பிப் பார்த்தேன். ஒன்றுமே கண்ணுக்குப் புலப்படவில்லை. ஆனால் எனது வீடு அங்கே இருக்கிறதென்பது நிச்சயம். எனக்கு முன் இருக்கும் பாதையிலே போனால் வீட்டிற்குப் போய்ச் சேருவேன் என்பதும் நிச்சயம்.

எமது கிறிஸ்தவ வாழ்விலும் வேதனைகள், பயங்கள், ஏமாற்றங்கள் ஆகியவை இந்த மூடு பனியைப்போல் இருக்கிறது. எமக்குப் பாதை சரியாகத் தெரிவதில்லை. ஆனால் கடவுள் நமக்குக் காட்டிய வழியில் நாம் நடந்தால், நாம் போகவேண்டிய சமாதானம், சந்தோஷம், அன்பு, நிறைந்த அந்த இடத்தைப் பாதுகாப்பாகச் சென்றடையலாம்.

இந்த உலக வாழ்வின் பயணமுடிவிலே கிறிஸ்து நமக்காகத் தயாரித்து வைத்திருக்கும் வீட்டிற்குப் பாதுகாப்பாகச் சென்று அவரை முக முகமாகத் தரிசிப்போம். மூடுபனியும் நிரந்தரமாக அகற்றப்பட்டு விடும்.

ஜெபம்: அன்பான ஆண்டவரே, இயேசுவே வழியும் சத்தியமும் வாழ்வுமாயிருக்கிறபடியால் நன்றி. ஆமென்

நாளுக்குரிய சிந்தனை: கடவுள் காட்டியிருக்கும் வழியில் நாம் நடந்தால் பாதுகாப்பாக வீடு போய்ச் சேரலாம்.

ஜெபத்தேவை: வீடு செல்லும் வழியைத் தேடுவோருக்காக.

## தெரிந்து வைக்கப்பட்ட நாள்

வாசிக்கவும். மாற்கு 3:1-6

ஓய்வு நாளைப் பரிசுத்தமாக ஆசரிக்க நினைப்பாயாக.

யாத்திராகமம் 20:8

இயேசு இவ்வுலகில் வாழ்ந்த காலத்தில் பரிசேயர்கள், ஓய்வு நாளை வேலை ஒன்றும் செய்யாத நாளாக வைத்திருப்பதில் மிகவும் அவதானமாக இருந்தார்கள். கடவுள் என்ன நோக்கத்திற்காக அந்தக் கட்டளையைக் கொடுத்தார் என்பதை முழுமையாகக் கருத்திற்கொண்டு அதைக் கைக்கொள்ளவில்லை. இந்த நாளில் நாம் பரிசுத்தமற்ற காரியங்களை எமது பேச்சினாலோ, நினைவினாலோ செய்கையினாலோ செய்யாமல் அந்த நாளைப் பரிசுத்தமாக வைத்திருந்து நற்காரியங்களைச் செய்யும் படியும் அந்த நாளில் ஓய்ந்திருந்து கடவுள் செய்த நன்மைகளை நினைந்து அவரைத் துதிக்க வேண்டும் என்பதே அவரது நோக்கமாயிருந்தது.

ஆரம்பத்தில் எதற்காகக் கட்டளை கொடுக்கப்பட்டதோ அந்த நோக்கத்தை எம்மில் எத்தனை பேர் கடைபிடிக்கின்றோம்? நாம் ஆலயத்திற்குச் செல்வது உண்மை. ஆனால் மிகுதி நேரத்தை நாம் எப்படிச் செலவு செய்கிறோம்? வாரத்தில் ஒரு நாள் வரும் இந்த நாளை, கடவுள் விரும்பியவழியிற் செலவு செய்ய முயற்சித்தால் தொடர்ந்து வரும் நாட்களிலும் கடவுளுக்குப் பிரியமாக வாழ்வதற்கு அவர் எங்களை வழி நடத்துவார். நாட்கள் வாரங்களாகி, வாரங்கள் மாதங்களாகி, மாதங்கள் வருடங்களாகி எங்கள் வாழ்நாள் முழுவதும் நாம் கடவுளுடைய சித்தப்படி வாழ்பவர்களாக மாறிவிடுவோம். ஓய்வு நாளைப் பரிசுத்தமாக ஆசரிக்கும்போது, எங்கள் பாவங்களை நாம் இலகுவாக அறிந்து அவற்றை விட்டுவிலக வாய்ப்புக் கிடைக்கிறது.

ஜெபம்: ஆண்டவரே, ஓய்வு நாளைப் பரிசுத்தமாக ஆசரித்து, எமது நினைவினாலும் பேச்சினாலும் கிரியையினாலும் உம்மைப் பிரியப்படுத்த முயற்சிசெய்ய எங்களை வழிநடத்தும். ஆமென்

நாளுக்குரிய சிந்தனை: கடவுள் சொல்வதைக் கவனமாகக் கேட்கும் நாளாக, ஓய்வு நாளை நான் எப்படி ஏற்படுத்த முடியும்?

ஜெபத்தேவை: சபை வழிகாட்டிகளுக்காக.

## இரவில் நான் பாடிய பாடல்

வாசிக்கவும்: ரோமர் 8: 26-27

என்னை உண்டாக்கினவரும், இரவிலும் கீதம் பாட அருள் செய்கிறவருமாகிய தேவன் எங்கே என்று கேட்பவன் ஒருவனுமில்லை.

யோபு 35:11

எனது ஒன்பது வயது மகனுக்கு இரத்தத்திற் புற்று நோய் ஆரம்பமாகிறது என்று கண்டுபிடிக்கப்பட்டது. மூன்று வருடங்கள் தொடர்ந்து சிகிச்சை செய்தால் குணமாகலாம் என்றார்கள். எனது குடும்ப அங்கத்தவர்களுக்கும் இந்தத் துன்பகரமான செய்தியைக் கூறினேன். சிகிச்சையும் தொடங்கப்பட்டது.

அந்த நாட்களில் எனது மகனின் பாடற்குழுவினர் ஒரு இசை நிகழ்ச்சியை நடத்தினர். அந்த இசை நிகழ்ச்சியில் சுவா ஹிலி மொழியில் பாடப்பட்ட ஒரு தாலாட்டுப்பாட்டு என் மனதை வெகுவாகத் தொட்டது. என்ன அர்த்தம் என்று தெரியவில்லை. ஆனால் அந்தப்பாடல் என் மனதில் நன்றாகப் பதிந்துவிட்டது. எனது மகனின் சிகிச்சை நேரங்களில் நான் அவனருகில் இருந்து இந்தப்பாடலைப்பாடுவேன். அது நான் தினஞ் செய்யும் ஜெபம்போலிருந்தது.

எனது மகன் குணமடைந்தான். எங்கள் வாழ்க்கையும் பழைய நிலைக்குத் திரும்பியது. நானும் எனது சங்கீது ஆசிரியைத் தொழிலுக்குச் செல்லத் தொடங்கினேன். வருடங்கள் பல கழிந்தன. ஒருநாள் சர்வதேச வலையமைப்பில் சிறுவர் பாடல்களைத் தேடிக் கொண்டிருந்தபோது, நான் பலவருடங்களின் முன் பாடிய அந்தப்பாட்டு காட்சியளித்தது. உடனே அப்பாடலின் வரிகளையும் அதன் மொழிபெயர்ப்பையும் பெற்றேன். அது ஆபிரிக்க நாட்டு பழங்குடிமக்களின் பாடல். அதன் மொழிபெயர்ப்பானது ''சூரியனின் தெய்வமே, இந்தப் பிள்ளையைக் காப்பாற்றும். இந்தப் பிள்ளை வளர்ந்து எமது கூட்டத்தில் உபயோகமானவனாக வளர உதவி செய்யும்.'' எனது மகன் சுகவீனமுற்றிருந்த காலத்தில், என்னை அறியாமலே இந்தப் பாடல் மூலமாக ஜெபித்திருக்கிறேன். நான் இரவில் பாடிய பாடலைக் கடவுள் கேட்டு விடை தந்திருக்கிறார்.

ஜெபம்: அன்பான கடவுளே, நாம் பாடுவதற்கு வார்த்தைகளைத் தாரும். ஆமென்

நாளுக்குரிய சிந்தனை: நாங்கள் ஜெபிப்பதற்கு அறியாமலிருக்கும் போது பரிசுத்தாவியானவர் நமக்காக ஜெபிக்கிறார்.

ஜெபத்தேவை: புற்று நோய்க்காக சிகிச்சையளிக்கப்படும் பிள்ளைகளுக்காக.

## கீழ்ப்படிதல் உள்ள விசுவாசம்

வாசிக்கவும் 1 யோவான் 1:1-3

அனனியா பவுலிடம் "நீ கண்டவைகளையும் கேட்டவைகளையும் குறித்து மனிதர் அனைவருக்கும் முன்பாக அவருக்குச் சாட்சியாயிருப்பாய்."

அப். நடபடிகள் 22:15

"உங்களை நீங்களே ஏமாற்றிக் கொள்ளாதபடிக்குத் திரு வசனத்தைக் கேட்கிறவர்களாக மட்டுமல்ல. அதற்கேற்றபடி செய்கிறவர்களாகவும் இருங்கள்" யாக்கோபு 1:22 இல் காணப்படும் இந்த வாசகம் என் கவனத்தைக் கவர்ந்தது நான் கிறிஸ்தவன் வேதத்தை நன்றாக வாசித்திருக்கிறேன். ஆனால் நான் வாசித்து நம்புகின்றவைகளுக்கு நான் கீழ்ப்படியத் தவறிவிட்டேன். அந்த நேரத்தில் தானே வார்த்தைக்குக் கீழ்ப்படிவதாக உறுதி செய்துகொண்டேன்.

அநேக கிறிஸ்துவர்கள். கிறிஸ்துவைப் பற்றி மற்றவர்களுக்குச் சொல்லக் கஷ்டப்படுவார்கள். நாங்கள் பிழையானதைச் சொல்லிவிடுவோமோ என்ற பயம் அடிக்கடி வருவதுண்டு. நாங்கள் கண்டதையும் அறிந்ததையும் மற்றவர்களுக்குச் சாட்சியாகக் கூறும்படி அழைக்கப்பட்டிருக்கிறோமேயல்லாமல் வேறொன்றுமில்லை. உண்மையும் கீழ்ப்படிதலுமே அவசியம். இறையியற் பட்டங்களல்ல. விசுவசமாயிருப்பது மட்டும் தான் எமது பொறுப்பு.

சாட்சி பகருவதற்காக நமக்கு விசேஷ சந்தர்ப்பங்கள் திறக்கப்படும் போது, கடவுள் நம்மிடம் எதிர்பார்ப்பது கிழ்ப்படிவை மட்டுமே பேச்சு வன்மையை அல்ல. கிறிஸ்துவைப்பற்றிய நற்செய்தியே நம்மிடமிருக்கும் மிகப் பெரிய சொத்து அப்படியானால் நாம் அதை மற்றவர்களுடன் பகிர்ந்துகொள்ள ஏன் தயங்க வேண்டும்? ஒருவர் கடவுளை அறிவதற்குக் காரணமாக இருந்தார் என்பதைத் தவிர வேறு என்ன பெரிய மதிப்பு நமக்குத்தேவை.

ஜெபம்: சர்வவல்லமையுள்ள கடவுளே, சாட்சி பகருவதற்கான வல்லமையை உமது ஆவியின் மூலமாக எமக்குத் தந்தருளும். இயேசுவின் மூலம் ஜெபிக்கிறோம். ஆமென்

நாளுக்குரிய சிந்தனை: கடவுளைப்பற்றிய உமது நம்பிக்கை எந்த அளவில் இருக்கிறது? யாருக்குச் சாட்சி சொல்லியிருக்கிறீர்?

ஜெபத் தேவை: கிறிஸ்துவைப் பற்றி எனக்குக் கற்பித்தவர்களுக்காக.

## விசுவாசிக்கக் கற்றுக்கொள்ளல்

வாசிக்கவும். லூக்கா 5:1-11

உன் சுய புத்தியின் மேல் சாயாமல், உன் முழு இருதயத்தோடும் கர்த்தரில் நம்பிக்கை வைத்து, உன் வழிகளிலெல்லாம் அவரை நினைத்துக் கொள். அப்பொழுது அவர் உன் பாதைகளை நேராக்குவார்.
நீதிமொழிகள் 3:5-6

ஆபிரிக்காவிலுள்ள கொங்கோ நாட்டிற்குச் சென்றிருந்த போது, ஒரு ஆலயத்திற்குச் சென்றிருந்தேன். அங்கு மேற்குறிக்கப்பட்ட நீதிமொழி களிலுள்ள வாக்கியங்கள் எழுதிப் போடப்பட்டிருந்தன. நான் அதைப் பல தடவைகள் வாசித்தேன். அந்த இடத்திலேயே அந்த நேரத்திலேயே நான் ஒரு தீர்மானம் செய்தேன். அது, எனது வாழ்வில் அதிக நேரத்தைக் கடவுளுக்காகச் செலவு செய்வது, எதிர்காலத்தில் கடவுளுடைய வழிநடத்தலிலேயே தங்கியிருப்பது என்பவையாகும். கடவுளுடைய அழைப்பு எனக்கு வந்திருக்கிறது என்பதை நான் முழுவதுமாக நம்பினேன்.

அந்த அனுபவத்தின் காரணமாக, எனக்காக வைக்கப்பட்டிருக்கும நீண்டகாலத் திட்டம் என்ன என்பதை என்னால் ஓரளவிற்கு ஊகிக்க முடிந்தது. எனக்கு முன் என்ன வைக்கப்பட்டிருக்கிறது என்பதை அறியாமல், குறுகியகாலத்திட்டத்தை நம்பித் தடக்குப்பட்டு விழுந்திருக்கிறேன்.

நீதிமொழிகள் 19:21ல் மனிதன் அநேக திட்டங்களை வைத்திருந்தாலும் கடவுளுடைய நோக்கமே நிறைவேறும் என்று கூறுகிறது. ஒவ்வொருவரையும் கடவுள் ஒரு விசேஷித்த நோக்கத்திற்காக அழைத்திருக்கிறார். நாங்கள் அசட்டையாகவும் தடுமாறுபவர்களாகவும் இருந்தாலும் கடவுளுடைய நோக்கம் நம்மில் நிறைவேறியே தீரும்.

ஜெபம்: அன்பான ஆண்டவரே, நாங்கள் உம்மை நம்பவும், உம்முடைய வழிநடத்தலுக்காகக் காத்திருக்கவும் எங்களுக்கு உதவி செய்தருளும். ஆமென்.

நாளுக்குரிய சிந்தனை: நாங்கள் தடுமாறினாலும் கடவுளைச் சேவிக்கலாம்.

ஜெபத் தேவை: இன்று தடுமாறியவர்களுக்காக.

## எல்லோரும் கடவுளின் பிள்ளைகளே

வாசிக்கவும். ரோமர் 13:8-10

நீங்கள் ஒருவரிலொருவர் அன்புள்ளவர்களாயிருந்தால், அதன் மூலம் நீங்கள் என்னுடைய சீடர்களென்று அனைவரும் அறிந்து கொள்வார்கள்.
யோவான் 13:35

எனது இரு பிள்ளைகளுடன் வைத்தியரிடம் சென்றேன். மகளுக்கு மூன்று வயது, மகனுக்கு இரண்டு வயது. அன்று புதியவைத்தியர் வந்திருந்தமையால் எனது மகனுடைய வியாதி பற்றி அவருக்கு விளக்கிக் கொண்டிருந்தேன். அந்த நேரத்தில் எனது மகள் வைத்தியரின் கையைப் பிடித்துக்கொண்டு ''உங்கள் உடல் முழுவதும் கறுப்பு நிறமா?'' என்று கேட்டாள்.

வைத்தியர் சிரித்தபடியே, ''ஆமாம்'' என்றார். உடனே அவள் ஓய்வு நாட் பாடசாலையிற் கற்பித்த பாடலைப் பாடினாள். ''இயேசு எல்லாரையும் நேசிக்கிறார். சிவப்பு, மஞ்சள், கறுப்பு, வெள்ளை எல்லா நிறத்தவரும் கடவுளின் பிள்ளைகளே. கடவுள் எல்லாரையும் நேசிக்கிறார்.'' என்பதுதான் அந்தப் பாடல். வைத்தியர் சந்தோஷத்துடன் எனது மகளைக் கட்டியணைத்தார். உடனே எனது மகள் வைத்தியரைப் பார்த்து, ''இந்த ஞாயிறு என்னுடன் ஆலயத்திற்கு வாருங்கள்'' என்று அழைப்பு விடுத்தாள். அவரும் வருவதாக ஒப்புக் கொண்டார்.

அப்படித்தான் நாங்கள் எல்லாரும் இருக்கவேண்டும். நாம் இருக்கின்ற நிலையிலேயே, மற்றவர்களை நேசிக்கவும், மற்றவர்களால் நேசிக்கப்படவும் வேண்டும். எவ்வித வேறுபாடுகளுக்கும் இடமளிக்கக் கூடாது. ஒருவரிலொருவர் அன்பு கூருங்கள் என்ற வாக்கியத்தை எனது மகள் எனக்கு நினைவூட்டினாள். இயேசு முதலில் நம்மை நேசித்தது போலவே நாமும் மற்றவர்களை நேசித்தால் இவ்வுலகம் எவ்வளவு இன்பமான இடமாக இருக்கும்.

**ஜெபம்:** சர்வ உலகிற்கும் கடவுளே, நிறம், சாதி, கலாச்சாரம், அந்தஸ்து ஆகியவற்றிற்கு அப்பால் பார்த்து, நீர் மற்றவர்களை நேசித்தது போல் நாங்களும் மற்றவர்களை நேசிக்கக் கற்றுத் தாரும். இயேசுவின் நாமத்தினால் ஜெபிக்கிறோம். ஆமென்

**நாளுக்குரிய சிந்தனை:** இன்று எனது அன்பு யாருக்குத்தேவை.

**ஜெபத் தேவை:** சாதிகளுக்கிடையில் ஒற்றுமைக்காக வேலைசெய்பவர்களுக்காக.

# கடவுளிடமிருந்து ஒரு வெகுமதி

வாசிக்கவும். புலம்பல் 3:22-24

இது கர்த்தர் உண்டாக்கிய நாள்; இதிலே களி கூர்ந்து மகிழக்கடவோம்.
சங்கீதம் 118:24

எங்கள் வீட்டு மாடியில் நின்று கிழக்குப் பக்கமாகப் பார்த்தபோது, சூரிய உதயத்தின் அற்புதமான காட்சியைக் கண்டேன். செம்மஞ்சள், சிவப்பு, மஞ்சள் ஆகிய நிறங்கள் ஒன்றாய்க் கலந்து, வீட்டின் முன் இருந்த குளத்திற் பிரதிபலித்தது. எனக்குத் தரப்பட்டிருக்கும் இந்த நாளின் கடமைகளைச் செய்வதற்காக நான் ஏன் இவ்வளவு அவசரப்படுகிறேன்? என்னை நானே கேட்டுக்கொண்டு அமர்ந்திருந்து சங்.118:24ம் வசனத்தைப் பலமுறை சொல்லிப்பார்த்தேன். தினமும் காலையிலே நான் சொல்லும் ஜெபமாக அந்த வசனம் இருந்தது. சூரிய உதயத்தின் அற்புதமான காட்சி, ஒவ்வொரு நாளும், கடவுள் தரும் கொடை என்பதை ஞாபகப்படுத்துகிறது.

சிருஷ்டியின் மகிமையை நாம் பார்க்கும்போது கடவுளுடன் உறவு கொள்வது இலகுவானதாக அமைந்து விடுகிறது. வாழ்க்கையின் அவசர ஓட்டத்தில் ஒவ்வொரு நாளும் கடவுள் தரும் கொடை என்பதை நினைக்கத் தவறி விடுகிறோம். ஆயினும், எந்தச் சூழ்நிலையிலும் கடவுள் நம்மோடிருக்கிறார் என்பதை நாம் விசுவாசித்தால், அவர் தருகின்ற ஒவ்வொரு நாளுக்காகவும் நாம் அவருக்கு நன்றி செலுத்தலாம்.

கர்த்தா உண்டாக்கிய இந்த நாளில் களி கூர்ந்து மகிழக்கடவோம் என்று சங்கீதம் 118:24 ல் கூறப்பட்டுள்ளது. சில சமயங்களில் கடவுள் தந்த இந்த நாளில் மகிழ்ச்சியாயிருப்பது கடினமானதாக இருக்கலாம். ஆனால், காலையில் அந்த நாளுக்காக நன்றி செலுத்திவிட்டு எனது வேலையை ஆரம்பித்தால், அந்த நாள் முழுவதும் மகிழ்ச்சியாக இருக்கலாம் என்பதை எனது அனுபவத்தில் நான் கண்டிருக்கிறேன். ஏன் நீங்களும் அந்த மகிழ்ச்சியை அனுபவிக்கக் கூடாது?

ஜெபம்: அன்பான ஆண்டவரே, நீர் எமக்குத் தந்திருக்கும் வாழ்வுக்காக நன்றி. நீர் எப்போதும் எங்களுடன் இருந்து எங்களை வழி நடத்துவதற்காக ஒவ்வொரு நாளையும் நன்றியோடு ஆரம்பிக்க உதவி செய்யும். ஆமென்

நாளுக்குரிய சிந்தனை: ஒவ்வொரு நாளையும் நன்றியோடு ஏற்றுக் கொள்ளும் போது, நாம் கடவுளைக் கிட்டிச் சேருகிறோம்.

ஜெபத் தேவை: ஒவ்வொரு நாளையும் சந்தோஷமாக ஏற்றுக் கொள்வதற்காக.

# கடவுளின் குழந்தை

வாசிக்கவும். யோவான் 13: 34-35

என் தகப்பனும் என் தாயும் என்னைக் கைவிட்டாலும், கர்த்தர் என்னை ஏற்றுக்கொள்வார்.

சங்கீதம் 27:10

அண்மையில் ஒரு விளையாட்டு வீரரைப் பற்றிய ஒரு கட்டுரை வாசித்தேன். அதிலே அவர் ''ஒரு சிறந்த வீரன்'' என்று வர்ணிக்கப்பட்டிருந்தார். நான் சிரித்தேன். நான் அறிந்தவரையில் ஒரேயொருவர் தான் அந்த வர்ணனைக்குத் தகுதியானவர். அவவின் முகத்தில் ஒரு காயத்தின் வடு இருந்தது. தலைமயிர் நரைத்திருந்தது. ஆனால் அவர் அழகாக இருந்தார். நான் ஒன்பது வயதாக இருந்தபோது அவவை மிகவும் நேசித்தேன். அவதான் எனது ஆசிரியை.

அந்தக் காலத்தில் நான் தேவையற்றவனாக, அன்புகாட்டப்படாதவனாக, எனக்குப் பழக்கமில்லாதவர்களோடு வாழ்ந்துவந்தேன். ஒரு நாள் சக மாணவனொருவன் எனது ஆசிரியையைப் பட்டப் பெயர் சொல்லி அழைத்தான். அதற்காக நான் அவனுடன் சண்டை போட்டேன். எனது ஆசிரியர் எங்கள் இருவரையும் எச்சரித்து, சண்டைபோடகக் கூடாதென்று கட்டளையிட்டார். அன்று முதல் நான் எனது ஆசிரியையின் செல்லப் பிள்ளையாக மாறிவிட்டேன். ஓய்வுநேரத்தில் நான் அவவுடன் அமர்ந்து பேசிக்கொண்டிருப்பேன். வேதத்திலிருந்து பல கதைகளைக் கூறுவார். கடவுள் எல்லாரையும் நேசிக்கிறார் என்ற முக்கிய விடயத்தை என் மனதிற்பதியச் செய்தார். முதன்முதலாக என்னை நேசித்தவர் எனது ஆசிரியையே.

ஒரு விளையாட்டு வீரனை, கைதட்டி உற்சாகப்படுத்துவது போல் எனது ஆசிரியைக்குச் செய்யவில்லை. ஆனால் அவர் மறுமைக்குள் பிரவேசித்தபோது அங்கு அவரைக் கைதட்டி ஆரவாரமாக வரவேற்றிருப்பார்கள் என்பது நிச்சயம். அவரால் பந்தை அடித்திருக்க முடியாது. ஆனால் கிறிஸ்துவின் அன்புக்கு என்னை அறிமுகப்படுத்தியிருந்தார். சமுதாயத்தின் கணக்குப்படி அவரது முகம் அழகற்றது. ஆனால் என்னுடைய பார்வையில அவரைப்போல் அழகானவர் இல்லை.

ஜெபம்: அன்பான கடவுளே, நீர் மற்றவர்களைப் பார்ப்பதுபோல், நாங்களும் பார்க்க உதவியருளும். ஆமென்

நாளுக்குரிய சிந்தனை: அன்பு காட்டுவதன் மூலம் நாம் மற்றவர் களுடைய வாழ்க்கையை மாற்றியமைக்க முடியும்.

ஜெபத் தேவை: கைவிடப்பட்ட குழந்தைகளுக்காக.

## சிறிய பொய்கள்

வாசிக்கவும். நீதிமொழிகள் 12:17-22

உண்மையுள்ளவன் நேர்மையான சாட்சியளிப்பான். பொய்ச் சாட்சிக்காரனோ வஞ்சகத்தை வெளிப்படுத்துவான்.

நீதிமொழிகள் 12:17

பல வருடங்களின் முன் நான் ஒரு வைத்தியரிடம் காரியாலய உதவியாளராக வேலை பார்த்து வந்தேன். ஒரு நாள் வேலை முடியும் வேளையில் தொலைபேசி மணி ஒலித்தது. வைத்தியர், ''அழைப்பவர் ஸ்மித் என்றால் நான் இல்லையென்று சொல்லிவிடு. மீண்டும் ஒரு முறை என்னால் அவருடன் பேச முடியாது.'' என்றார். ''அவராக இருந்தால் நீங்கள் வேலையாக இருக்கிறீர்கள் என்று சொல்கிறேன். நீங்கள் இங்கு இல்லையென்று நான் சொல்லமாட்டேன்.'' என்று பதிலளித்தேன்.

''ஒரு சிறிய பொய் சொல்லக் கூடாதா'' என்று அவர் எரிச்சலுடன் என்னைக் கேட்டது என்னைச் சங்கடத்தில் ஆழ்த்தியது. வைத்தியர் முழு நாளும் வேலை செய்து, களைத்திருக்கிறார் என்பது எனக்குத் தெரியும். ஆனால் அதற்காக நான் பொய் சொல்லத்தயாராக இருக்கவில்லை.

நான் அவரைப் பார்த்து, ''நான் சிறிய பொய் சொல்பவள் என்று உமக்குத் தெரிந்திருந்தால் என்னை வேலைக்குச் சேர்த்திருப்பீரா?'' என்று கேட்டேன்.

ஒரு நீண்ட நிமிடத்திற்கு அங்கு அமைதி நிலவியது. ''இல்லை, சேர்த்திருக்க மாட்டேன்.'' என்றார். சில சமயங்களில் உண்மை சொல்வதினாலும் பார்க்கப் பொய் சொல்வது எளிதானதுபோற் தோன்றலாம். ஆனால் நம்மைச் சுற்றியிருப்பவர்கள், நாம் பேசுவதையும், நமது வாழ்க்கையையும், உற்றுப்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். நாம் செய்யும் ஒவ்வொரு காரியங்களிலும் கிறிஸ்துவுக்குச் சாட்சிகளாயிருக்கும்படி நாம் அழைக்கப்பட்டுள்ளோம். நாங்கள் உண்மை பேசுவதனால் மற்றவர்களைக் கோபப்படுத்தினாலும் கடவுளுடைய பார்வையில் நாம் ஏற்றுக்கொள்ளப்படத்தக்கவர்களாயிருப்போம்.

ஜெபம்: ஆண்டவரே, உமது ஆவியானவர் நாம் சரியான பாதையில் நடப்பதற்குத் தூண்டுவதற்காக நன்றி. ஆமென்.

நாளுக்குரிய சிந்தனை: எமது கிறிஸ்தவ சாட்சியில் உண்மை ஒரு முக்கிய பங்கை வகிக்கிறது.

ஜெபத் தேவை: உண்மை பேசத்துணிவிற்காக.

# கடிவாள வாரைக் கைவிடு

வாசிக்கவும். பிலிப்பியர் 4:4-7

நீங்கள் எதற்கும் கவலைப்படாமல், எல்லாவற்றையுங் குறித்து உங்கள் விண்ணப்பங்களைத் துதியோடு கூடிய ஜெபத்தினாலும் மன்றாட்டத்தினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள்.
பிலி 4:6

நானும் எனது இரு சகோதரர்களும் எங்கள் வீட்டிற்குச் சிறிது தூரத்திலிருந்த ஆற்றிற்கு எங்கள் குதிரை வண்டியிற் சென்றோம். சிறிது உணவு, மற்றும் மீன்பிடிப்பதற்குத் தேவையான உபகரணங்கள் யாவுடனும் சென்றோம். மரங்கள் அடர்த்தியாக வளர்ந்திருந்த காட்டினூடாகச் செல்ல வேண்டியிருந்தது.

நாங்கள் ஆற்றையடைந்து, மீன்களைப்பிடித்து, சந்தோஷமாகப் பொழுதைக் கழித்துக் கொண்டிருந்தோம். மாலையானதும் திடீரென இடி முழக்கத்துடன் மழை ஆரம்பமானது. வானமும் இருண்டது. அங்கே மின்னலினால் அபாயம் ஏற்படலாம் என்று தெரியுமாதலால் விரைவாக வண்டியைப் பூட்டிக்கொண்டு வெளிக்கிட்டோம். பயமும் இருட்டும் இருந்தபடியால், சரியான பாதையைக் கண்டுபிடிக்க முடியவில்லை. எனது மூத்த சகோதரன், ''கடிவாள வாரைக் கைவிட்டால், குதிரை எங்களை வீட்டிற்குக் கொண்டு சேர்க்கும்.'' என்று கூறினார். அப்படியே நடைபெற்றது.

இதற்குச் சிலவருடங்களின் பின்பு நான் ஒரு பிரச்சனையில் அகப்பட்டிருந்தேன். அப்போது கடவுளை நோக்கி விண்ணப்பம் பண்ணினேன். அப்போது ''கடிவாளவாரைக் கைவிடு,'' என்று யாரோ சொல்வது போல் இருந்தது. நானும் கீழ்ப்படிந்தேன். எனக்கு இப்போ 98வயது. நான் கடிவாள வாரைக் கைவிட்ட அந்த நாளிலிருந்து எல்லாக் காரியங்களிலும் கடவுள் என்னை வழி நடத்தி வருகிறார். பயங்களும் ஏமாற்றங்களும் அகன்று மனதில் சமாதானம் தோன்றியுள்ளது.

ஜெபம்: கிருபையும் இரக்கமுமுள்ள கடவுளே, உம்முடைய அன்பின் வாக்குத் தத்தங்களை ஏற்று சமாதானம் பெறத்தக்கதான விசுவாசத்தை எங்களுக்குத் தாரும். ஆமென்

நாளுக்குரிய சிந்தனை: கடவுளுடைய கையில் நம்மை ஒப்புக்கொடுத்தால் அவர் நம்மை வழி நடத்திச் செல்வார்.

ஜெபத் தேவை: ஆபத்திலிருக்கும் பிள்ளைகளுக்காக.

## கடவுள் தந்த சந்தர்ப்பங்கள்

வாசிக்கவும். 1 கொரிந்தியர் 2:1-5

நான் பலவீனத்தோடும் அச்சத்தோடும் அதிக நடுக்கத்தோடும் உங்களிடத்தில் வந்தேன்.

1 கொரி 2:3

வளர்ந்தோருக்கான ஓய்வு நாட்பாடசாலை ஒன்று நடத்தும்படி கேட்கப்பட்டேன். ஏறக்குறைய நூறுபேர் வருவார்களென்றும், வேதத்தை நன்கு கற்ற, ஓய்வு பெற்ற ஊழியர்கள் ஒரு சிலரும் வகுப்பிற்கு வருவார்கள் என்று அறிந்தேன். எனக்குப் பயமாக இருந்தது. ஒரே வழி நன்றாகப்படித்து ஆராய்ச்சி செய்து ஆயத்தப்படுத்துவது தான் என்பதை உணர்ந்தேன். அதற்காகத் தியானம், வேதப்படிப்புக் குழுக்கள், நற்செய்தி பணி ஆகியவற்றில் இணைந்து படித்தேன். அங்குதான் கிறிஸ்துவைப் பற்றிய நற்செய்தியைப் பகிர்ந்து கொள்வதற்காக நான் அழைக்கப்பட்டுள்ளேன் என்பதை உணர்ந்தேன். என்னை ஆயத்தப்படுத்திக் கொண்டு சபைக் காரியங்களில் ஈடுபட்டேன்.

நான் எதிர்கொண்ட எல்லாச் சந்தர்ப்பங்களிலும் கொரிந்தியரில் கூறப்பட்ட வாக்கியத்திற்கே என்மனம் திரும்பத் திரும்பச் சென்றது. பவுலுக்கு ஏற்பட்ட அதேநிலைதான் எனக்கும் ஏற்பட்டது. பவுல் அப்போஸ்தலன் நற்செய்தியைப் பரப்புவதற்குத் துணையாக இருந்த பரிசுத்தாவியானவர் எனக்கும் துணையாக இருப்பார்.

ஆம் பரிசுத்தாவியானவர் எனக்குத் துணையாக வந்தார். கடவுளுடனான எனது உறவு மென்மேலும் வளருகின்றது. அவர் எனக்குத் தருகின்ற ஒவ்வொரு சந்தர்ப்பத்தையும், நான் ஏற்று நற்செய்தியைப் பகிர்ந்து கொள்கிறேன்.

ஜெபம்: ஆண்டவரே, உமக்குப் பணி செய்து மற்றவர்களை உம்மிடத்தில் கொண்டுவரக் கூடிய சந்தர்ப்பங்களை நீர் எமக்குத் தருவதற்காக நன்றி. தொடர்ந்தும் உமது வேலையாட்களாக எம்மை உபயோகியும். ஆமென்

நாளுக்குரிய சிந்தனை: கடவுள் எதற்காக நம்மை அழைத்தாரோ அதை நிறைவேற்றுவதற்குப் பரிசுத்தாவியானவர் நமக்குத் துணை செய்கிறார்.

ஜெபத் தேவை: பயப்படும் வழிகாட்டிகளுக்காக.

# மாற்றத்தை உருவாக்குதல்

வாசிக்கவும். 1 சாமுவேல் 3

ஏலி சாமுவேலை நோக்கி, நீ போய்ப்படுத்துக் கொள். உன்னைக் கூப்பிட்டால் அப்பொழுது நீ கர்த்தாவே சொல்லும், அடியேன் கேட்கிறேன் என்று சொல் என்றான்.

1 சாமு 3:9

இன்றைய் வேத வாசிப்புப் பகுதியிலே, ''சாமுவேல் இன்னும் கர்த்தரை அறியாதிருந்தான்.'' என்று கூறப்படுகிறது. ஆயினும் கடவுள் அவனுக்கென்று ஆச்சரியமான ஒரு திட்டத்தை வைத்திருந்தார். சாமுவேலின் பாதுகாவலன் என்ற முறையில் ஏலி, அவனுடைய வாழ்வில் ஒரு முக்கிய பங்கை வகிக்கிறான். கடவுளுடைய வார்த்தைக்கு எப்படிக் கீழ்ப்படிய வேண்டும் என்று சாமுவேலுக்குக் கற்பிக்கிறான். கடவுள் தன்னுடைய திட்டத்தை நிறைவேற்றுவதற்காக ஏலியை உபயோகிக்கிறார்.

ஏலி செய்த அந்தச் சிறிய காரியத்தை ஒருவரும் பெரிதாகக் கணிப்ப தில்லை. ஆனால் அது சிறுவன் சாமுவேலைக் கடவுளுடன் தொடர்பை ஏற்படுத்தியது. பிற்காலத்தில் இஸ்ரவேலில் பெரிய மாற்றத்தை ஏற்படுத்த வழிவகுத்தது. சில வேளை ஏலியின் வழிநடத்தல் இல்லாமலிருந்தி ருந்தால், சாமுவேல் கடவுளின் தீர்க்க தரிசியாக வந்திருப்பாரோ தெரியாது.

நான் ஒரு ஓய்வு நாட்பாடசாலை ஆசிரியர். எனது பாடங்களை ஆயத்தஞ் செய்வதினால் இவ்வுலகில் பெரிய மாற்றங்களை ஏற்படுத்திவிட முடியாது. ஆனால் எனது பொறுப்பிலிருக்கும் ஒவ்வொரு பிள்ளைக்கும், சாமுவேலைப் போன்று கடவுள் ஒரு திட்டத்தை வைத்திருக்கிறார் என்பதை நானறிவேன். அவர்களால் தான் இவ்வுலகில் மாற்றங்கள் ஏற்படும். ஏலியைப் போன்ற பலர் நம்மத்தியில் இருக்கிறார்கள். மற்றவர்களுக்குத் தெரியாவிட்டாலும் பிள்ளைகள் கடவுளின் வார்த்தைக்குச் செவிகொடுக்க அவர்களை வழிநடத்துகிறார்கள். அவர்களுக்காக நான் கடவுளைத் துதிக்கின்றேன்.

ஜெபம்: கிருபையுள்ள கடவுளே, பிள்ளைகளுக்காக உம்மைத் துதிக்கிறோம். அவர்கள் உமது சத்தத்தைக் கேட்டு அவர்களை வழிநடத்த எமக்கு உதவும். ஆமென்.

நாளுக்குரிய சிந்தனை: ஒரு பிள்ளையின் வாழ்வில் சரியான மாற்றத்தை ஏற்படுத்த நான் என்ன செய்யலாம்?

ஜெபத் தேவை: பிள்ளைகளுடன் வேலை செய்பவர்களுக்காக.

# பலமுள்ளதாய் எழுப்பப்படும்

வாசிக்கவும். 1 கொரிந்தியர் 15:35-49

விதைக்கப்படும் சரீரம் அழிவுள்ளதாய் விதைக்கப்படும். அழிவில்லாததாய் எழுப்பப்படும் மதிப்பற்றதாய் விதைக்கப்படும் மகிமையுள்ளதாய் எழுப்பப்படும். பலவீனமுள்ளதாய் விதைக்கப்படும். பலமுள்ளதாய் எழுப்பப்படும். பிறவிச் சரீரம் விதைக்கப்படும். ஆவிக்குரிய சரீரம் எழுப்பப்படும்.

1கொரி 15:42-44

எனது பாட்டி ஒரு அழகான பூந்தோட்டம் வைத்திருந்தார். நான் சிறுவனாயிருந்தபோது பாட்டியின் மேற்பார்வையில் அங்கு வேலை செய்வேன். பாட்டிக்குப் பிடித்தமான மாறிகோல்ட் பூஞ்செடிகள் அதிகம் நடப்படும் அவற்றின் மலர்கள் மிக அழகாகவும் நறுமணம் வீசுவதாகவும் இருக்கும். ஆயினும் குளிர்காலம் ஆரம்பித்தவுடன் அச்செடிகள் வாடிப் பட்டுப்போகும். அவற்றின் காலம் முடிந்து இனி மேல் உபயோகமற்றவை என்று நான் நினைத்தேன்.

ஆனால் பாட்டி காய்ந்து போன மலர்களையெல்லாம் சேரித்து வைத்து, வசந்த காலம் ஆரம்பிக்கும்போது, தான் சேகரித்தவற்றைக் கொண்டு வந்து தோட்டத்தில் வரிசையாகப் புதைத்து விடுவார். காய்ந்து போன அந்த மலர்களுக்குள்ளிருந்த விதைகள் முளைத்துச் செடியாகி அழகிய மலர்களைத் தரும்.

அழிவுள்ளதாய் விதைக்கப்படும் எமது சரீரம் அழிவற்றதாய் எழுப்பப்படும் என்று பவுல் அப்போஸ்தவன் கூறுகிறார். எப்படி என்று அறியமாட்டோம். ஆனால் விசுவாசத்தோடு எதிர்பார்க்கிறோம். இந்த உடல் அழிந்துபோகும். ஆனால் அழிவற்ற நிரந்தரமான மகிமையோடுள்ள ஆவிக்குரிய சரீரமாக எழுப்பப்படுவோம் என்பது நிச்சயம்.

ஜெபம: அன்பான கடவுளே, கிறிஸ்துவுக்குள் புதுவாழ்வைத்தருவேன். என்ற வாக்குறுதியில் நாம் நம்பிக்கை வைக்கிறோம். ஆமென்
நாளுக்குரிய சிந்தனை: நம்முடைய தற்போதைய நிலைமை இன்னும் மேன்மையானதை நமக்குத்தரும்.
ஜெபத் தேவை: தோட்டக்காரர்களுக்காக.

# புகழும் மேன்மையுமா?

வாசிக்கவும். லூக்கா 18:9 -14

மனிதர் காணவேண்டுமென்று அவர்களுக்கு முன்பாக உங்கள் தர்மத்தைச் செய்யாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்.

மத்தேயு 6:1

கிறிஸ்துவின் காலத்தில் வாழ்ந்த சமயத் தலைவர்கள் செய்த ஒரு பிழை, தமக்குப் புகழையும் பெயரையும் தேடுவதில் ஆர்வம் காட்டியதேயாகும். மற்றவர்கள் கவனிக்கவேண்டுமென்பதற்காகத் தருமஞ் செய்தார்கள். உரத்த சத்தமாக ஜெபித்தார்கள். பெருமை யோடு ஆலயத்திற் பலியிட்டார்கள். ஆடம்பரமான ஆடைகளை அணிந்து தாம் சமயத்தலைவர்கள் என்று காட்டிக் கொண்டார்கள்.

நாங்களும் அதே காரியங்களைச் செய்கிறோமா? நாம் செய்யும் சில காரியங்களைக் கவனித்துப் பார்ப்பது நல்லது. உண்மையாகவே, சுய மேன்மைக்கு ஆசைப்படாமற்தானா எல்லாக் காரியங்களையும் செய்கிறோம்? நாங்கள் செய்யும் நல்ல காரியங்களுக்குப் பாராட்டுக்களை எதிர்பார்க்கிறோம். சில சமயங்களில் அவற்றைச் சொல்லியும் காட்டுகிறோம். நாங்கள் சுய விருப்பத்தில் செய்யும் காரியங்களும் இப்படிப்பட்டவைதானா? நாம் செய்யும் உதவிகளை உலகம் அறிய வேண்டுமா?

நாம் செய்யும் நல்ல காரியங்கள் விளம்பரமின்றிச் செய்யப்படவேண்டு மென்பது தான் கிறிஸ்துவின் விருப்பமாகும். நன்மை செய்யவேண்டு மென்பதற்காகவே நன்மை செய்ய வேண்டும். நாம் இரகசியமாகச் செய்யும் நல்ல காரியங்களைக் கடவுள் காண்கிறார். அதுவே நமக்கு வேண்டிய வெகுமதி.

ஜெபம்: அன்பான கடவுளே, எங்கள் சுயநலத்தை எங்களுக்கு மன்னியும். நீர் நன்மை செய்யும்படி சொன்னபடியினால் நாங்கள் செய்ய எங்களை வழிநடத்தும். ஆமென்

நாளுக்குரிய சிந்தனை: நன்மையைச் செய்து அதை இரகசியமாக்க வைத்திருக்கவும்.

ஜெபத் தேவை: புகழை விரும்புபவர்களுக்காக.

# வாழ்வை மாற்றும் ஒரு நடவடிக்கை

வாசிக்கவும். சங்கீதம் 119:129-136

உம்முடைய வசனம் என் கால்களுக்குத் தீபமாயும் என் பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது.

சங் 119:105

நான் ஒரு கிறிஸ்தவள் என்று என்னைப் பற்றி நான் நினைத்துக் கொண்டிருந்தேன். கிறிஸ்தவ குடும்பத்தில் வளர்ந்தேன். ஆலயத்திற்குத் தவறாமற் சென்றேன். கிறிஸ்து எனது இரட்சகர் என்பதை ஏற்றுக்கொண்டன். ஆனால் வேதத்தை முழுவதும் வாசித்ததில்லை. எப்போதாவது எடுத்து ஒரு பகுதியை வாசிப்பதோடு சரி.

நான் அண்மையில் வேலையிலிருந்து ஓய்வு பெற்றபின் உலக சரித்திரத்தையும், புவியியலையும் பற்றிப் படிக்க ஆரம்பித்தேன். அவற்றைப் படித்துக் கொண்டிருந்தபோது, வேதாகமத்தைப் படிக்கும் படி ஏவப்பட்டேன்.யாரோ அன்பளிப்பாகத் தந்திருந்த வேத விளக்கத்துடன் கூடிய வேதாகமத்தை எடுத்து, வாசிக்கத் தொடங்கினேன். என் கண்கள் திறக்கப்பட்டு என்னைப்பற்றிய உண்மையான நிலையை நான் அறிந்து கொண்டேன். நான் ஆலயத்திற்கு ஒழுங்காகச் சென்றாலும் முழுவதுமாக என்னை நான் ஆண்டவரிடத்தில் ஒப்புக் கொடுக்கவில்லை என்பதை உணர்ந்தேன். வேலை, பணம், பூரணத்துவம் ஆகிய விக்கிரகங்களை வைத்திருந்தேன். ஆனால் அவை விக்கிரகங்கள் என்பதை அறியாதிருந்தேன். எனது பழைய பாவங்களின் குற்ற உணர்ச்சி இன்னமும் என்னைத் துன்பப்படுத்துவதை உணர்ந்தேன்.

வேதப்படிப்பு எனக்குப் பெலனையும், விளக்கத்தையும், சமாதானத்தையும் தந்திருக்கிறது. ஒருவன் கிறிஸ்தவனானால் அவனது வாழ்வில் கிறிஸ்து மையமாக இருக்கவேண்டும் என்பதை உணர்ந்தேன். வேத வாசிப்பு எனது வாழ்க்கையை மாற்றும் நடவடிக்கையாக இருந்தது. வேதமே எனது நம்பிக்கையும் மீட்புமாயிருக்கிறது. தினமும் அது என்னை வழிநடத்துகிறது.

ஜெபம்: அன்பான ஆண்டவரே, வேதத்தினூடாக நீர் எங்களுடன் பேசுவதற்காக நன்றி. வேதத்தைத் தினமும் வாசித்து, எங்களுக்குத் தேவையான வழிநடத்தலைப் பெற்றுக் கொள்ளத்தக்க ஞானத்தை எங்களுக்குத் தாரும். ஆமென்

நாளுக்குரிய சிந்தனை: என்னை முற்றுமாகக் கடவுளிடம் ஒப்புக் கொடுப்பதற்குத் தடையாக இருப்பது எது?

ஜெபத் தேவை: வேதாகமம் இல்லாதவர்களுக்காக.

# பயப்படத் தேவையில்லை

வாசிக்கவும். ஏசாயா 41:1-13

நீ பயப்படாதே, நான் உன்னுடனே இருக்கிறேன்; திகையாதே, நான் உன்தேவன்; நான் உன்னைப் பலப்படுத்தி உனக்கு உதவி செய்வேன்; என் நீதியின் வலது கரத்தினால் உன்னைத் தாங்குவேன்.

ஏசாயா 41:10

நானும் எனது நான்கு பிள்ளைகளும் கனடாவிலிருந்த என் கணவருடன் சேர்ந்து கொள்வதற்காக, இங்கிலாந்திலிருந்து, கனடாவிற்குச் சென்றோம். நாங்கள் போய் இறங்கியவுடன், என் கணவர் தான் வேறொரு பெண்ணுடன் வாழ்வதாகவும், எங்களைவிட்டுப் பிரிய விரும்புவதாகவும் கூறினார்.

நான் அண்மையிற்தான் கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டவள். கடவுள் எப்படியும் என் கணவர் மனதை மாற்றுவார் என்று விசுவாசித்தேன். எனது நண்பர்களில் நான்கு பேர் எனக்கு ஆறுதல் கூறினார்கள். அவர்கள் நான்கு பேரும் வெவ்வேறு சமயங்களில் ஒரே வாக்கியத்தைத் தான் கூறினர்கள். ''பயப்படாதே, நான் உன்னுடனே இருக்கிறேன்; திகையாதே...'' (ஏசா 41:10) நான் என் கணவருடன் பேசினேன். நான் புதிதாகக் கண்டுகொண்ட கடவுளைப் பற்றிக் கூறினேன். ஆலயத்திற்கு வரும்படி அழைத்தேன். வந்தார். மனம் மாறுவார் என்று நம்பினேன். ஆனால் நம்பியது நடைபெறவில்லை.

''ஆண்டவரே, நீர் வாக்களித்திருக்கிறீரே,'' என்று அழுதேன். நான் திரும்பவும் வேதத்தை எடுத்து வாசித்தேன். என் கணவரைப் பறறி எந்த வாக்குறுதியும் அதிற் தரப்படவில்லை. என்னுடனே இருந்து என்னைப் பலப்படுத்துவதாகத்தான் வாக்குப் பண்ணியிருக்கிறார். அது எனக்குப்போதும் நான் ஒன்றுக்கும் அஞ்சமாட்டேன்.

**ஜெபம்:** அன்பான கடவுளே, எமது வாழ்க்கையில் உமது பிரசன்னம் இருப்பதற்காக நன்றி. உமது வார்த்தைகள் உண்மையானவை. எந்தக் கஷ்டம் வந்தாலும் நீர் உதவுவீர் என்ற நம்பிக்கை எமக்குண்டு. ஆமென்

**நாளுக்குரிய சிந்தனை:** உங்கள் கஷ்டமான நேரங்களில் கடவுள் எப்படி உங்களுக்கு உதவி செய்தார்.

**ஜெபத் தேவை:** விவாகரத்துப் பெறும் குடும்பங்களுக்காக.

# நியாயந்தீர்க்கப்பட்டு மன்னிக்கப்பட்டேன்.

வாசிக்கவும். மத்தேயு 5: 21-24

உன் சகோதரனோடு ஒப்புரவாகு.

மத் 5:24

என் நண்பன் என்னிடம் வந்து என்னை மன்னித்து விட்டதாகக் கூறினான். எதற்காக என்னை மன்னிக்க வேண்டும் என்று யோசித்துப் பார்த்தேன். என்னை மன்னிக்கவேண்டுமாயிருந்தால் நான் நியாயந் தீர்க்கப்பட்டிருக்க வேண்டும். ''இதோ பார். எனக்குத் தெரியாத பிரச்சனை ஏதாவதிருந்தால் அதை நீயே தீர்த்துக் கொள்.'' என்று சொல்ல நினைத்தேன். ஆனால், அவன் எனது நீண்டநாள் நண்பனான படியால் அப்படிச் சொல்ல மனம் வரவில்லை. ஆகையால் இருவரும் பேசுவதற்கு உட்கார்ந்தோம்.

அண்மைக்காலமாக எங்களுக்கிடையில் உறவு சரியாக இருக்கவில்லை. என்னை அறியாமல் நான் சொன்ன ஒரு வாக்கியம் என் நண்பனின் மனதைப் புண்படுத்தியிருந்தது. ஆனால் காலம் அதை மாற்றிவிட்டிருந்தது. அதனால் தான் என்னை மன்னித்ததாகக் கூறினான். அத்துடன், தான் என்னை வெறுத்ததற்காகத் தன்னை மன்னிக்கும்படி கேட்டுக் கொண்டான். அவன் சொன்னபடியினால் நான் என் பிழையை உணர்ந்தேன். இல்லாவிட்டால் அவன் தந்த மன்னிப்பை என்னால் ஏற்றுக்கொண்டிருக்க முடியாது. எமது நட்பு பழைய நிலைக்குத் திரும்பியது.

மன்னிக்கவும் வேண்டும், மன்னிப்பைப் பெறவும் வேண்டும். அதைத்தான் கடவுள் எதிர்பார்க்கிறார். கடவுளுடனான எமது தொடர்பும் சீராக்கப் பட்டது.

ஜெபம்: அன்பான கடவுளே, நாங்கள் பிழைசெய்தபோது, அதை உணரவும், மன்னிக்கப்படும்போது அதை ஏற்றுக் கொள்ளவும் கிருபைதாரும். இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறோம். ஆமென்

நாளுக்குரிய சிந்தனை: மன்னிப்பதும் மன்னிப்பைப்பெறுவதும் கடினமானதாகத் தோன்றினாலும் அதைச் செய்யலாம்.

ஜெபத் தேவை: மனஸ்தாபமுற்ற நண்பர்களுக்காக.

## பிரகாசிக்கும் ஒளி

வாசிக்கவும் சங்கீதம் 42: 1-11

என் முகத்திற்கு இரட்சிப்பும் என் தேவனுமாயிருக்கிறவரை நான் இன்னும் துதிப்பேன்.

சங் 41:11

நானும் எனது மகளும் எங்கள் தோட்டத்தில் வேலை செய்து கொண்டிருந்தோம். நிறையச் செடிகள் பூத்திருந்தன. இலேசாகப் பனி பெய்து கொண்டிருந்தது. சூரிய ஒளி பனியினூடாக வந்து தோட்டத்தை அழகுபடுத்தியது. அந்த அழகை ரசித்தவாறு வேலை செய்து கொண்டிருந்தோம்.

சிறிது நேரத்தின் பின் எனது மகள் ''எனக்குச் சூரிய காந்திப் பூ மிகவும் பிடிக்கும்'' என்றாள்.
''ஏன்'' என்று கேட்டேன்.

''ஏனென்றால் அவை மாறாத விசுவாசமுள்ளவை. காலநிலை எப்படி இருந்தபோதும், சூரியனை நோக்கியபடியே இருக்கின்றன.'' என்றாள். தொடர்ந்து வேலையைச் செய்தோம். ஆனால் நான் என்னைப் பற்றிச் சிந்தித்தேன். எனது வாழ்விலும் கடவுள் கிரியை செய்யவேண்டு மென்பதற்காக, அவரில் விசுவாசமாயிருப்பதற்கு எவ்வளவு கஷ்டப்படுகிறேன். நானும் அந்தச் சூரியகாந்திப் பூவைப் போல் பொறுமையாகவும், விசுவாசமுள்ளவளாக இருக்கவேண்டுமென்று தீர்மானித்தேன். பனி விலகும். சூரிய ஒளி பிரகாசிக்கும். எனது கவலை, பெருமை, நேரமில்லை என்று சொல்வது ஆகிய பனி கடவுளின் ஒளியை மறைக்கின்றன. நான் அமர்ந்திருந்து மனதை ஒருமுகப்படுத்தி, இந்தப் பனியை அகலச் செய்து, கடவுளின் பிரசன்னத்தை உணர்ந்து, பிரகாசிக்கும் அவரது ஒளியை எனதாகக்கிக் கொள்கிறேன். எனது தினசரி வாழ்வில் கடவுளின் ஒளி என்னைச் சுற்றிப் பிரகாசிப்பதை உணர்கிறேன்.

ஜெபம்: அன்பான கடவுளே, இவ்வுலகில் உமது பிரசன்னம் எப்போதும் இருக்கிறதற்காக நன்றி. நாங்கள் அமர்ந்திருந்து, எமது தினசரிக் கருமங்களிலும், எம்மைச் சுற்றியிருப்போரிலும் உம்மைக் காண உதவி செய்யும். ஆமென்

நாளுக்குரிய சிந்தனை: கடவுளை நோக்கிப் பார்த்து மகிழ்ச்சியாயிருங்கள்.

ஜெபத் தேவை: வாலிபப் பிள்ளைகளின் தாய்மாருக்காக.

## நன்றி சொல்லுங்கள்.

வாசிக்கவும். லூக்கா 17:11-19

அவர்களில் ஒருவன் தான் சுகமானதைக் கண்டு, திரும்பி வந்து, உரத்த குரலில் தேவனைத் துதித்து...

லூக்கா 17:15

எங்கள் கிராமத்தில் ஒரு வயது சென்ற விதவை இருந்தார். கிராமத்தினூடாகப் பிரயாணஞ் செய்பவர்களுக்குத் தேவைப்படும் போது தங்குமிடமும் உணவும் இலவசமாகக் கொடுப்பார். பல வருடங்களாக அவர் இச்சேவையைச் செய்து வந்தபோதும் ஒருவராவது ஒரு கடிதம் எழுதி நன்றி கூறவில்லை.

நாங்கள் மற்றவர்களிடமிருந்தும் விசேஷமாகக் கடவுளிடமிருந்தும், உதவிகளையும் ஆதரவையும் எதிர்பார்க்கிறோம். வியாதி, பசி, துன்பம் தேவை ஆகியவை ஏற்படும் போது யாராவது உதவி செய்யவேண்டு மென்று எதிர்பார்க்கிறோம். உதவிகளைப் பெற்றுக் கொள்கிறோம். அந்தப் பிரயாணிகளைப் போல், நமக்கு உதவியவர்களுக்கு நன்றி சொல்ல மறந்து விடுகிறோம். லூக்கா சுவிசேஷத்திற் சொல்லப் பட்டிருக்கும் இந்தச் சம்பவம் இதற்கு நல்ல உதாரணமாகும். இயேசு பத்துப் பேருக்குச் சுகங்கொடுத்தார். ஆனால் நன்றி சொல்லவும் கடவுளைத் துதிக்கவும் ஒரு ஆள் மட்டும் தான் திரும்பி வந்தான்.

இந்தக் கதை எங்கள் ஒவ்வொருவருக்கும் பொருந்தும். ஒவ்வொரு நாளும் கஷ்டங்கள், ஆபத்துக்கள், மரணம் ஆகியவற்றிலிருந்து கடவுள் நம்மைப் பாதுகாத்திருப்பதை நாம் ஞாபகப்படுத்தலாம். ஒவ்வொரு நாளும் கடவுளைத் துதிக்கவும், நன்றி செலுத்தவும் எத்தனையோ சந்தர்ப்பங்கள் நமக்கு ஏற்படலாம். அவற்றை நாம் தவற விடக் கூடாது.

நன்றியும் துதியும் எப்போதும் எமது வாயில் இருக்க வேண்டும்.

ஜெபம்: அன்பான கடவுளே, உமது உதவிகளையும் கிருபையையும் நாம் மறவாதிருக்க உதவி செய்யும். தினமும் நீர் எங்களுக்குத் தருகிற ஆசீர்வாதங்களுக்காக உமக்கு நன்றி சொல்ல மறவாதிருக்கக் கிருபை தாரும். இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறோம். ஆமென்

நாளுக்குரிய சிந்தனை: இன்று எதற்காக நன்றி செலுத்த வேண்டும்?

ஜெபத் தேவை: நான் நன்றி சொல்ல வேண்டிய ஒருவருக்காக.

## ஆலோசனை நேரம்

வாசிக்கவும். யோவான் 20: 19-22

இயேசு தம்முடைய சீடர்களை நோக்கி, ''அறுப்பு மிகுதி, தொழிலாளிகளோ கொஞ்சம்; ஆதலால், அறுப்புக்கு எசமான் தமது அறுப்புக்கு வேலையாட்களை அனுப்பும்படி அவரை நோக்கி மன்றாடுங்கள்.
மத்தேயு 9:37-38

எனது மகனுடைய பாடசாலையில் புனவாழ்வுக்கான உதவிகள் சம்பந்தமான கருத்துப் பரிமாறல் ஒன்று நடைபெற்றது. அங்கு பேசிய வழிகாட்டி ஆலோசகர் ஒருவர், தனது ஆலோசனை கூறி வழிகாட்டும் திட்டத்திற்குத் தகுதியுள்ள யாராவது வந்து உதவி செய்யும் படி மிக உருக்கமான ஒரு வேண்டுகோளைக் கொடுத்தார். நான் மனதிற்குள் எனக்கு இருக்கும் வேலைகளை நினைத்துப்பார்த்து, புதிய எந்த வேலையையும் பொறுப்பெடுக்க நேரமில்லையென்று தீர்மானித்தேன். உடனே ஆவியானவர். ''உனக்கு நேரம் இருக்கிறது; விருப்பம்தான் இல்லை.'' என்று காதிற்குள் சொல்வது கேட்டது. விருப்பம் தான் எனது பிரச்சனையாக இருந்தது.

ஆயினும் சில வாரங்களின் பின்னர்தான் உதவி செய்வதாக ஒப்புக் கொண்டேன். ஒருவாலிபப் பெண்ணிற்கு ஆலோசனை கூறும் பணிதரப் பட்டது. அந்தப் பெண்ணுடன் பேசிக் கொண்டிருந்தபோது, கோபம், தாழ்வு மனப்பான்மை, பயம் ஆகியவை அவளுக்கு இருந்ததைக் காணக் கூடியதாக இருந்தது. பிரச்சனைகளை என்னாற் தீர்க்க முடியவில்லை. ஆனால் அன்பையும், நம்பிக்கையையும், உற்சாகத்தை யும் என்னாற் கொடுக்கக் கூடியதாக இருந்தது.

அந்தப் பெண்ணின் வாழ்வில் மாற்றத்தை ஏற்படுத்தினேனோ தெரியாது. ஆனால் ஆவியானவரின் தூண்டுதலுக்குக் கீழ்ப்படிந்து கடவுளின் அன்பை வெளிப்படுத்தக் கூடியதாக இருந்தது.

ஜெபம்: தகப்பனே, எமது சமுதாயத்தில் வேதனையோடிருப்பவர் களுக்கு உமது சமாதானத்தையும், அன்பையும் வெளிக்காட்ட உதவும். ஆமென்

நாளுக்குரிய சிந்தனை: எமது சமுதாயத்தில் நாம் கிறிஸ்துவின் தூதுவர்களாகலாம்.

ஜெபத் தேவை: பாடசாலை ஆலோசகர்கள்.

## நம்பிக்கையும் துணிவும்

வாசிக்கவும். ரோமர் 4:6-25

எனவே வளமான பயனைக் கொண்டுவரும உங்கள் துணிவை விட்டுவிடாதிருங்கள்.

எபிரேயர் 10:35

ஒரு நாள் இரவு பதினொரு மணிக்கு புகையிரத நிலையத்தில், காத்து நின்றேன். அப்போது ஒலிபெருக்கியில், நான் காத்து நின்ற புகையிரதம் வரமாட்டாதெனவும், அசௌகரியத்திற்கு வருந்துவதாகவும் அறிவித்தனர்.

பிள்ளைகள் அழுதனர். பெரியவர்களுக்கு ஏமாற்றம். எத்தனையோ பேருக்கு முக்கிய வேலைகள் தடைப்பட்டிருக்கும். பலருக்கு அந்த நேரத்திற் திரும்ப வீட்டிற்கும் போக முடியாத நிலை. வெறுமனே, ''அசௌகரியத்திற்கு வருந்துகிறோம்.'' என்று கூறிவிட்டால் எல்லாம் சரியாகிவிடாது.

நான் ஒரு இடத்தில் அமர்ந்திருந்து வேதத்தை எடுத்து வாசிக்க ஆரம்பித்தேன். அப்பொழுது, ஒரு வயது சென்ற தாயார் அந்த இடத்திற்கு வந்து என் அருகில் அமர்ந்து ''கவலைப்படாதே'' என்றார். அவர் தொடந்து எனது பயணத்தைத் தொடர்வதற்கு வேறு என்ன வழிகள் உண்டு என்பதை விபரித்தார்.

அநேகந் தடைகள் எமது பிரச்சனைகள் பெரிது போலத் தோன்றுவதனால், அவற்றைத் தீர்க்கும் வழிகளைக் கவனியாது, விட்டு விடுகிறோம். அந்த இடத்தில் அறிமுகமில்லாத ஒருவர் எனது பிரச்சனையைத் தீர்ப்பதற்கு வழி காட்டினார். பிரச்சனைகள் நமது விசுவாசத்திற்கு இடைஞ்சலை ஏற்படுத்தும்போது, எல்லாவற்றையும் அவர் கையில் ஒப்புவித்து விட்டு நம்பிக்கையோடிருந்தால், அவர் எல்லாவற்றையும் நன்மையாக முடிப்பார்.

ஜெபம்: ஆண்டவரே, பிரச்சனைகளோடு இருப்பவர்களுக்காக ஜெபிக்கிறோம். அவர்கள் உம்முடைய வழிநடத்தலுக்காக, உம்மண்டை நம்பிக்கையோடும் துணிவோடும் வரவேண்டுமென்று ஜெபிக்கிறோம். ஆமென்

நாளுக்குரிய சிந்தனை: கடவுள் பக்கம் திரும்பினால், புதிய வழிகளைக் காணும்படியாக எங்கள் கண்கள் திறக்கப்படும்.

ஜெபத் தேவை: பிரயாணிகள்

# குழப்பமான குடும்பங்கள்

வாசிக்கவும். ஆதியாகமம் 37:4, 45:1-15

கூடுமானால் உங்களால் முடிந்த வரை அனைத்து மனிதரோடும் சமாதானமாக வாழுங்கள்.

ரோமர் 12:18

கடந்த இரவு, எனது குடும்ப அங்கத்தவர்களில், அநேகமானோர் இரவு உணவிற்காக எங்கள் வீட்டில் கூடியிருந்தனர். பலவிதமான உணவு வகைகள் வைக்கப்பட்டிருந்தன. எனது தாயார் அவவின் கணவர், பல பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், ஒரு பூட்டப்பிள்ளை உட்படப் பலர் அங்கு இருந்தனர். சத்தம் அதிகமாக இருந்தது. ஆனால் எல்லாரும் மகிழ்ச்சியாக இருந்தனர். உணவு உண்டபின் ஆங்காங்கே அமர்ந்து பேசிச் சிரித்தனர்.

எல்லாரும் ஓரிடத்தில் ஒன்றாகக் கூடியிருப்பது ஒரு அற்புதம் என்றே கூறவேண்டும். பல குடும்பங்களிற் போன்று, எங்கள் குடும்பத்திலும், விவாகரத்துக்கள், சொத்துரிமைச் சண்டைகள், ஏமாற்றுதல், பொய் சொல்லுதல், திருட்டு ஆகிய எல்லாம் நடைபெற்றுள்ளது. ஆனால் கடவுளுடைய உதவியோடு, எல்லா வேற்றுமைகளையும் மேற்கொள்ள முடிந்தது.

சமாதானம் பண்ணுகிறவர்களாயிருங்கள். என்று வேதம் கூறுகிறது. வம்பு வார்த்தைகளை விட்டு விடுங்கள். (கொலோ 3 : 8) கோபத்தை அடக்குங்கள். (ரோமர் 12:19) தீமைக்கு நன்மை செய்யுங்கள். (ரோமர் 12:17, 21) குடும்பங்களிற் சமாதானத்திற்காக நாம் உழைப்பது கடவுள் நம் மூலம கிரியை செய்வதற்கு இடமளிப்பதாகும்.

குடும்பங்ளிற் குழப்பமான நிலை உருவாகலாம். வேதாகமத்திலும் இது காட்டப்பட்டுள்ளது. ஆனால் எல்லா விதத் தீமையான காரியங்களினூடாகவும் கடவுள் கிரியை செய்கிறார். எனது குழப்பமான குடும்பத்திலும் கடவுள் கிரியை செய்த படியால் சமாதானம் நிலவுகிறது.

ஜெபம்: ஆண்டவரே, நீர் தந்திருக்கிற குடும்பங்களுக்காக நன்றி. சுவாமி உம்முடைய அன்பை மற்றவர்களுக்குக் காட்டுவதன் மூலம் சமாதானத்தை ஏற்படுத்த உதவி செய்யும். ஆமென்

நாளுக்குரிய சிந்தனை: சமாதானம் பண்ணும்படி கடவுள் எங்களை அழைக்கிறார். முக்கியமாக எங்கள் குடும்பங்களில்.

ஜெபத் தேவை: குழப்பங்களுள்ள குடும்பங்களுக்காக.

## உலகம் முழுவதற்கும்

வாசிக்கவும்.அப்போஸ்தவர் 10:9-23, 30-35

ஆகையால் நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி...
உலகத்தின் முடிவு பரியந்தம் சகல நாட்களிலும்
நான் உங்களுடனே கூட இருக்கிறேன். என்றார்.

மத்தேயு 28:19-20

சிறு குழுக்களுக்குத் தலைமை தாங்கி, வெளி நாடுகளுக்குச் சென்று, குறுகிய காலத்திற்கு நற்செய்தி அறிவிக்கும்படி எனக்கு இருந்த அழைப்பைச் செயற்படுத்துவது இலகுவான காரியமாக இருக்கவில்லை. சபையிலும், சமூகத்திலும் எதிர்ப்பு இருந்தது. உள்ளூரில் நற்செய்திப் பணி செய்யப்படவேண்டும் என்று பலர் கூறினார்கள். முற்றிலும் மாறுபட்ட சமுதாயத்தினருக்கும் நற்செய்தி அறிவிக்கப்பட வேண்டும் என்பதைப் பலர் விளங்கிக் கொள்வதில்லை. சபைக்குள்ளே பிரச்சனைகள் எழாமல் இருப்பதற்காக நான் உள்ளூர் ஊழியத்தில் ஈடுபடலானேன். சர்வதேச ஊழியத்தில் ஆர்வம் குறைகிறது என்பது மனவருத்தத்திற்குரியது. இயேசு ''போங்கள்'' என்று உறுதியான கட்டளையைக் கொடுத்திருக்கிறார். பேதுருவும் தனது மக்கள் என்ற எல்லையைக் கடந்துபோவதற்கு யோசித்தார். ஆவியாவரினால் அவருக்குக் கொடுக்கப்பட்ட தரிசனத்தின் பின்னர் தான் அவர் புற ஜாதியாருக்கு நற்செய்தி செல்லப்புறப்பட்டார். நமது சமுதாயத்திற்கும், அதற்கு அப்பால உலகெங்கும் போகும்படி தான் வேதம் கூறுகிறது.

மத்தேயு 28இல் இயேசுவால் கொடுக்கப்பட்டுள்ள மிகப்பெரிய கட்டளையும், தான் உடன் இருப்பேன் என்ற வாக்குறுதியும் நாம் வெளியே சென்று நற்செய்தியை அறிவிப்பதற்கு நமக்கு வல்லமையைத் தருகிறது.

ஜெபம்: ஆண்டவரே, சாதி பேதங்களுக்கு அப்பாற் பார்க்கக்கூடிய அன்பின் அபிஷேகத்தை எமக்குத் தாரும். எந்த இடத்திற்கு அழைக்கப்படுகிறோமோ அந்த இடத்திற்குப் போக வல்லமை தாரும். ஆமென்

நாளுக்குரிய சிந்தனை: ஜெபமே மற்றவர்களையும் ஊழியத்தையும் பற்றிய கரிசனையை நமக்குத்தர வல்லது.

ஜெபத் தேவை: தூதுப் பணியாளர்கட்காக.

## கேட்க விருப்பம் இல்லை

வாசிக்கவும். எபேசியர் 1:3-14

அவருடைய கிருபையின் ஐசுவரியத்தின் படியே இவருடைய இரத்தத்தினாலே பாவமன்னிப்பாகிய மீட்பு இவருக்குள் நமக்கு உண்டாயிருக்கிறது. அந்தக் கிருபையை அவர் சகல ஞானத்தோடும் புத்தியோடும் எங்களிடத்தில் பெருகப் பண்ணினார்.

எபேசியர் 1:7-8

கலாசாலையை விட்டு வெளியேறி அடுத்த சில மாதங்கள் தான் நான் வாழ்க்கையில் மிகவும் கஷ்டப்பட்ட காலமாகும். வேலை கிடைக்கவில்லை. எழுத்தாளனாக வேண்டுமென்ற முயற்சியில் ஏற்பட்ட தோல்வி, வெட்கம், கையில் இருந்த பணமும் முடிந்த நிலை, என்ன செய்வதென்று தெரியவில்லை. எனது நிலை, எனது பெற்றோரை நோக்கித் திரும்பச் செய்தது. வெட்கத்தையும் வேதனையையும் ஒருபக்கம் ஒதுக்கி வைத்துவிட்டு, தொலைபேசி மூலம் என் பெற்றோருக்கு நிலைமையை விளக்கினேன்.

சில சமயங்களில் இதே மாதிரியாகத்தான் வெட்கத்தோடு கடவுளிடம் போகிறோம். கடவுளுக்கு நாம் கீழ்ப்படியாமல் அவருடைய நாமத்தைக் கனவீனப்படுத்தகிய காரணங்களினால் கடவுளை விட்டுத் தூரம் போகப் பார்க்கிறோம். பயத்தினால் கடவுளிடம் சென்று உதவி கேட்கத் தயங்குகின்றோம்.

அப்போஸ்தலனாகிய பவுல், கடவுளுடைய கிருபையைப் பற்றிக் கூறும்போது, அவருடைய கிருபை ஐசுவரியமானது. அதை அவர் பெருகப் பண்ணுகிறார். என்று கூறுகிறார். நாம் எதிர்பார்க்காமல் இருக்கும்போதே அவருடைய கிருபை நமக்கு இலவசமாகத் தரப்படுகிறது. நாம் எவ்வளவு விரோதமாக நடந்திருந்தாலும் அவருடைய கிருபை நமக்குக் கிடைப்பதற்கு ஒரு தடையும் இருக்காது.

எனது பணக் கஷ்டத்திலிருந்து என் பெற்றோர் என்னை மீட்டபோது நான் பெரிதும் ஆறுதலடைந்தேன். ஆனால் கடவுள் நமது ஆத்துமாவை மீட்டதுதான் மிகவும் முக்கியமானது.

ஜெபம்: அன்பான ஆண்டவரே, உமது அளவில்லா அன்புக்காக நன்றி. நாம் எதிர்கொள்ளும் எந்த நிலையிலும் உம்மை விசுவாசிக்க எமக்குக் கற்றுத் தாரும். ஆமென்

நாளுக்குரிய சிந்தனை: எனக்குத் தேவையானதைக் கடவுளிடம் கேட்பதற்கு என்னைத் தடுப்பது எது?

ஜெபத் தேவை: அண்மையில் வெளியேறிய பட்டதாரிகளுக்காக.

# மழைக்குப் பிறகு

வாசிக்கவும். கொலோசெயர் 3:1-10

எனவே உங்கள் உலகப்பிரகாரமான... ஆகிய இவைகளை மரணத்துக்குள்ளாக்குங்கள்.

கொலோசெயர் 3:5

கடும் மழைபெய்து ஓய்ந்தவுடன் நானும் எனது மனைவியும் எங்கள் தோட்டத்தைச் சுற்றிப்பார்த்தோம். ''இந்த மழை அதிகம் கற்களைக் கொண்டு வந்திருக்கிறது.'' என்றாள் என்மனைவி. ''மழை கொண்டு வரவில்லை. அவை இங்கேதான் இருந்தன. அவற்றை மூடியிருந்த மணல் மழை நீரினால அகற்றப்பட்டபடியால் அவை வெளியே தெரிகின்றன அவ்வளவு தான்'' என்றேன் நான்.

அந்தக் கற்களைப் போன்றவைதாம் நமது தீய குணங்களும். எமது விசுவாச வாழ்க்கை, ஜெபம், வேத வாசிப்பு, தியானம் ஆகியவற்றினால் எமது தீய பழக்கங்களை நாம் காணக்கூடியதாக இருக்கின்றது. கற்களைப் பொறுக்கி எடுப்பது கஷ்டமான காரியமாகத் தோன்றலாம். ஆனால் அவை அகற்றப்படாவிட்டால் நிலத்தில் பூரண பயனை நாம் அடைய முடியாது. நமது பாவமான சிந்தனைகள், செயல்கள், பழக்கவழக்கங்கள் ஆகியவற்றை நம்மைவிட்டு அகற்றி விடவேண்டும். இதனால் கிறிஸ்தவ வாழ்க்கை மிகவும் கடினமானதாகத் தோன்றலாம். ஆனால் பாவத்தைக் களைவதனால் வரும் வாழ்க்கை மிகுந்த மகிழ்ச்சியைக் கொடுக்கும்.

அதற்கு நாம் செய்ய வேண்டியது ஒன்றே. கிறிஸ்துவை அறிவதில் முழு முயற்சியுடன் செயற்பட வேண்டும். அதனால் எமது விசுவாசம் பெருகும். பாவங்கள் அகலும். கிறிஸ்து நம்மில் வாழ்வார். இதுவே நற்செய்தி.

ஜெபம்: ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவே, எமது வாழ்வில் உம்மை வெளிப்படுத்தக்கூடிய ஞானத்தையும் பெலனையும் தாரும். ஆமென்

நாளுக்குரிய சிந்தனை: நாம் கிறிஸ்துவைப் பின்பற்றும் போது, நம்மில் மாற்றம் ஏற்படுகிறது.

ஜெபத் தேவை: பழையனவற்றிலிருந்து விடுபட விரும்புகிறவர்களுக்காக.

## கேட்பதற்கு ஆயத்தமாயிருத்தல்

வாசிக்கவும். சங்கீதம் 86:1-7

கர்த்தாவே என் ஜெபத்திற்குச் செவிகொடுத்து, என் வேண்டுதல்களின் குரலைக் கவனியும்.

சங் 86 : 6

எங்கள் ஆலயத்தில் ஒரு அழகான படம் தொங்கவிடப்பட்டிருந்தது. கடவுள் எப்படி எங்களிற் கரிசனையுள்ளவராயிருக்கிறார் என்பது சித்தரிக்கப்பட்டிருந்தது. என் அருகில் எனக்குத் தெரிந்த நேரத்தில் ஆலய வெளிப்புற அறையில் குழந்தைகள் இருக்கும் இடத்திலிருந்து ஒரு குழந்தையின் அழுகைச் சத்தம் கேட்டது. உடனே அந்தப் பெண், ''என் குழந்தை'' என்று சொல்லிக்கொண்டு எழுந்து ஓடினாள்.

அந்த இடத்தில் வேறு பிள்ளைகளும் இருக்கிறார்கள். ஆனால் இவளின் குழந்தையின் அழுகையென்று இவளுக்கு எப்படித் தெரியுமென்று சிந்தித்தேன்.ஆம் அது அவள் பெற்றெடுத்த குழந்தை. அந்தக் குழந்தையைப் பற்றிய சகல விபரங்களையும் அவள் அறிவாள். அந்தக் குழந்தையிடமிருந்து ஒரு சிறு சிணுங்கல் வந்தாலுங்கூட அவளால் அறிந்து கொள்ளமுடியும்.

அந்தத் தாயைப்போல் கடவுளும் நமது குரலைக் கேட்கிறார். ''கர்த்தருடைய கண்கள் நீதிமான்கள் மேல் கவனமாயிருக்கிறது. அவருடைய செவிகள், அவர்கள் ஜெபங்களைக் கேட்கின்றன. என்று 1பேதுரு 3:12 ல் கூறப்பட்டுள்ளது. எங்கள் வேதனையின் குரலைக் கடவுள் கேட்கிறார். ஒரு தாய் தன் குழந்தையின் குரலை அடையாளம் காண்பது போல், கடவுள் நம் ஒவ்வொருவருடைய அழைப்பையும் அறிவார் என்பதை நாம் நிச்சயமாக நம்பலாம்.

ஜெபம்: அன்பான கடவுளே, எங்கள் வேண்டுதல்களை நீர் கேட்பீர் என்ற நம்பிக்கையுடனும் துணிவுடனும் உம்மண்டை கொண்டுவருகிறோம். ஏற்றுக்கொள்ளும். வழிநடத்தும். ஆமென்

நாளுக்குரிய சிந்தனை: எமது அழுகையைக் கடவுள் கேட்டு எம்மிடம் வருகிறார்.

ஜெபத் தேவை: சிறு குழந்தைகளின் பெற்றோருக்காக.

## அமைதியாயிருங்கள்

வாசிக்கவும். மாற்கு 6:45-52

"திடன் கொள்ளுங்கள். நான்தான் பயப்படாதிருங்கள்." என்றார்.
மாற்கு 6:50

எனது மோட்டார் வாகனத்திலிருந்து விரைவாகக் கீழே இறங்கினேன். என்ன நடக்கிறதென்பதை உணரும் முன்பதாகவே வாசற்படியில் விழுந்துவிட்டேன். அசையமுடியவில்லை. வைத்தியசாலைக்குக் கொண்டுபோகப்பட்டேன். எனது வலது கால் எழும்பு முறிந்து விட்டிருந்தது.

ஜெபத்தில் கடவுளைத் தேடினேன். ஆயினும் எனது வேதனையும் நம்பிக்கையின்மையுமே தெரிந்தது. இந்த விபத்தில் எனது குடும்பத்தின் தினசரி வாழ்க்கையில் என்ன மாற்றங்களை ஏற்படுத்தப்போகிறதோ என்ற கவலை ஏற்பட்டது. என்னால் அமைதியாயிருக்க முடியவில்லை.

சத்திரசிகிச்சை அறைக்குள் கொண்டுபோகும்போது, ஜெபித்துக் கொண்டிருந்தேன். அங்கிருந்த ஒரு பெண், என் கைகளைப் பிடித்துக்கொண்டு, 'சிகிச்சை முடியும்வரை நான் உன் அருகில் இருப்பேன். அமைதியாக இரு," என்று கூறினாள். என்ன ஆச்சரியம். அவர்தான் மயக்க மருந்து கொடுப்பவர். எனது சபை அங்கத்தவர். கடவுள் அவர் மூலம் பேசினார் என்று உணர்ந்தேன். எனது சக விசுவாசி ஒருவர் மூலம் கடவுள் தமது அன்பைத் தந்து என்னை அமைதிப்படுத்தினார்.

ஜெபம்: ஆண்டவரே, நாங்கள் அறியாத நேரத்திலும் நீர் எங்கள் அருகில் இருப்பதற்காக நன்றி. இயேசு கற்பித்தபடியே ஜெபிக்கிறோம். ஆமென்.

நாளுக்குரிய சிந்தனை: "நான் உன்னுடனே இருக்கிறேன்." என்று, இன்று நான் யாருக்குச் சொல்ல வேண்டும்?

ஜெபத் தேவை: வைத்தியர்களுக்காக.

## அமைதியாயிருங்கள்

வாசிக்கவும். யாக்கோபு 5:13-16

விழிப்புடையவர்களாயிருந்து, துதிசெலுத்துதலுடன் இடைவிடாமல் ஜெபம் பண்ணுங்கள்.

கொலோசெயர் 4:2

நான் ஒரு ஜெப நிலையத்தின் முகாமையாளராக இருக்கின்றேன். ஊதியத்தை எதிர்பார்க்காத தொண்டர் நிலையம். ஜெப வேண்டுதல்கள், தபால், தொலைபேசி, மின்னஞ்சல் ஆகியவை மூலம் எமக்கு வரும். பயிற்றப்பட்ட எமது ஊழியர்கள் பலவிதமான சூழ்நிலைகளிலுமிருந்து அழைப்பவர்களுடன் ஜெபித்து ஆறுதல் கூறுவார்கள். உலகில் எந்தப் பாகத்தில் இருப்பவராயினும், மிகவும் கரிசனையோடும் விசுவாசத் துடனும் ஜெபிப்பதைப்பார்த்து நான் மிகவும் ஆச்சரியப்படுவேன்.

''கற்றினா'', புயல் ஏற்பட்டபோது, லூசியானா என்ற இடத்தில் இருந்த எங்கள் ஜெபக்குழு ஒன்றைப் பற்றி எனக்குக் கவலை ஏற்பட்டது. அவர்கள் இருந்த இடம் பெரிதும் பாதிக்கப்பட்ட இடமாக இருந்தது. பல நாட்கள் முயற்சி செய்தும் அவர்களுடன் தொடர்பை ஏற்படுத்த முடியவில்லை. மேலும் சிலநாட்கள் சென்றபின் அந்த ஜெபக்குழுவின் தலைவியிடமிருந்து தொலைபேசி அழைப்பு வந்தது. கடந்த 24 வருடங்களாகத் தான் செய்து வந்த ஜெப ஊழியத்தை ஆரம்பித்து விட்டதாகவும் ஜெப விண்ணங்களை ஏற்றுக்கொள்ள ஆயத்தமாக இருப்பதாகவும் தெரிவித்தார்.

அவ்வளவு அழிவின் மத்தியிலும், அந்தப் பெண்ணின் ஊழிய வாஞ்சையும், விசுவாசமும் அசைக்கப்படாமலே இருந்தது. தொடர்ந்து அவர் ஊழியத்தைச் செய்து வருகிறார். கடவுளுடைய ஒத்தாசையுடன் நானும் ஜெப ஊழியத்தைச் செய்து வருகிறேன்.

ஜெபம்: அன்பான ஆண்டவரே, எம்மைச் சுற்றியிருப்பவர்களுக்கு விசுவாசத்துடன் ஊழியஞ் செய்ய எமக்குக் கற்பித்தருளும். ஜெபத்தின் மூலம் உமது வல்லமையைத் தருவதற்காக நன்றி. ஆமென்.

நாளுக்குரிய சிந்தனை: நான் ஒரு சிறந்த சீடனாக இருக்க யாருடைய விசுவாசம் என்னைத் தூண்டுகிறது?

ஜெபத் தேவை: இயற்கை அனர்த்தங்களினாற் பாதிக்கப் பட்டோருக்காக.

## மன்னிக்கும் கடவுள்

வாசிக்கவும். 1 சாமுவேல் 18:29-29, 24:8-17

ஒருவனுக்கும் தீமைக்குத் தீமை செய்யாதிருங்கள்; அனைத்து மனிதருடைய பார்வையிலும் நேர்மையானவைளைச் செய்ய நாடுங்கள்.
ரோமர் 12:17

நாங்கள் ஆபிரிக்காவின் பழங்குடி மக்கள் கூட்டத்தைச் சேர்ந்தவர்கள். எனது சிநேகிதி சாராள், தனது மருமகன், விவசாயக் கல்லூரியிற் கற்பதற்காகத்தன்னால் இயன்ற எல்லா உதவிகளையுஞ் செய்தாள். கல்விக்கான முழுச் செலவையும் தானே ஏற்றுக்கொண்டாள். ஆனால் அவனது தாயார், சாராளுக்கெதிராகப் பொய்யான குற்றச் சாட்டுக்களை எங்கள் கிராமத்திற் பரப்பி, அவளுக்கு மனவேதனையை உண்டு பண்ணினாள். அது மட்டுமன்றி, எங்கள் முதியோர் கூட்டத்தின் மூலம் அவைள வெளியேற்றவும் முயற்சி செய்தாள்.

நான் சாராளிடம், ''உன் மருமகனின் முன்னேற்றத்திற்காக, எல்லாவற்றையும் மன்னித்து அவனுக்கு உதவியை தொடர்ந்து செய்'' என்று கூறினேன். அவளும் ''நான் மன்னிக்கிறேன். உதவியும் செய்கிறேன். யாருக்குத் தெரியும் எங்கள் கூட்டத்தினரின் முன்னேற்றம் அவன் கையில் இருக்கலாம்'' என்றாள்.

வருடங்கள் பத்து கடந்து விட்டது. இப்போ அவன் ஒரு சிறந்த விவசாயி. அவன் கூட்டத்தினரின் முன்னேற்றத்திற்குக் காரணமானவன். சாராளும் கூட்டத்திலிருந்து வெளியேற்றப்படாமல், விசுவாசமுள்ள ஒரு பெண்ணாக அந்தக் கூட்டத்தினரால் மதிக்கப்படும் நிலையிலிருக்கிறாள்.

ஜெபம்: ஆண்டவராகிய கிறிஸ்துவே, எங்களுக்காக மரித்து எங்களை மீட்டுக்கொண்டதற்காக நன்றி. மன்னிக்கவும். தீமைக்கு நன்மை செய்யவும் எம்மை வழிநடத்தவும். ஆமென்.

நாளுக்குரிய சிந்தனை: அன்பான ஒரு செயல், அநேகம் பேருடைய வாழ்க்கையை மாற்றியமைக்கும்.

ஜெபத் தேவை: கல்விக்காகப் பணத்தேவையோடிருப்போருக்காக.

## ஒரு மேய்ப்பனின் உள்ளம்

வாசிக்கவும். யோவான் 10: 1-10

நான் என்னுடையவைகளை அறிந்தும், என்னுடையவைகளால் அறியப்பட்டுமிருக்கிறேன்.

யோ 10:15

அந்தக் குட்டித்தாய்ச்சி ஆடு, குட்டி ஈனுவதற்காக மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தது. நான் அதற்கு உதவுவதற்காக அருகேபோன போது அது பயத்தினால் எழுந்து ஓடத்தொடங்கியது. அதைச் சமாதானப்படுத்துவதற்காகச் சில வார்த்தைகள் கூறினேன். ஆனால் அது அருகே வரவில்லை. நான் எனது கோலினால் அதை மடக்கிப் பிடித்தேன். மெதுவாக அதைப்படுக்கவைத்து தடவிக் கொடுத்தேன். அது திமிறியது. ஆனாலும் நான் விடவில்லை. செய்யவேண்டியதைச் செய்தேன். சிறிது நேரத்தில் இரு குட்டிகளை ஈன்றது.

அந்த ஆட்டைப் பற்றிச் சிந்தித்தேன். எனது உதவியில்லாமல் அது இறந்திருக்கலாம். ஆனால் அதைக் காப்பாற்றக்கூடிய ஒருவரிடமிருந்து விலகி ஓடியது. நாங்களும் அந்த ஆட்டைப் போல் எத்தனை முறை எங்கள் நிலைமையைப்பார்த்துப் பயந்து ஓடியிருக்கிறோம். நாங்கள் ஜெபிக்கிறோம். நாங்கள் விரும்பியபடி நிலைமை மாறாவிட்டால், எமது பயம் அதிகரிக்கின்றது. தடுமாற்றமடைகிறோம். அதன் பயனாகக் கடவுளைவிட்டு ஓடப்பார்க்கிறோம். கடவுள் எம்மைப்பிடித்து வைத்திருந்தாலும் திமிறிக்கொண்டு ஓடப்பார்க்கிறோம்.

எனது ஆட்டின் மேல் நான் கோபங்கொண்டேனா? இல்லை. அன்பும் அக்கறையுந்தான் இருந்தது. நல்ல மேய்ப்பானாகிய கிறிஸ்துவும் தன்னை நம்பும் படிதான் கூறுகிறார். அவரது அன்பு நமக்கு நிச்சயம் உண்டு.

ஜெபம்: பரலோக தந்தையே நல்ல மேய்ப்பரே, நீர் எல்லாவற்றையும் நன்மைக்காவே முடிக்கிறவர் என்பதை நம்ப எங்களை வழிநடத்தும். நீர் எப்போதும் எம் அருகில் இருப்பதற்காக நன்றி. ஆமென்.
நாளுக்குரிய சிந்தனை: நாங்கள் போவதற்குத் திமிறுகின்றபோதும் கடவுள் நம்மேல் அன்பாயிருக்கிறார்.
ஜெபத் தேவை: பண்ணையாட்களுக்காக.

## THE UPPER ROOM DAILY DEVOTIONAL GUIDE
### Subscriptions & Sponsorships

Name of the Person making the payment:Mr/ Mrs./ Miss / Rev.

..........................................................................................................................

Address where the UPPER ROOM should be posted:

..........................................................................................................................

..........................................................................................................................

Upper Room Family Reg. No: (if already a member) ..........................

Please find enclosed a Cheque / Money Order

No: ..............................for Rs. ........................................ being my annual subscription and sponsorships on behalf of the following :
(Please strike off what is inapplicable)

Name: ..................................................................................................

Address: ..............................................................................................

..........................................................................................................................

Name: ..................................................................................................

Address: ..............................................................................................

..........................................................................................................................

..................................                ..................................

Date                Signature

# மேல் அறை

மேல் அறை என்னும் இத்தியான வழிகாட்டி 44 மொழிகளில் வெளிப்படுகிறது. அத்துடன் சிங்கள மொழியிலும், முதன் முதலாகத் தமிழ் மொழியிலும் இம்முறை வெளிவருகிறது.

ஒவ்வொரு நாளுக்குரிய திருமுறைப் பகுதியும் சிறு தியானங்களும் இதில் எழுதப்படுத்தப்பட்டுள்ளது. இத் தியானங்கள் உண்மை நிகழ்வுகளுடன் கூடிய "மேல் அறை வீடு" அங்கத்தவர்களின் சொந்த அனுபவங்களாகும். அத்துடன் சிறு ஜெபமும், நாளுக்குரிய ஜெபமும் எழுதப்பட்டுள்ளது.

தற்சமயம் "மேலறை வீடு" பிரதி ஒன்றின் மிகக் குறைந்த விலை பின்வருமாறு:-

☐ இரு மாதங்களுக்குரிய தியான வழிகாட்டி ..... ரூபா 20/=
( வாங்கப்படும் 5 பிரதிகளுக்கு ஒரு பிரதி இலவசம்)
☐ ஒரு வருடத்திற்கு 6 பிரதிகள்
- கிறிஸ்தவ இலக்கிய சங்க (CLS)இல் – ரூபா 100/-
- தபால் மூலம்..... ரூபா 150/-

காசோலை அல்லது காசுக்கட்டளைகள் யாவும் சி.எல்.எஸ் (கிறிஸ்தவ இலக்கிய சங்கம்) வெள்ளவத்தை தபால் கந்தோர் என்ற முகவரிக்கு அனுப்பப்பட்ல் வேண்டும்.

மேல் அறை வீடு பிரதிகள் கிடைக்குமிடங்கள்:-

சி.எல்.எஸ் புத்தகசாலை, 60, காலி வீதி, வெள்ளவத்தை.
தொ.பே. இல 2589801

வெஸ்லி அச்சகம். இல.06. புகையிரத வீதி, கொள்ளுப்பிட்டி
தொ.பே. இல 2577463


ஜீவனமக புத்தகசாலை, பப்டிஸ்டு திருச்சபை. மொறட்டுவ
தொ.பே. இல 2647672

பிரக்ஞா புத்தகசாலை, 204, காலி வீதி, கொழும்பு 04
தொ.பே. இல 2581691

கத்தோலிக்க புத்தகசாலை, 159, ஓலகோட் மாவத்தை, கொழும்பு 11
தொ.பே. இல 2325500

சத்திய வசனம், 120, தர்மபால மாவத்தை, கொழும்பு 07
தொ.பே. இல 2698843

கோன புத்தகசாலை, 147, புனித மைக்கேல் வீதி, கொழும்பு 03
தொ.பே. இல 2422129



*Unity in His Cross* by Rhuani Rambukwelle
(Sri Lanka, contemporary)
© Asian Christian Art Association,
www.asianchristianart.com. No prints of cover art available from Upper Room Ministries®.